## மீண்டும்

# யாழ்ப்பாணம் எரிகிறது !



1981 - மே - 31 இரவு . யாழ் பொது நூலகம் - ஈழநாடு அலுவலகம் , பா. உ. வின் வீடு , த. வி. கூட்டணி அலுவலகம் ,நாச்சிமார் கோயில் - வீடுகள், பொது மார்கெட் , அநேக வர்த்தக நிலையங்கள் , மோட்டார் வாகனங்கள், யாழ்ப்பாணமே எரிகிறது ! . . . . கொலைகள் ! . . . . . . கொள்ளைகள் ! . . . . . . ஏன்? . . . . . . எப்படி நடந்தது இந்தப் பாதகம்? அரச பயங்கர வாதச் செயல்கள் அநேக படங்களுடன் விபரம் தருகிறது இந்நூல்.

'24 மணி நேரம்' ஆசிரியர்
நீல வண்ணன்

மீண்டும்

# யாழ்ப்பாணம் எரிகிறது!

'நீலவண்ணன்'

போட்டோக்கள்:
கே. வி. சாமி & ஏ. வி. எம்.

கமலம் வெளியீடு

அன்புள்ள வாசகருக்கு,
வணக்கம்

மறந்துவிடக் கூடிய விஷயமல்ல, 1977–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15–ம் திகதி இரவு தொடங்கிய இனக்கலவரம். ஈழத் தமிழகத்தில் இரத்தக் கறை படிந்த அந்த 24 மணி நேரத்தை நண்பர் 'நீலவண்ணன்' தொகுத்துத்தர, பரபரப்பான சூழ்நிலையில் அந்த நூலை வெளியிட்டேன். இரண்டே மாதத்துக்கிடையில் இரண்டு பதிப்புக்களைக் கண்டு, அது ஒரு சாதனையை ஏற்படுத்திற்று.

இதோ மீண்டும் ஒரு '24 மணி நேரம்' –

எந்த நிகழ்ச்சி மறுபடியும் இந்த மண்ணில் நிகழக் கூடாதென்று நினைத்தோமோ, அது மீண்டும் அசுரத்தனமாகத் தோன்றிவிட்டது !

கடதாசியும் அச்சுச் செலவுகளும் பலமடங்காகி விட்ட இன்றைய நிலையிலும் நூல் வெளியிடுவதா? .......

லாப நட்டச் சிந்தனையைப் பின்தள்ளிவிட்டு உணர்ச்சியும், ஆர்வமும், ஒரு கடமை உணர்வும் என்னை முன்தள்ள,

அதே நீலவண்ணன், 'இதோ எழுதி விட்டேன்' என்று உற்சாகம்தர, மிகவேகமாக வந்திருக்கிறது இந்த 'யாழ்ப்பாணம் எரிகிறது'.

இந்நூல் வெளியீட்டில் ஒத்துழைப்புத்தந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

*யாழ்ப்பாணம்*
*01.07.81*

தி. ச. வரதராசன்
பதிவாளர்

---


'யாழ்ப்பாணம் எரிகிறது'

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஜூலை, 1981 |
| இரண்டாம் பதிப்பு | : | ஆகஸ்ட், 1981 (வரதர் வெளியீடு) |
| மூன்றாம் பதிப்பு | : | மார்ச், 2003 (கமலம் பதிப்பகம்) |
| ஆக்கம் | : | "நீலவண்ணன்" |
| போட்டோக்கள் | : | கே. வி. சாமி & ஏ. வி. எம்., யாழ்ப்பாணம். |
| பதிப்பாளர் | : | கமலம் வெளியீடு, யாழ்ப்பாணம். |
| அச்சுப் பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்<br>*48 பீ, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13.*<br>*தொலைபேசி : 330195, 478133* |
| விற்பனையாளர்கள் | : | ஆனந்தா புத்தகசாலை<br>*226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*<br>ஸ்ரீலங்கா புத்தகசாலை<br>*கொழும்பு, யாழ்ப்பாணம்*<br>பூபாலசிங்கம் புத்தகசாலை<br>*கொழும்பு, யாழ்ப்பாணம்* |
| விலை | : | ரூபா 175/= |





ESPLANADE
PULLU KULAM
VATTA KULAM
New Post Office Site
Burial Ground
Slaughter House
Infectious Diseases Hospital
Causeway
Queen's House
Fort
Church
Club
Courts
Town Hall
Rest House
Police Station
MAIN STREET
ESPLANADE
FRONT
CHAPEL STREET
VEMBADI
Vembadi Girls' School
Lady of Refuge Church
HOSPITAL ROAD
VICTORIA ROAD
Hospital
Fish Market
Power House
Theatre
CHANNEL
BAZAAR NORTH
KALLU KULAM
POND
PANNAI ROAD
CIRCULAR ROAD
ROAD
POINT
ARIYAKA
Education Office
போலீஸ் நிலையம்



*மீண்டும் –*

# யாழ்ப்பாணம் எரிகிறது!

## முதலாம் நாள் 31 மே 1981

1981, மே மாதம் 31.
ஞாயிற்றுக்கிழமை, இரவு 8.15 மணி.

யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஒன்றரை மைல் (2.3 கிலோ மீற்றர்) தூரத்தில் காங்கேசன்துறை வீதியின் மேற்குப் பக்கத்தில் நாச்சிமார் அம்மன் கோயில் அமைந்துள்ளது. அக்கோயிலின் கிழக்கு வீதியில், யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் (T. U. L. F.) தேர்தல் பிரசாரக் கூட்டம் அது. சுமார் இரண்டாயிரம் மக்கள் வரையில் குழுமியிருந்தார்கள். யாழ் நகரப் பிதா (மேயர்) திரு. இராசா விசுவநாதன் மேடையில் முழக்கமிட்டுக்

கொண்டிருந்தார். அவருடன் மேடையில் தீப்பொறி ஆசிரியர் திரு. அந்தனிசில், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் திரு. குமாரவேலு ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.[1]

இப்பிரசாரக் கூட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை நான்கு பொலீசார் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் இருவர் பொலீஸ் சார்ஜன்ட்களாவர். சார்ஜன்ட் புஞ்சிபண்டா, குருநாகலைச் சேர்ந்தவர், சார்ஜன்ட் கனகசுந்தரம் மீசாலையைச் சேர்ந்தவர். ஏனைய இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் திரு. குணசிங்காவும் ஜனாப் உஸ்மானுமாவர்.

மேயர் இராசா விசுவநாதன் பேசிக்கொண்டிருந்தபோதுதான் அந்த வெடிச்சத்தம் எழுந்தது. திரு. விசுவநாதனின் சொற்பெருக்கைச் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் வெடிச் சத்தம் கேட்டதும் பதட்டமடைந்தது. ஒரு பகுதியினர் சடுதியாக ஓடத் தொடங்கினர். "பட்டாசு வெடிப்பதாகவும் சனங்களை அமைதியாக இருந்து கூட்டத்தை கேட்குமாறும் தலைவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். மீண்டும் வெடிச்சத்தம் கேட்டதும் மக்கள் குழப்பமடைந்தனர்.[2]

உண்மையில் அக்கூட்ட மைதானத்தில் வெடித்தது பட்டாசு அல்ல. துப்பாக்கி வேட்டுக்களே! தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த நான்கு பொலிசாரும் துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்காகினர்.

"பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம் கையில் துப்பாக்கியுடன் கூட்டம் நடந்து கொண்டிருந்த மேடையருகில் வந்தார். ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். "கனகசுந்தரம் நீர் என்ன செய்கிறீர்?" என்று யாழ் மேயர் விசுவநாதன் திகைப்புடன் அவரைக் கேட்டார். சார்ஜன்ட் கனகசுந்தரம் நீதிமன்ற சார்ஜன்டாக இருந்தவராதலால் சட்டத்தரணியான மேயர் விசுவநாதனுக்கு அவரை நன்கு தெரியும். "ஆரோ சுட்டு என்னைக் காயப்படுத்தி விட்டார்கள்; கூட்டத்தை முடித்து மக்களைக் கலைந்து போகச் சொல்லுங்கள். எனக்கு ஆஸ்பத்திரிக்குப் போக ஒரு வாகனம் தாருங்கள்" சர்ஜன்ட் கனகசுந்தரம் சுழன்றார்.[3]

கூட்டம் உடன் நிறுத்தப்பட்டது. ஆகாயத்தை நோக்கி சார்ஜன்ட் கனகசுந்தரம் துப்பாக்கியால் சுட்டுச் சத்தம் எழுப்பியதும் பயந்து கிலிகொண்ட சனக்கூட்டம் நாலா திக்குகளிலும் பாய்ந்து ஓடியது. ஒருவர்மேல் ஒருவர் விழுந்து எழுந்து ஓடினர். சிறுவர் பயத்தால் வீரிட்டு அலறியபடி பாய்ந்து ஓடினர். சயிக்கில்காரர்கள் வெருட்சியுடன் சயிக்கில்களுடன் கொளுவுப்பட்டு விழுந்து ஓடினர். சற்றுநேரம் நாச்சிமார் கோவில் மைதானம் அல்லோல கல்லோலப்பட்டது. 'துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய சார்ஜன்ட் கனகசுந்தரம், சுப்பையா யோகலிங்கம் என்பவரின் காரில் ஏற்றி அவசரமாக யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.[4]

# பலியாகிய புஞ்சிபண்டா

பொலீஸ் சார்ஜன்ட் புஞ்சிபண்டா, துப்பாக்கிச் சூடு நிகழ்ந்த தலத்திலேயே மரணமடைந்தார். 'அவர் தலையின் பின் பக்கத்தில் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்திருந்தது. துப்பாக்கிச் சூட்டினால் மூளைச்சிதைவு ஏற்பட்டதால் மரணம் சம்பவித்தது. துப்பாக்கிச்சூடு நிகழ்ந்த இரு வினாடிக்குள் சார்ஜன்ட் புஞ்சிபண்டா மரணமடைந்தார்.'[5]



(நாச்சிமார் அம்மன் கோயிலருகிலுள்ள திரு. சிதம்பரநாதனின் எரியுண்ட காரும், ஸ்கூட்டரும்)

பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் உடலில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. ஒரு காயம் வயிற்றின் வலது பக்கத்தில் ஏற்பட்டிருந்தது. மற்றைய காயம் இடது இடுப்பில் காணப்பட்டது. மூன்றாவது காயம் இடது தொடையில் ஏற்பட்டிருந்தது. துப்பாக்கிச்சூட்டின் இரண்டு சன்னங்களும் அவர் உடலில் தங்கிவிட ஒரு சன்னம் இடது தொடையினூடாக வெளியே சென்றுவிட்டது.[6] மிகவும் ஆபத்தான நிலையில் சார்ஜன்ட் கனகசுந்தரம் ஆஸ்பத்திரிக்குக் காரில் எடுத்துச் செல்லப்பட்டார்.

'நாச்சிமார் கோவில் முன்றலில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நிகழ்ந்தபோது, நான்கு பொலீசாரும் ஒரு வாங்கில் அமர்ந்திருந்தனர். அவ்வேளையே துப்பாக்கிச் சூடுகள் நிகழ்ந்தன.'[7] 'யாழ்ப்பாணம் உதவிப் பொலீஸ் அதிபர் திரு. நவரத்தினராசாவும், பொலிஸ் இன்ஸ்பெக்டர், திரு. கு. கிருஷ்ணதாசனும் ஏனைய பொலீஸாரும், நாச்சிமார் கோயிலுக்கு, பொலீஸார் சுடப்பட்டதாகக் கேள்விப்பட்டு வந்தபோது, சார்ஜன்ட் புஞ்சிபண்டா, வாங்கிற்கு அருகில், நிலத்தில் இறந்து கிடந்தார்.'[8]

## சுட்டது யார்?

பொலீஸாரைச் சுட்டது யார்?


'அந்தச் சம்பவம் குறித்து முரண்பாடான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம் தன்னைச் சுட்டவர் இன்னொரு பொலீஸ் என்று தனது மனைவியிடம் தெரிவித்திருக்கிறார். அவர் ஆஸ்பத்திரியில் டாக்டரிடம் அளித்துள்ள வாக்குமூலத்திலும் அவ்வாறே கூறியிருப்பதாக அறிகின்றேன். இதில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது என்பதை நான் அறியேன். அன்றிரவு நான் பொலிஸ் மா அதிபரிடம் (IGP) தொடர்பு கொண்டபோது, சில இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்ததாகக் கூறினார்' எனத் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கோயில் முன்றலில் பொலிஸார் சுடப்பட்ட செய்தி காட்டுத் தீ போல நகரம் எங்கும் பரவியது. 'துப்பாக்கிச் சூடு நிகழ்ந்த அரை மணி நேரத்திற்குள் பொலீசார் ஒரு ஜீப்பிலும் ஒரு டிரக்கிலும் வந்து சேர்ந்தனர். சிலர் சிவிலுடையில் இருந்தனர். சிலர் பொலீஸ் உடையில் இருந்தனர்.'[9] டிரக்கிலிருந்து குதித்தவர்கள் ஆவேசத்துடன் காணப்பட்டனர். கோயில் முன்றலில் சிதறி நின்றிருந்த மக்களைத் துரத்தி அடித்தனர். கைகளால் அறைந்தும், கால்களால் உதைத்தும் துப்பாக்கிகளால் இடித்தும் துரத்தினர்.

வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, யாழ்நகரில் சிவிலுடையில் வந்த குண்டர்களால் ஆரம்பிக்கப்பட்ட வன்செயலின் கொடூரத்திலிருந்து யாழ்ப்பாணம் இன்னமும் தன்னை விடுவித்துக்கொள்ள முடியவில்லை: அதற்குள் 1981, மே மாதம் 31ஆம் திகதி மீண்டும் நாச்சிமார் கோயில் முன்றலில் ஜீப்பிலிருந்தும் டிரக்குகளிலிருந்தும் குதித்தவர்களால் யாழ்ப்பாணத்தில் மீண்டும் வன்செயல்கள் தொடக்கி வைக்கப்பட்டன.

## கோயில் சூழலில் நிகழ்ந்த அனர்த்தங்கள்

நாச்சிமார் அம்மன் கோயில், யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியான காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீதி வந்து இணைகின்ற சந்தி; எனவே போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்ற பாதை. வீதியில் வந்த அப்பாவி மக்கள் அவர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுத் துரத்தி அடிக்கப்பட்டனர். சைக்கிள்களில் வந்தவர்கள் மறிக்கப்பட்டு, துப்பாக்கிப் பிடிகளாலும் குண்டாந்தடிகளாலும் தாக்கப்பட்டனர்.



(தீ மூட்டப்பட்ட நாச்சிமார் கோவில் கோபுரம்)

யாழ்ப்பாண நகரத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த வாகனங்களும், காங்கேசன்துறைப் பக்கமிருந்து யாழ்ப்பாண நகர் நோக்கி வந்த வாகனங்களும் தாக்குதலுக்குள்ளாகின. கார்கள் மறிக்கப்பட்டு, கார்களின் முன் கண்ணாடிகளும் (வின்ட்ஸ்கிறீன்) பின் கண்ணாடிகளும் நொருக்கி அனுப்பப்பட்டன. சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட்டிற்கு, விவேகானந்தா அச்சகப் பங்காளர் திரு. சு. குலேந்திரன் தனது காரில் வந்து கொண்டிருந்தார். நாச்சிமார் கோவிலடியில் பொலீசாரால் அவர் கார் மறிக்கப்பட்டது. மறிக்கப்பட்டதும் துப்பாக்கிப்பிடி ஒன்றினால் அவர் காரின் வின்ட்ஸ்கிறீன் கண்ணாடி பளார் என அடித்து உடைக்கப்பட்டது. காரின் பக்கக் கண்ணாடிகள் இரண்டும் உடைக்கப்பட்டன.

கூட்டம் நிகழ்ந்த இடத்து அலங்காரங்கள் சிதைக்கப்பட்டன. மூன்று லவுட்ஸ்பீக்கர்களும் நடப்பட்டிருந்த தூண் பிடுங்கி வீசப்பட்டு லவுட்ஸ்பீக்கர்கள் சிதற அடிக்கப்பட்டன. அவர்களின் வன்செயல்களின் போக்கு புதுவடிவம் பெறத்

தொடங்கியது. அவர்கள் நாச்சிமார் கோயிலுக்குள் புகுந்தனர். ஆலயக்கதவை உடைத்துத் திறந்து கொண்டு, ஆலயத்தினுள் நுழைந்தனர். புனிதமான அம்மன் ஆலயத்தினுள் அவர்கள் பூட்ஸ் கால்களுடன் புகுந்தனர். அரையில் வேட்டி அணிந்து பக்தியுடன் நுழைய வேண்டிய ஆலயத்தினுள் உடல் முழுவதும் தடித்த ஆடைகளை அணிந்து வெறியர்களாகப் புகுந்தனர். கோயிலினுள் கண்ணில் காணப்பட்ட பொருட்களைச் சிதைத்தனர். குத்துவிளக்குகள் உதைத்துப் புரட்டப்பட்டன. அம்மன் பவனிக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை அவர்கள் சேதப்படுத்தினர். இடப வாகனம் ஒன்றின் தலை அவர்களினால் துண்டிக்கப்பட்டது. கோயில் மணி அவர்களினால் சேதப்படுத்தப்பட்டது.

அடித்தும், உதைத்தும், இடித்தும், சிதைத்தும், உடைத்தும் ஓய்ந்த அவர்கள் தீ மூட்டலில் இறங்கினர். நாச்சிமார் கோயிலிற்குப் புதிதாக ராஜகோபுரம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் கோபுரத்தைச் சுற்றி காட்டுத்தடிகளால் பாதுகாப்பு அரண் அமைத்து தென்னங் கீற்றுகளால் மறைப்பாக அடைத்திருந்தார்கள். இதற்கு முதலாவதாகத் தீ மூட்டப்பட்டது. மிக உயரமாக அமைந்த கோபுரம் தீ மூட்டப்பட்டதும் விளாசி எரிந்தது. ஆலயம் ஒன்று தீ மூட்டப்பட்ட மிலேச்சத்தனம் வேறு எங்கு நடக்க முடியும்?



(யாழ். மேயர் இராசா விஸ்வநாதன்)

நாச்சிமார் அம்மன் கோயில் சிற்பத்தேரும் தீ மூட்டப்பட்டது. ஆனால், தேர் நன்கு பாதுகாக்கப்பட்ட தகரக் கொட்டகைக்குள் இருந்ததால் தீ பரவவில்லை. கோயில் மஞ்சத்திற்கும் தீ மூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் தீப்பந்தங்களைத் தம் கைகளில் ஏந்திக் கொண்டனர். கோயில் முன் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு மின்சார வெளிச்சம் கொடுப்பதற்காக மின் பிறப்பாக்கி வாகனம் ஒன்று நின்றிருந்தது. அதற்கும் தீயிட்டுக் கொழுத்தினர். வீதியில் சிதறிக்கிடந்த சைக்கிள்களை இழுத்து வந்து எரிந்து கொண்டிருந்த மின் பிறப்பாக்கி வாகனத்தில் எறிந்தனர். நாச்சிமார் கோயில் வீதியில் நடக்கும் அராஜகங்களை அறியாது, ஒருவர் ஸ்கூட்டர் ஒன்றில் வந்தார். கோவில் முன்றலில் நடக்கும் அனர்த்தங்களைக் கண்டு, ஸ்கூட்டரைக் கோயிலின் பின் வீதியில் திருப்பி ஓட்டினார். அவர்கள் அவரைத் துரத்தினர். அவர் ஸ்கூட்டரை வீதியில் விட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டார். அவருடைய ஸ்கூட்டர் கோயிலின் பின் வீதியில் தீயில் வெந்து கருகியது; லம்பெறட்டா ஸ்கூட்டர் எலும்புக் கூடாகக் கருகிக் கிடந்தது.



(நாச்சிமார் கோயிலடியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பின்னர் மரணமடைந்த பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரம்)

அவர்கள் அருகில் இருந்த வீடுகளுக்குச் சென்றனர். வீடுகளை உடைத்தும் கொளுத்தியும் சேதப்படுத்தினர்.[12] நாச்சிமார் கோவில் தேர் மண்டபத்திற்கு அருகிலுள்ள வீடு முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டது. அடி அத்திவாரம் மாத்திரமே அந்த வீட்டில் எஞ்சியுள்ளது. வேலிக்கு நெருப்பிட்டபடி வீட்டிற்குள் நுழைந்தவர்கள் அந்த வீட்டில் இருந்தவர்களையும் தாக்கினர். 'அங்கிருந்த திரு. ஆர். சிறீதரன்

என்பவர் இக்காடையர்களால் தாக்கப்பட்டார். மண்டை உடைந்த நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அன்றிரவு அவர் தகப்பனுடனும் தங்கையுடனும் வீட்டில் இருந்தபோது பதினைந்து பேருக்கும் அதிகமானோர் வீட்டிற்குள் அட்டகாசமாகப் புகுந்தனர். றேடியோ, ஏனைய தளபாடங்கள் யாவற்றையும் அடித்து நொருக்கினர்[13]. அருகில் இருந்த இன்னொரு வீட்டிற்குள் அடுத்து நுழைந்த காடையர்கள், அங்கு இருந்த தபால் அதிபர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கினர். வீட்டிலிருந்த பொருட்கள், கண்ணாடிகள் என்பனவற்றையும் அடித்து உடைத்தனர்.

நாச்சிமார் கோவிலின் வடக்கு வீதியில் சந்தியிலிருந்த தேநீர்க் கடையின் பின் தலைவாசல் எரித்து அழிக்கப்பட்டது. சற்றுத்தள்ளி காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கார் கராஜ் ஒன்றிற்குள் நுழைந்த அவர்கள், அங்கு திருத்துவதற்காக நிறுத்தப்பட்டிருந்த கார்களின் முன் கண்ணாடிகளையும் பின் கண்ணாடிகளையும் அடித்து உடைத்தனர். வேலியும் தீக்கிரையாக்கப்பட்டது.

கோயில் தெற்கு வீதியில், காங்கேசன்துறை வீதிக்கு அருகில் ஒரு கல் கட்டிடத்துடன் அமைக்கப்பட்டிருந்த கடலை விற்கும் கடை தீயிட்டு அழிக்கப்பட்டது. அங்கு இருந்தவர் அவர்களினால் தாக்கப்பட்டார்.

நாச்சிமார் கோவில் அருகில் அமைந்துள்ள திரு. எஸ். சிதம்பரநாதன் என்பவரின் வீட்டில், இக்காடையர்களால் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. அவரும் அவர் மனைவியும் குழந்தைகளுமே அவ்வீட்டில் இருந்தார்கள். நாச்சிமார் கோவிலின் முன்றலில் கலவரங்கள் தொடங்கியதும், அவர்கள் தங்கள் வெளிக்கதவைப் பூட்டி விட்டு வீட்டையும் பூட்டிக் கொண்டு உள்ளே இருந்து விட்டார்கள். அப்போது கையில் பந்தங்களுடன் கூச்சலிட்டபடி சிலர் வீதியில் ஓடுவது தெரிந்தது. வீதியின் ஓரமாக இருந்த வேலிகளுக்கு அவர்கள் தீயிட்டார்கள். இரவு **9.15** மணியளவில், திரு. சிதம்பரநாதனின் வெளிக்கேற்றை உடைத்துக் கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்தனர். கண்ணாடி யன்னல்களை அடித்து உடைத்தனர். வீட்டின் பின் கராஜ்ஜில் நின்றிருந்த மூன்று வாகனங்கள் அவர்களுக்கு எரிச்சலை மூட்டிவிட்டன. ஒரு கார் (E N 282 போர்ட் பிறிபெக்ற்) ஒரு மோட்டர் சைக்கிள் (E N **376**). ஒரு ஸ்கூட்டர் (**82** ஸ்ரீ **5184**, பஜாஜ்) என்பன திரு. சிதம்பரநாதனுக்குச் சொந்தமானவை. அவற்றிற்கு அந்த வன்கும்பல் தீயிட்டு எரித்தது. கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கில் இவை மூன்றும் எரிந்து நாசமாயின[14]. அந்தக் காடையர்கள் அந்த வளவைவிட்டு வெளியேறியதும், அயலவர்கள் வந்து எரிந்து கொண்டிருந்த தீயை அணைக்காவிடில், திரு. சிதம்பரநாதனின் வீடும் எரிந்து முடிந்திருக்கும்.

திரு. சிதம்பரநாதனின் வளவிற்குள் திருமதி சுப்பிரமணியம் சின்னம்மாவின் கல்வீடு இருக்கிறது. காடையர்களால் அந்தவீடும் சேதப்படுத்தப்பட்டது. கண்ணாடி யன்னல்களை அடித்து உடைத்த அவர்கள். வீட்டுக் கதவை எதனாலோ கொத்தித் திறந்தார்கள். வீட்டிற்குள் இருந்த சின்னம்மா மூதாட்டியும் பெண் குழந்தைகளும்

அலறியபடி அடுக்களைக்குள் ஓடினர். வீட்டிற்குள் நுழைந்த அவர்களால், கண்களில் பட்டவையாவும் அடித்துத் தூள் தூளாக்கப்பட்டன. அவர்கள் அடுக்களையினுள் நுழைந்து பாத்திரங்களை உடைத்துத் தள்ளினர். ஹாலில் இருந்த அலுமாரிக்கு அவர்கள் தீயிட்டனர். அதற்குள்தான் அந்த வீட்டிலுள்ளவர்களின் ஆடைகள் யாவும் இருந்தன. அவை முற்றாக எரிந்து சாம்பலாகின. அலுமாரியின் அருகில் இருந்த யன்னல் கதவுகளும் எரிந்து கருகின. 'இப்படியும் ஒரு கொடுமை இனியும் நடக்கக் கூடாது ஐயா, எனது இத்தனை வருட வாழ்க்கையில் நான் இந்தளவு பயங்கர நிகழ்ச்சியைக் கண்டதில்லை. எங்கே போவது'? [15] என்று மூதாட்டி கண்ணீர் விட்டழுதார்.

(சுடப்பட்ட சார்ஜன்ட் கனகசுந்தரத்தை ஆஸ்பத்திரிக்கு ஏற்றி வந்த காரும் கொள்ளி வைக்கப்பட்டுக் கிடக்கிறது)



இவ்வளவுடன் அவர்கள் ஓய்ந்துவிடவில்லை. திருமதி சின்னம்மா வீட்டிற்கு அருகிலுள்ள திரு. வேலும்மயிலும் என்பவரின் கடைகளை பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர். மூன்று கடைகள் தொடர்ச்சியாகக் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் இரண்டு கடைகள் எரிந்து நாசமாகின. கடைகளின் கூரைகள் எரிந்த விழுந்து, கதவுகள் எரிந்து சாம்பலாகி, சுவர்கள் தணலில் வெந்து வெடித்துப் போயின. அக்கடைக்கு முன் அமைந்துள்ள சாந்தி அச்சகத்தை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. யன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறின.


நாச்சிமார் கோவில் முன்றலில் இரவு 8.15 மணிக்குத் தொடங்கிய பயங்கர வன்செயல்கள் அன்றிரவு 11 மணிவரை தலைவிரித்தாடியது. நாச்சிமார் கோயில் சுற்றாடலில் ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய்கள் மதிப்பிடத்தக்க பொருட்கள், கட்டிடங்கள், வாகனங்கள் எரிந்து சாம்பலாகின. எதிரிகளால் தாக்கப்பட்ட யுத்தபூமியாக அன்றிரவு நாச்சிமார் கோவிலடி விளங்கியது.

## யாழ்நகர் அராஜகம்

நாச்சிமார் கோவிலின் சுற்றாடலில் வன்செயல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த அதேவேளை, 'யாழ்ப்பாண நகர் எங்கும் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. சிவிலுடையில் வந்தவர்கள் தமது இஷ்டப்படி நாசவேலைகளில் ஈடுபட்டனர். இவர்கள் பஸ்வண்டி, மினிபஸ், ஜீப், டிரக் வண்டிகளை உபயோகித்த்தாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இவர்கள் பெற்றோல் நிரப்பும் நிலையங்களுக்குச் சென்று பாத்திரங்களில் பெற்றோல் வாங்கியதையும் கண்டுள்ளனர்.[16]

31ஆம் திகதி இரவு 8.30 மணி இருக்கும். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள 33 தொடர் கடைகளில் ஏழு அல்லது எட்டு கடைகள் பூட்டப்பட்டிருந்தன. ஏனையவற்றில் வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அப்போது முனிஸ்வரன் வீதியினூடாக ஐந்நூறு பேர் துப்பாக்கிகளுடன் ஓடி வந்தனர். அவர்கள் சிங்களத்தில் ஏசியபடி ஓடி வந்தனர். 36 தொடர் கடைகள் இருந்த பக்கமாக மூவர் ஓடிவந்தனர். தாங்கள் வைத்திருந்த துப்பாக்கிப் பிடியால், எதிர்ப்பட்ட கடைகளுள் புகுந்து 'சோக்கேஸ்' கண்ணாடிகளை இடித்து உடைத்தனர். கடைகளுக்கு முன் பேரீச்சம்பழம் வைத்து விற்கின்ற கண்ணாடிப் பெட்டிகளை, பூட்ஸ் கால்களால் அடித்து உடைத்தனர். ஜெகாஸ் கபே, பொபி கபே, நியு வசந்தாஸ், ஐங்கரன் ஸ்ரோர்ஸ், ராடோ கபே முதலான கடைகளின் கண்ணாடிப் பொருட்கள் நொருக்கப்பட்டன. கடைக்காரர்கள் பயத்துடன் வேகமாக கடைகளைப் பூட்டிவிட்டு அவ்விடத்தைவிட்டு விரைந்தனர். நியு வசந்தாஸ் கடை உரிமையாளர் திரு. சின்னராசா மகாதேவனும் அவர்களில் ஒருவராவர்.[17]

யாழ் பஸ் நிலையம் அல்லோலகல்லோலப்பட்டது. பிரயாணிகள் பயத்துடன் ஓடினர். பலர் பஸ்களில் ஏறிக்கொண்டனர். மினிபஸ்கள் வெகு வேகமாக தாம் நின்ற இடங்களிலிருந்து சீறிக் கொண்டு தப்பி ஓடிப் பாய்ந்தன. ராக்சிகள் யாவும் விரைந்து ஓடின. 'பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகில் அமைந்திருக்கும் உமாசோதி கடை உரிமையாளர் திரு. கே. சிறிகந்தராசா, பஸ் ஒன்றிலிருந்தும் டிரக் ஒன்றிலிருந்தும் வேகமாக துப்பாக்கி ஏந்திய பலர் கீழே குதித்து இறங்குவதைக் கண்டார். முனீஸ்வரன் வீதியினூடாகவும் ஆயுதம் ஏந்திய பலர் ஓடிவந்தனர். 150 பேர் வரையில் இருக்கும். அவர்கள் எதிர்ப்பட்டவர்களை அடித்தனர். ஒரு மினி பஸ்ஸின் முன் கண்ணாடியை துப்பாக்கியால் இடித்து நொருக்கினர். அந்த மினிபஸ் திரும்பி ஓட முயல, அதன் பின் கண்ணாடியையும் இடித்து உடைத்தனர். திரு. சிறிகந்தராசா வேகமாகக் கடையை மூடிவிட்டு, அருகில் இருந்த பவர் ஹவுசுக்குள் நுழைந்து கொண்டார்'[18].




(சூறையாடப்பட்ட சுப்பையா அன் கோ. மதுபானக் கடை)

யாழ்நகரில் பயங்காவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை யாழ்நகரின் தியேட்டர்கள் அறிந்ததும் சினிமாக் கட்சிகள் நிறுத்தப்பட்டன. தியேட்டர்களில் குழுமியிருந்த ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் பயத்துடன் வெளியேறினர். சிலர் விழுந்தடித்து வீதிகளில் ஓடிச் சென்றனர். பிரதான வீதி, கொழும்புத்துறை, அரியாலை முதலிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டியவர்கள், அப்பக்கமாகச் செல்லத் தயங்கி, வேறு திசைகளில் விரைந்து சென்றனர். பஸ்கள், மினிபஸ்கள் எதுவுமிருக்கவில்லை. தூரத்து இடங்களில் இருந்து வந்தவர்கள் தியேட்டர்களை விட்டு வெளியேறப் பயந்து, தியேட்டர்களிலேயே தங்கிவிட்டனர். வெளியேறியவர்களில் பலர் காரணமின்றித் தாக்கப்பட்டனர்.

'யாழ் சாந்தி தியேட்டரில் இரண்டாவது சினிமாக் காட்சி பார்க்க வந்திருந்த மக்களையும் பெண்களையும் சிவிலுடைக் காடையர்கள் நான்குபேர் தாக்க முயன்றபோது சனக்கூட்டம் சிதறியோடியது. ஆகாயத்தை நோக்கிப் பலமுறை வெடிவைத்துப் பெண்களையும் பிள்ளைகளையும் பீதியுற வைத்தனர். தியேட்டர் ஊழியர்கள் மக்களைத் தியேட்டருக்குள் விட்டுக் கதவைத் தாழ்பாள் போட்டுக் காத்திருந்தனர். அதன்பின்பும் காடையர்கள் வந்து 'ஆட்கள் உள்ளுக்கு இருக்கிறார்களா?' என்று தியேட்டர் உரிமையாளரிடம் கேட்டபோது 'யாரும் இங்கு இல்லை; படம் ஓடவில்லை' என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பினார் அவர்'[17A]

சினிமா பார்த்த அரியாலையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் தங்கள் வீட்டுக்குச் செல்ல முடியாது, வேறு பாதையால் ஓடிவந்தார்கள், யாழ்நகரிலிருந்து தெற்குப் பக்கமாகச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. பிறவுண் வீதியில் ஏறி நீராவியடி பிள்ளையார் கோயில் முன் ஓடி வந்து பயத்துடன் நின்றனர். அவர்களைக் கோயிலில் தங்க வைத்துவிட்டு, இரவு 1 மணிக்கு நீராவியடி இளைஞர்கள் நா. முத்துக்குமார், திரு. பா. நகுலேஸ்வரன், திரு. நா. நற்குணசிங்கம் முதலியோர் அரியாலைக்குச் சென்று உரியவர்களை அழைத்து வந்து அப்பெண்களை ஒப்படைத்தனர். யாழ்நகரின் பின்னணி வீடுகளில், இவ்வாறு அன்றிரவு பலர் அடைக்கலம் புகுந்திருந்து அடுத்தநாள் காலையே தமது இடங்களுக்குச் சென்றனர். பிறவுண் வீதியில் திரு. பொ. செந்தில்வேல் என்பவரின் வீட்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த பத்துப்பேர் அன்றிரவு, வன்செயலாளர்களால் துரத்தப்பட்டு வந்து அடைக்கலம் புகுந்தனர். மறுநாளே சாவகச்சேரி சென்றனர்.

அன்றிரவு 9 மணிக்கு யாழ். நகர் வெறிச்சோடிப்போனது. கடை மாடிகளில் இருந்து யாழ். நகரைப் பயத்துடன் கண்காணித்தவர்களைத் தவிர வீதிகளில் எவருமேயில்லை. யாழ் நகரில் குழுமிய வன்செயலாளர்கள் பூபாலசிங்கம் புத்தகக் கடைக்குத் தீயிட்டனர். பெற்றோலைக் கதவுகளில் ஊற்றித் தீயிட்டனர். புத்தகங்கள் நிறைந்த கடை; இலகுவில் தீப்பற்றி எரியத் தொடங்கியது. ஐந்து இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான நூல்கள் தீயில் கருகி எரிந்தன. பூபாலசிங்கம் கடைக்கு அருகில் இருந்த மக்மில்லன் புத்தகக்கடை (உமாசோதி கடை)யும் தீயிடப்பட்டது. அதே கடை வரிசையில் இருந்த பொபி கபே, ராஜன் புத்தகசாலை, நியூ வசந்தாஸ், ஐங்கரன் ஸ்ரோர்ஸ், ராடோ கபே, றீகல் கூல்பார், வேலும்மயிலும் கடை, சிவாஸ் கூல்பார், தமிழ்ப்பண்ணை, விம்மின், ரூபன் பன்சி, வேலன்ஸ், மலிபன் கூல்பார், விநாயகம் கூல்பார், சோதி கூல்பார் முதலான 27 தொடர்வரிசைக் கடைகள் பெற்றோல் ஊற்றித் தீயிடப்பட்டன. 36 தொடர் வரிசைக் கடைகளில் 9 கடைகள் தீயிலிருந்து தப்பிப் பிழைத்தன. எரியாமல் தப்பிய 9 கடைகளில் 3 கடைகள் பனம் பொருள் அபிவிருத்திச் சபைக் கடை. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடை, யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க பஸ்நிலையக் கடை என்பனவாகும். இவை மூன்றும் தீயிடப்படாது ஒதுக்கிவிடப்பட்டன. இவை யாழ்ப்பாண பொதுமக்களின் தனியார் சொத்துக்களல்ல.

தங்கள் கடைகள் தீ அரக்கனால் உண்ணப்படுவதை தூரத்தில் நின்று அக்கடை உரிமையாளர்கள் சிலர் கண்டனர். ஓடிவந்து தீயை அணைத்துத் தமது சொத்துக்களைக் காப்பாற்ற விரைந்து வந்தபோது, துப்பாக்கி ஏந்தியபடி கடைகள் கொழுந்து விட்டெரிவதைப் பார்த்துச் சிரித்தபடி நின்றிருந்த காடையர்கள் அவர்களை நெருங்க விடாது அடித்துத் துரத்தினர். நடுநிசி 1 மணிவரை எவரும் அக்கடைகளை நெருங்க முடியவில்லை.

'ஆஸ்பத்திரி வீதியில், கொட்டடியில் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கத்தின் வீடு இருக்கிறது. பஸ் நிலையத்தில் அமைந்திருந்த அவரின் புத்தகக்கடை, தீப்பற்றி எரிவதாக, டாக்டர் எஸ். எஸ். சேனாதிராஜா டெலிபோனில் அறிவித்தார். டாக்டர் சேனாதிராஜாவின் வதிவிடம், பஸ் நிலையத்தின் வடபக்க வீதியில் அமைந்திருந்தது; மாடிக் கட்டிடம். பஸ் நிலையத்தொடர் கடைகள் தீயில் எரிவதை அவரால் காணமுடிந்தது. செய்தி அறிந்த திரு. பூபாலசிங்கமும் அவரின் மகனும் இன்னும் சிலரும் யாழ். நகரை நோக்கி ஓடிவந்தனர்; அவர்களை சி. எஸ். கே. சந்தியில் இராணுவத்தினர் நுழையவிடாது தடுத்தனர். அச்சந்தியில் நின்றபடி பார்த்தபோது பூபாலசிங்கம் புத்தகக்கடை விளாசி எரிவது தெரிந்தது.'[18]

(நாச்சிமார் கோயிலடியில் எரித்து உடைத்து நாசமாக்கப்பட்ட வீட்டின் மூதாட்டி திருமதி சுப்பிரமணியம்)




இதே பஸ்நிலையக் கடைகள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் திகதியும் குண்டர்களால் எரித்து நாசமாக்கப்பட்டது. யாழ் மாநகரசபை அவற்றைப் புதிதாகக் கட்டி வழங்கியிருந்தது. அதே கடைகள் மீண்டும் 1981, மே, 31ஆம் திகதி கொளுத்தப்பட்டன.

இலட்சக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் 15 பிறிஜ்சுகள், 3 டீப் பிறீஸ்சர்கள், 19 ரேப் றெக்கோடர்கள், ரேடியோக்கள், இலட்சக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த பன்சிப் பொருட்கள், தளபாடங்கள், மின்விசிறிகள் முதலியன இந்தத் தொடர் கடைகளில் எரிந்து சாம்பலாகின. பஸ் நிலையக் கிழக்கு வரிசைக் கடைகளை நடாத்துபவர்களில் பெரும்பாலோர் மத்தியதர வகுப்பினர். நகைகளையும், காணிகளையும் விற்றும் ஈடுவைத்தும் இந்தக் கடைகளில் முதலீடு செய்திருந்தனர். வங்கிகளிலும் கடன்பட்டிருந்தனர். அவர்களின் முழுச் சொத்துக்களும் ஒரே இரவில் சிங்களப் பாதுகாப்பு வெறியர்களின் கோரத் தாண்டவத்திற்கு இரையாகின!

## சுப்பையா கடை மது

நாச்சிமார் கோவில் முன்றலிலும் அயலிலும் பயங்கர வன்செயல்களைச் செய்த அந்தக் கும்பல் பின்னர் பஸ் ஒன்றில் ஏறிச் சென்று சுப்பையா அன்ட் கோ மதுபானக் கடைக்குள் புகுந்தது. மதுபானக் கடையை உடைத்து மதுப் போத்தல்களைக் கொள்ளையடித்ததுடன் அங்கேயே குடித்து விட்டு ஆஸ்பத்திரி வீதியிலிருந்து மின்சார நிலையம் வரையுள்ள கடைகளைத் தீக்கிரையாக்கினர்.

மின்சார நிலைய வீதியும் (பசார் வடக்கு வீதி) கஸ்தூரியார் வீதியும் இணைகின்ற சந்தியில் கிழக்கு மூலையில் சுப்பையா அன்ட் கோ, மதுபானக் கடை இருக்கின்றது. பல இலட்ச ரூபாய்கள் பெறுமதியான உள்நாட்டு, வெளிநாட்டு மது பானங்கள் அங்கிருந்தன. அக்கடைக்கு அவர்கள் தீயிடவில்லை. கதவை உடைத்துத் திறந்து உள்ளே புகுந்தனர். அவர்கள் சீவியத்திலும் வாயில் வைக்க இயலாத மதுபானங்கள்! ஆசை தீர வெறி ஏறும்வரை குடித்தனர். பஸ்ஸிலும் ஏற்றினர். பின்னர் அக்கடையினுள் இருந்தவற்றை அடித்து உடைத்தனர். வெளியில் வந்தனர்.



(பஸ் நிலையத்தில் தீக்கிரையாகி அழிக்கப்பட்ட 36 தொடர் கடைகள்)

அவர்கள் எதிரே நவீன சந்தைக் கட்டிடம் தெரிந்தது. பாட்டா செருப்புக் கடை பெரிதாகத் தெரிந்தது. பாட்டா செருப்புக் கடை அடித்து உடைக்கப்பட்டது. வெளிச்சுவர்க் கண்ணாடிகள் பாதுகாப்பற்றவை; அடித்து நொருக்கப்பட்டன. கடையினுள் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர். நவீன சந்தையின் கீழ்க்கடை தீயில் எரிந்தது. அவர்கள் அங்கிருந்து கிழக்குப் புறமாகச் சென்றனர்.

ராணித் தியேட்டருக்கு அருகில் இருந்த திருஞானம்ஸ் கம்பனி இந்தக் கல்மனக்காடையர்களால் கொளுத்தப்பட்டது; 'திருஞானம்ஸ் கம்பனியின் உரிமையாளர் திரு. வி. திருஞானசம்பந்தரும் அவரது மனைவியும் மாடியில் பத்திரிகைகள் படித்துக் கொண்டிருந்தபோது இரவு மணி 8.45, அவருடைய இரண்டு பிள்ளைகளும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது வீதியில் பெரும் சத்தம் கேட்டது. யன்னலால் எட்டிப்பார்த்தனர். சில கட்டிடங்கள் எரிவதைக் கண்டனர். அவர்களது ஸ்தாபனத்திற்கு வெளியில் ஒரு வாகனம் நின்றிருந்தது. யந்திரத் துப்பாக்கிகளுடன் சிலர் காணப்பட்டனர். திரு. திருஞானசம்பந்தர் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பின்பக்கத்தால் ஓடினார். அதேவேளை அவரது கட்டிடத்துக்குத் தீமூட்டப்பட்டது. இரவு11–30 மணயளவில் திருஞானம்ஸ் கம்பெனிக் கட்டிடம் சுவாலை விட்டெரிந்தது. திரு. திருஞானசம்பந்தர் ஓடி வந்தார். அவருடைய காரை ராணித் தியேட்டர் தொழிலாளர்கள் காப்பாற்றி வெளியில் எடுத்து விட்டிருந்தார்கள். கட்டிடத்தைக் காப்பாற்ற முடியவில்லை. தட்டச்சு யந்திரங்கள், புத்தகங்கள், தஸ்தாவேஜுகள், குளிர்பானப் பெட்டி, தளபாடங்கள் என்பன யாவும் எரிந்துபோயின. அவர் மனைவியின் 11 பவுண் தாலிக்கொடி, பிள்ளைகளின் தங்கச் சங்கிலி என்பனவற்றையும் அவர் இழந்தார். சுமார் 12 இலட்ச ரூபாய்கள் நட்டம் இந்த வன்செயல் பயங்கரவாதிகளால் அவருக்கு ஏற்பட்டது.' [19A]

யாழ் சென்றல் பார்மசியும் இந்தக் காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு கடையைப் பூட்டிவிட்டு, திங்கள் காலை வந்து பார்த்தபோது சாம்பல் மேடும் இடிபாடுகளும் காணப்பட்டன. யாழ் சென்றல் பார்மசி உரிமையாளர் திரு. மதியாபரணத்திற்கு இந்தக் கொடூர அழிவால் ஐந்து லட்சம் ரூபாய்கள் நஷ்டமே ஏற்பட்டுள்ளது. [19B]

அதற்கருகில் இருந்த சன்லைட் றைகிளீனேர்ஸ் லோன்றி முற்றாக எரிக்கப்பட்டது. றைகிளீன் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட பெறுமதிமிக்க யாழ்மக்களது ஆடைகள் யாவும் எரிந்து கருகின. பின்னர் சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக் கடைக்கு அவர்கள் தீயிட்டனர். பல இலட்ச ரூபாய்கள் பெறுமதியான மருந்துகளும் தளபாடங்களும் எரிந்து அழிந்தன. சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை முற்றாக எரிந்து விழுந்தது. ஆக அங்கு எஞ்சியது சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை என்ற போர்ட்டைத் தாங்கிய சுவர் மாத்திரம்தான்! சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடையிலிருந்து குட்லக் ஹோட்டல் வரை அமைந்திருந்த நான்கு கடைகளும் எரிக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டன. குட்லக் ஹோட்டல் முற்றாகத்

தீயில் எரிக்கப்பட்டிருந்தது. கூரைகள் வெந்து வெடித்துப்போயின. இந்தக் கடைகளுக்குப் பின் வைத்திலிங்கம் அன் கொம்பனி லிமிட்டெட்டுக்குச் சொந்தமான மரக்காலையும், தொழிற்சாலையும் இருந்தன. யாழ்ப்பாணத்திலேயே மிகப்பெரிய மரக்காலை அதுவாகும்.

இன்று அது இருந்ததற்குரிய எதுவித அடையாளமும் இல்லை: ஐந்து லட்சம் ரூபாய் வரைக்குமேல் பெறுமதிவாய்ந்த மரங்களும் பலகைகளும் எரிந்து சாம்பலாகின. தீயோர் இட்ட தீயினால் இவை எவருக்கும் பயனற்று ஒழிந்தன.

நவீன மார்க்கட்டின் கிழக்குப் பக்கவரிசையிலுள்ள ஒரு புடவைக்கடை முற்றாக எரிக்கப்பட்டது. 'அசோகன் ரெக்ஸ்ரைல்ஸ்' என்ற புடவைக்கடையே காடையர் கூட்டத்தால் எரிக்கப்பட்டது. இப்புடவைக்கடையின் இரும்புக் கேடர்கதவுகள் தகர்க்கப்பட்டு தீ மூட்டப்பட்டிருந்தது. ஐந்து லட்சரூபாய்கள் மதிப்புவாய்ந்த துணிவகைகள் எரிந்துபோயின. எரிந்து எஞ்சிய துணிக்குவியல் மறுநாள் கடை முன் குவிக்கப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரி வீதியிலும் பல கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப் பட்டதுடன், தீயிடவும் பட்டன. ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அலியா ஹோட்டலை இக்காடையர்கள் உடைத்துத் தாக்கினர். அலியா ஹோட்டல் உரிமையாளர் திரு. கே. தணிகாசலம் இதனை மாடியில் மறைந்திருந்து கவனித்துக் கலங்கினார். "அமுதசுரபி" ஹோட்டலும் தாக்கப்பட்டது. கதவுடைக்கப்பட்டது. சுபாஸ்கபே கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன. ஒட்டோஸ் பெற்றோல் தாங்கி இக்காடையர்களால் உடைக்கப்பட்டு பெற்றோல் எடுக்கப்பட்டது. ஒட்டோர்ஸ் கடையை உடைத்து உள்ளே நுழைந்தனர். கடையினுள் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களும் ஸ்கூட்டர்களும் விற்பனைக்காக நின்றிருந்தன. இவை காற்சட்டைப் பைகளுக்குள் மறைவாகச் செருகக் கூடியனவாகவோ கைகளில் மாட்டி எடுத்து செல்லக்கூடியனவாகவோ, தூக்கிச் செல்லக்கூடியனவாகவோ இல்லை. அதனால் இப்புதிய வாகனங்கள் அவர்களால் பெற்றோல் தெளித்துக் கொழுத்தப்பட்டன. இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மூன்று ஸ்கூட்டர்களும் எரிந்து போயின. தீ பரவாமல் அணைக்கப்பட்டதால் ஒட்டோஸ் தப்பியது.

கஸ்தூரியார் வீதியிலிருந்த சாம்பசிவம் அன்கோ கடையும் அவர்களால் உடைத்துத் திறக்கப்பட்டது. கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள், சைக்கிள்கள் என்பன விற்பனை செய்யும் கடை அது. கடைக்குள் நுழைந்தவர்கள் கொள்ளையிட்டனர். ஒவ்வொருவரும் கைக்கடிகாரங்களை அள்ளி, காற்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டனர். கைகளில் மூன்று நான்கு கைக்கடி காரங்களையும் கட்டியும் கொண்டனர். பின்னர் அங்கிருந்து வெளியேறினர். கடை உடைப்புகள், கொள்ளைகள் ஆகிய வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் 31. 05. 81ஆம் திகதி இரவு தங்குதடையின்றி நடந்து முடிந்தன. தடுப்பார் எவருமில்லை. வேலியே பயிரை மேய்ந்து கொண்டிருந்தது!

(யாழ். எம். பி. யோகேஸ்வரனின் 'ஜீப்' பின் நிலை)



இவற்றைச் செய்தவர்கள் யார்?

"பொலீஸாரே செய்தார்கள்" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

## யாழ். எம். பி. வீட்டுக்குத் தீ

ஞாயிறு இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அட்டூழியங்களில் உச்சமானது யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் வீட்டில் நிகழ்ந்ததாகும். 'யாழ் எம். பி. திரு. யோகேஸ்வரன் வீட்டிற்கு அவர்கள் சென்றனர். அவர்களில் சிலர் பொலிஸ் உடையிலும் சிலர் சிவில் உடையிலும் வந்திருந்தனர். துப்பாக்கியால் சுட்டு கதவுப்பூட்டை உடைத்தனர். வீட்டிற்குள் அனைத்திற்கும் தீவைத்தனர். வீடு முற்றிலும் எரிந்து சாம்பலானது. யாழ் எம். பி. யும் அவரது மனைவியும் மதிலால் தாவி ஏறி ஓடநேர்ந்தது. திரு யோகேஸ்வரனின் வீட்டைப் பொலிஸார் கொளுத்தியபோது, வெளியில் சில பொலிஸ்காரர்கள் துப்பாக்கியுடன் நின்றிருந்தனர். யாழ் எம். பி. யின் ஜீப் தீயிட்டு எரிக்கப்பட்டது. அவரது வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த நண்பர் ஒருவரின் காரும் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாண எம். பி. வெளியில் வந்திருந்தால் அவரும் சுடப்பட்டிருப்பார். யாழ் எம். பி. கட்டியிருந்த சாரமும் அவரது மனைவி உடுத்திருந்த உடையும் தவிர அனைத்து உடைமைகளும் நகைகளும் தீக்கிரையாகின.' [21].

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் தனக்கு அன்றிரவு நேர்ந்த பயங்கர அனுபவங்களையும் சேதாரங்களையும் நாடாளுமன்றத்தில் வெகு உருக்கமாக எடுத்துரைத்தார்.

'யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து போன துயரச் சம்பவங்களில் இருந்து தமிழர் சமுதாயமும் சிங்களச் சமுதாயமும் ஒரு பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களால் தமிழ் மக்கள் நல்லதொரு பாடத்தைப் படித்து விட்டார்கள். அத்துடன் நல்லதொரு முடிவுக்கும் வந்துவிட்டார்கள். 31ஆம் திகதி இரவு ஆண்டவன்தான் என்னை மரணத்திலிருந்து காப்பாற்றினான். எனது மனதில் அமைதியில்லை. எனக்கு நடந்த சம்பவங்கள் இந்த நாட்டின் எந்த எம். பி. இக்கும் நடைபெறாத கசப்பான சம்பவங்களாகும். தன் மக்களுடன் பாராளு மன்ற உறுப்பினர் சட்டத்தைப் பாதுகாப்பவர்களிடம் இருந்து வீட்டிற்கு வீடு ஒளித்து ஓடநேர்ந்துள்ளது. நாகரீகமான நமது நாட்டில் இப்படியொரு சம்பவம் நடக்குமோ எனக் கனவுகூடக் காணமுடியாது. ஆனால் இது நடந்துவிட்டது.

'31ஆம் திகதி இரவு தெல்லிப்பளையில் நிகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துவிட்டு வீடு திரும்பும்போது யாழ் பெரிய கடைப்பக்கமிருந்து தீ நாக்குகள் வானளாவி எழுவதைக் கண்டேன் வீட்டுக்கு வந்ததும் எனது மனைவி நகரில் கலவரங்கள் தலைதூக்கியிருப்பதாக அறிவித்தார். "கலவரம் புரிவோர் எமது வீட்டை நோக்கியும் வரலாம்" என என்



(எரிந்து உடைந்த நாசமாக்கப்பட்ட யாழ் எம். பி. திரு. யோகேஸ்வரனின் வீடும், அவர் நண்பரின் காரும்)

மனைவி கூறினார். "எம். பி. யான எனது வீட்டிற்கு எதுவும் செய்யமாட்டார்கள். சும்மா கத்திவிட்டுப்போவார்கள்" என்று மனைவிக்குக் கூறினேன். நான் மாவட்ட அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன். அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அடுத்து நான் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொள்ள முயன்றேன். அவ்வேளை அவர் திருகோணமலையிலிருந்தார்.

'எனது வீட்டருகே இருக்கும் பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அருகில் பல சத்தம் கேட்டது. சுமார் 100 பேர் வரையில் எனது வீட்டை நோக்கிச் சத்தமிட்டவாறு வந்தனர். அவர்களில் சிலர் பொலீஸ் சீருடை அணிந்திருந்தனர். அவர்களுடைய கைகளில் வாள்களும், துப்பாக்கிகளும் இருந்தன. அவர்கள் பூட்டப்பட்டிருந்த கேற்றைத் துப்பாக்கியால் சுட்டு உடைத்தனர். அப்போது அவர்கள் மதுபோதையில் இருந்தனர். நகரிலிருந்த மதுபான விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து பழக்கமில்லாத குடிவகைகளையும் குடித்திருந்தார்கள்.

"பாதுகாப்பைக் கருதி நானும் எனது மனைவியும் பின்னால் ஓடி ஒளிந்து கொண்டோம். சுமார் 45 நிமிடங்களில் திரும்பி வந்தபோது பனியனுடன் இருந்த ஒருவர் எனது கைகளைப் பிடித்து "எம். பி. எங்கே?" என்று கேட்டார். அவர் வெளியில் சென்று விட்டதாகக் கூறினேன். அவரால் என்னை அடையாளம் காணமுடியவில்லை. ஒருவாறு நானும் எனது மனைவியும் பின்வழியால் தப்பி ஓடினோம். ஒவ்வொரு வீடாக ஒளித்து ஒளித்து நாம் தப்பினோம். நான் அப்போது மஞ்சள் சாரம் அணிந்திருந்தேன். எனது மனைவி கவுண் மாத்திரம் அணிந்திருந்தார்.

"எனது ஜீப் இரும்புக் கம்பிகளால் நொருக்கப்பட்டு, தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. எனது நண்பர் ஒருவரின் காரும் எனது கராச்சில் இருந்தது. பேஜோ 404 கார், அந்தக் காரும் எரிக்கப்பட்டது. எனது வீட்டிலிருந்த பொருட்களும் நகைகளும் அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. பின்னர் என் வீட்டிற்குத் தீவைக்கப்பட்டது.

'நான் ஒரு சட்டத்தரணி, விலை உயர்ந்த சட்டப் புத்தகங்கள் உறுதிப் பிணைகள், வழக்குகள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஸுகள், தட்டச்சு யந்திரம் ஆகியவை வீட்டிலிருந்தன. அனைத்தும் எரிந்து சாம்பலாகின. வெளிநாடு செல்லவிருந்த 15 இளைஞர்களின் கடவுச் சீட்டுகளும் என்னிடம் இருந்தன. அவையும் எரிந்தன.


'மறுநாள் காலை, 300 யார் தொலைவிலுள்ள என் தந்தை வீட்டிற்குச் சென்றோம். அவர் ஒரு டாக்டர். நானும் எனது மனைவியும் உடுத்தியுள்ள ஆடைகள் மட்டுமே எமக்குச் சொந்தமாவுள்ளன. இப்போது நான் எனது தந்தையின் சட்டையைத் தான் அணிந்துள்ளேன்.

"அன்று மாலையும் படைவீரர்கள் என்னைத்தேடி வந்தனர். "எங்காவது போயிருப்பார்" என என் தந்தை கூறிவிட்டார். அன்று அதிகாலை 2 மணியளவில், சுவர் ஏறிக் குதிக்க வைத்த பொலீசார், என் தந்தை வீட்டைத் தட்டி, தந்தையை எழுப்பினர். "மகன் எங்கே?" என்று கேட்டு ஒவ்வொரு அறையாகத் தேடினர். எனக்குப் பாதுகாப்பு அளிக்க வந்ததாகப் பொலீசார் கூறினர். அது ஒரு கண் துடைப்பாகும்.

"எனது மாமனார் இவற்றைக் கேள்விப்பட்டு, மாரடைப்பால் காலமானார். அவரது மரணம் சம்பந்தமாகப் பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் எம். பி. யோகேஸ்வரனின் மாமனார் காலம் சென்று விட்டார் என நாம் வானொலிக்கு அறிவித்தோம். ஆனால், அங்குள்ளோர் யாழ்ப்பாணம் என்பதை நீக்கிவிட்டு வெறுமனே யோகேஸ்வரன் எம். பி. எனக் கூறும் அளவுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் நடந்து கொண்டுள்ளது.

"மேலே ஒருவன் இருக்கிறார், அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். எமக்கு இன்று நேர்ந்தகதி உங்களுக்கும் நேரலாம். வடபகுதியில் அமைதியான மக்கள் மீது ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது."[22]

(நெருப்புக்கு இரையாக்கப்பட்டுச் சிதைந்து கிடக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம்)



திரு. யோகேஸ்வரனின் வீடு முற்றாக எரிந்து அழிந்துள்ளது. ஒடுவேய்ந்த கூரை எரிந்து தகர்ந்து சரிந்துவிட்டது. வீடு நிறைய உடைந்த ஒடுகள் சிதறிக்கிடக்கின்றன. கற்சுவர்கள் தீயில் வெடித்துக் கிடக்கின்றன. கதவுகள், யன்னல்கள் யாவும் தீயில் சாம்பலாகியுள்ளன. பாழடைந்தது போன வீடாக யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினரின் வீடு விளங்குகிறது.

வீட்டிற்குத் தீயிட முன்னர், திரு. யோகேஸ்வரனின் வீட்டுமுற்றத்தில் மின்சார சபையினரால் உருட்டிவிடப்பட்டிருந்த கேபிள் கொண்ட உருளைகள், வெகு பக்குவமாக தீ பரவாத பகுதிக்கு உருட்டி அப்புறப்படுத்திய பின்பே கொள்ளி வைக்கப்பட்டது. திரு. யோகேஸ்வரனின் வீட்டு 'போர்ச்'சில் நின்றிருந்த அவரது நண்பர் ஒருவரின் பேஜோ 404, 7 ஸ்ரீ 6941 இலக்கக் கார் முற்றாக எரிந்து போயிருக்கிறது. எம். பி. யின் ஜீப் வெளியேயிழுத்துவரப்பட்டு வீதியிலுள்ள மருத மரத்தின் கீழ் விடப்பட்டு தீமூட்டப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டிற்கும் உடைமைகளுக்கும் தீ வைத்து நாசமாக்கிய கூட்டம், பிரதான வீதியை நோக்கிச் சென்றது. பிரதான வீதியில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தலைமை அலுவலகம் இருக்கின்றது. போகின்ற வழியில், ஆஸ்பத்திரி வீதியும் முதலாம் குறுக்குத் தெருவும் சந்திக்கின்ற சந்தி உள்ளது. அந்தச் சந்தியில் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கத்துக்குச் சொந்தமான புத்தகக்கடையுள்ளது. பஸ் நிலைய முன்றலில் பூபாலசிங்கம் புத்தகக் கடை எரிந்து கொண்டிருந்தது. முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகக் கடையும் அவர்களின் கண்களில்பட்டது. பெற்றோலை ஊற்றி அக்கடைக்கும் அக்கயவர்கள் எரியூட்டினர். நான்கு இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் அக்கடையுடன் நாசமாகின. கட்டிடமே எஞ்சாத அளவிற்கு தீ அக்கடையைத் தரைமட்டமாக்கியது. பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு அருகிலிருந்த லோன்றி ஒன்றும் முற்றாக எரிந்து போனது. இக்கடைக்குப் பின்புறத்திலிருந்த வீடும் தீயினால் பாதிக்கப்பட்டது.

## கூட்டணி அலுவலகம் தீக்கிரை

அன்றிரவு இந்தக் கொடியவர்களால், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தலைமை அலுவலகம், தீக்கிரையாகியது. 'யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனின் வீட்டை எரித்து முடித்துவிட்டு, அதன்பின் அந்தக் கோஷ்டியினர் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்துக்குச் சென்று தீ வைத்தனர்'[23]

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் காவலுக்கு இருந்த காவலாளியை அவர்கள் அடித்துத் துரத்திவிட்டனர். அதன் பின்னர் கூட்டணி அலுவலகக் கூரைக்குத் தீயிட்டனர். தீ எரியத் தொடங்கியது. கூட்டணி அலுவலகக் கதவை உடைத்து உள் நுழைந்தனர். தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம்


முதலானோரின் படங்களைக் கழற்றி எடுத்து வந்து நடுவீதியிலிட்டு உடைத்தனர். அலுவலகத் தளபாடங்கள் சிலவற்றையும் தூக்கி வந்து, நடுவீதியில் அப்படங்களுக்கு மேல் போட்டு பெற்றோல் ஊற்றித் தீயிட்டனர். கூட்டணிக் கட்டிடக் கூரை முற்றாகத் தகர்ந்து, சுவர்கள் பாளம் பாளமாக வெடித்துக் காணப்படுகின்றன.

கூட்டணியின் தலைமைச் செயலகத்துக்கு முன்பாகச் சுமார் 40 பேர் குழுமி நின்றனர். சிங்களத்தில் தூசணை வார்த்தைகளைப் பேசிய வண்ணம் நின்ற அவர்கள், எண்ணை தோய்த்த சேலைப்பந்தங்களைக் கூட்டணிக் காரியாலத்தின் மீதும் வீசினர். அவை தீப்பற்றி எரியத் தொடங்கியபோதும் அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் அங்கேயே நின்றனர்.[23 அ]

'அவர்கள் பொலீஸ் ஜீப்பிலேயே அங்கு வந்திருந்தனர். அவர்கள் வந்த வாகனம், அணிந்திருந்த உடை ஆகியவற்றினைக் கொண்டு பொலீசாரே என்பதைத் திடமாகக் கூறமுடியும்' என யாழ் மாநகரசபை அங்கத்தவர் திரு. அலோசியஸ் விசேஷ பொலீஸ் விசாரணைக் குழுவிடம் கூறியுள்ளார்.

கூட்டணி அலுவலகத்துக்கு அருகில் இருந்த இன்னொரு கடையும் இந்தக் கயவர்களால் எரிக்கப்பட்டது. கதிரைகளையும், கிளாஸ் போன்ற ஏதனங்களையும் வாடகைக்குவிடும் கடையது. அது முற்றாக எரிந்து போனது. குட்டிச் சுவர்கள் மட்டும் இன்று எஞ்சி நிற்கின்றன. இக்கடைக்கு அருகிலுள்ள டாக்டர் செபஸ்தியாம்பிள்ளை என்பவரின் வீட்டின் ஒரு பகுதியும் எரிக்கப்பட்டுள்ளது.

*(பஜார் வீதியில் (சி. பொன்னம்பலம் வீதி) தனியார் கடைகள் எரிக்கப்பட்டும் கூட்டுறவுக் கடைகள் எரிக்கப்படாதும் காணப்படுகின்றன.)*



## சுன்னாகத்தில் தீ வைப்பு

ஞாயிறு இரவு சுன்னாகத்திலும் சில கடைகள் கடையுடைப்புக்கும், சூறையாடலுக்கும் தீ வைப்புக்கும் உட்பட்டன. இவ்வளவுக்கும் அக்கடைகள் யாவும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலேயே இருக்கின்றன. சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதியும் சந்தையின் தெற்கு வீதியும் இணைகின்ற சந்தியில் உள்ள மூன்று கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதன் பின்னர் தீக்கிரையாகின. திரு. கே. குமாரசாமி என்பவருக்குச் சொந்தமான கடை தீயில் கருகியது. அக்கடையில் உரங்களும் சீமெந்தும் இருந்தன. அக்கடைக்கு அருகில் இருந்த சிவாஸ் கூல் பார் ஒன்றும், பலசரக்குக் கடையொன்றும் கயவர்களால் நெருப்பிட்டு அழிக்கப்பட்டன.


## அரசாங்க அதிபர் நடவடிக்கை

31ஆம் திகதி ஞாயிறு இரவு யாழ்ப்பாண நகரில் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் இரவு 1மணி வரையில் சற்று ஓய்வடைந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து ஏறத்தாழ 400 பொலிசார் யாழ்ப்பாணம் வந்தார்கள். அவர்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலும், யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரியிலும் தங்கியிருந்தனர். யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் நிகழ்ந்தபோது அமைச்சர் விமலா கன்னங்கராவும், பிரதி அமைச்சர்கள் சிலரும் யாழ். கிங்ஸ் ஹவுசில் இருந்தனர். அவர்கள் இருக்கும் போதே யாழ்ப்பாணத்தில் இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்துவிட்டன.

யாழ். நகர் அசம்பாவிதங்கள் பற்றி இரவோடு இரவாக கேள்வியுற்ற யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைச்சாமி, உடனடியாகக் காரியங்களில் ஈடுபட்டார். இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டதுடன், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கும் சம்பவத்தை விளக்கி உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். இத்துடன் நின்றுவிடாது இராணுவமுகாமிலிருந்தும் கடற்படைமுகாமிலிருந்தும் மூன்று பவுசர்களை வரவழைத்து தீ மேலும் பரவவிடாது தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.[24]

இராணுவத்தினர் யாழ்ப்பாண நகரில் இரவு 1 மணி அளவில் பிரவேசித்ததும் தீயிட்டும் கொள்ளையிட்டும் கொண்டிருந்த அந்தக் காடையர்கள் நகரைவிட்டுத் தென்புறமாகத் தங்கள் உறைவிடத்துக்குச் சென்றனர். சில இராணுவத்தினர் நகரில் கூடிய மக்களின் உதவியுடன் எரிந்து கொண்டிருந்த கடைகளைப்

(யாழ். நகரில் மூன்று புத்தகக் கடைகளைத் தீக்குக்காவு கொடுத்த திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம்)



பாதுகாப்பதற்கு உதவினர். முதல்நாள் மட்டும் இராணுவ வீரர் தீ ஷயணைப்பதில் ஓரளவு உதவி புரிந்தனர். பரவிய நெருப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனினும் சிலகடைகளுக்கு நெருப்புப் பரவாமல் காப்பாற்ற முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த அசம்பாவிதங்களை அறிந்ததும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா பிரிகேடியர் வீரதுங்காவை விசேஷ விமானத்தின் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார். பிரிகேடியர் வீரதுங்கா ஞாயிறு நள்ளிரவே, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விமானப்படைக்குரிய விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது; யாழ்ப்பாண மக்களது இதயங்களில் கனத்த இருள் கவியத் தொடங்கியது.

............................

# இரண்டாம் நாள் 1, யூன், 1981

1981 யூன், 1ஆம் தேதி சோகத்துடன் விடிந்தது. யாழ்நகர் வீதிகளில் இராணுவத்தினர் ரோந்து சுற்றினர். வீதிச் சந்திகளில் இராணுவப் படையினர் காவல் காத்தனர். ஆரம்பத்தில் பொதுமக்களை நகரத்துள் நுழைய அவர்கள் விடவில்லை. பின்னர் பொதுமக்கள் நகரத்துள் நுழைவதைத் தடுக்கவில்லை.

யாழ்நகர் சோகமயமாக விளங்கியது. எரிந்துபோன கடைகளின் முன் அதன் உரிமையாளர்கள் சோகமே உருவாக நின்றிருந்தார்கள். தலையில் கைவைத்தபடி சிலர் அமர்ந்து விட்டார்கள். அவர்களின் உடல் பதட்டத்தாலும் கவலையாலும் ஆற்றாமையாலும் நடுங்கியதைக் காணமுடிந்தது.

வழக்கமான சனத்திரள் யாழ்ப்பாணநகரில் காணப்படவில்லை. நகர் வெறிச்சோடிகிடந்தது. வர்த்தகக் கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. பாடசாலைகளுக்கு அன்று மாணவர்கள் ஒருவரும் செல்லவில்லை. பஸ் சேவைகள் நடைபெறவில்லை. யாழ்ப்பாண நகரத்தில் சைக்கிள்களைத் தவிர வேறு ஒரு வாகனமும் காணப்படவில்லை. அரசாங்கக் காரியாலயங்கள் வழமைபோல் இயங்கவில்லை. கச்சேரி தபாற்கந்தோர், வருமானவரி, இலாகா ஆகியற்றில்

(யாழ் கச்சேரியடியில் தீக்கிரையாக்கப்பட்ட ஒரு மோட்டார் வண்டி)



ஊழியர்கள் குறைவாக வந்திருந்தனர். ஆக யாழ்ப்பாணத் தேர்தல் கந்தோரில், யாழ்ப்பாண உதவி தேர்தல் அதிகாரி திரு. அ. ஜெயரத்தினமும் பிரதம லிகிதரான திரு. கந்தசாமியும் 4 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். பஸ் சேவை நிகழாதபடியால் கந்தோர் ஊழியர்கள் பலர் சமூகமளிக்கவில்லை.

யாழ். பஸ் நிலைய கிழக்குப்புற 37 தொடர் கடைகளில் சில எரியாது தப்பியிருந்தன. அக்கடைகளில் இருந்த பொருட்களைப் பாதுகாப்பாகத் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில் கடைக்காரர்கள் ஈடுபட்டிருந்ததையும் காணமுடிந்தது. எரிந்த கடைகளுக்குள் ஏதாவது அகப்படுமா எனச் சிலர் சாம்பலைக் கிளறிக் கொண்டும் இருந்தனர்.


யாழ் நகரில் இடையிடையே இராணுவத்தினரின் கெடுபிடியும் நிலவியது. மக்கள் கூட்டமாக ஒரேயிடத்தில் குழுமுவதை அவர்கள் அனுமதிக்கவில்லை. கலைத்தனர். ஜீப்புக்களையும், டிரக்குகளையும் கண்ட அப்பாவி மக்கள் வெருண்டு ஓடுவதையும் காணமுடிந்தது.

யாழ் நகரிலுள்ள காமதேனு ஸ்ரோரும் ஞாயிறு இரவு கொடியவர்களால் தீக்கிரையானது. திங்கட்கிழமை அதிகாலை அதன் பங்காளர் திரு. எஸ். கே. கணேசன் அங்கு வந்து, கடையில் சேதமடைந்திருந்த பொருட்களை எடுத்துச் சென்றபோது, இராணுவத்தினர் சிங்களத்தில் பொருட்களை எடுக்கவிடாமல் தடுத்து விட்டனர். திரு. கணேசன் பயத்துடனும், கவலையுடனும் திரும்பி விட்டார். ஆனால் மறுநாள் காலை வந்து பார்த்தபோது மிச்சமாக இருந்த பொருட்களும் எரிந்து சாம்பலாகிக் கிடந்தன,[25]

இரண்டு தமிழ்த் தலைவர்களை நாச்சிமார் கோவிலடியிலும் யாழ்ப்பாண நகரத்திலும் அன்று அதிகாலை காணமுடிந்தது. தீவுப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினமும், நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரமும் அழிவுகளைப் பார்வையிட்டுக் கலங்கினர். நாச்சிமார் கோவிலடியில் நிகழ்ந்த கொடூரங்களைத் திரு. சண்முகராசா என்பவர் தலைவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கொழும்பிலிருந்து பல தடவைகள் விமானங்கள் பலாலி விமானத்தளத்தில் வந்து இறங்கின. அங்கு இறங்கிய பிரமுகர்களை ஏற்றிக் கொண்டு ஹெலிகொப்டர்கள், துரையப்பா ஸ்ரேடியத்தில் இறங்கின. பொலீஸ்மா அதிபர் திரு. அனாசெனிவிரத்னா அன்று காலை விசேஷ ஹலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணம் வந்தார். ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் உத்தரவின் பேரில் யாழ்ப்பாண நிலைகுறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவும் அதிகாரிகள் வந்தனர். பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் கேர்ணல் சி. ஏ. தர்மபால, திரு. சேபால அட்டிக்கல, மந்திரிசபைச் செயலாளர் திரு. ஜி. வி. பி.

சமரசிங்க ஆகிய அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்தனர். ஜனாதிபதியின் விசேஷ பணிப்பின் பேரில் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கவும் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவும் யாழ்ப்பாணம் வந்தனர்.



(சுன்னாகத்தில் கொடியோரின் தீயிடலால் எரிந்த கடைகள் சில)

கொழும்பில் தேசிய பாதுகாப்புச் சபை (National Security Council) அவசரக் கூட்டம் ஒன்றினைக்கூடியது. யாழ்ப்பாண நிலைமைகளையும் வியாழக்கிழமை (04.01.81) நடைபெறவிருக்கும் அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பற்றியும் கலந்தாலோசித்தது. இக்கூட்டத்திற்குப் பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டிய தலைமை வகித்தார். வடக்கின் வன்செயல்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.


திங்கட்கிழமை முழுநாளும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பதட்ட நிலை காணப்பட்டது. மாலை மெதுவாகக் கவிழ்ந்தது. யாழ்ப்பாணம் இருளில் மூழ்கியது:

வன்செயல் பிசாசுகள் தென்புறமிருந்து புறப்பட ஆயத்தமாயின.

# ஐயகோ, நூலகம் எரிக்கப்பட்டதே !

'பொலீஸ்மா அதிபரும், பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக, யூன் 1ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும் வியப்பானவையுமாகும். அதே பொலீசார் அன்று இரவு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குத் தீயிட்டனர். ஏறத்தாழ 97000 பெறுமதி மிக்க நூல்கள் எரிந்து கருகிப் போயின. உலகில் எங்கிருந்தும் இனிமேல் பெறுவதற்கரிய நூல்கள் பல எரிந்து போயின. அந்த நூல் நிலையம் நீண்ட காலமாகக் கட்டி எழுப்பப்பட்டது. அதனை எரித்து முடித்தனர். இந்த நாட்டில் வாழ்கின்ற ஒரு சில மக்களின் மன நிலையைப் புரிவதற்கு இந்தச் சம்பவம் தக்க குறிகாட்டி ஆகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பிரித்தானியாவின் மீது குண்டுகளை வீசச் சென்ற விமானப்படை விமானிகளுக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்குக் குண்டுகளை வீசி அழித்துவிடக்கூடாது என ஹிட்லர் உத்தரவிட்டான். அதே போல யேர்மனியின் ஹைடல்பேர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும்படி பிரித்தானியா தனது விமானப்படைக்குப் பணிப்புரை வழங்கியது. அறிவுத் தளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்குக் கூட இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கண்மூடித்தனமாக நடந்து கொண்ட

(சுமார் 97000 அருமையான நூல்களுடன் எரிந்து நாசமாகிவிட்ட யாழ். பொதுசன நூலகம்)



பொலீசார் அங்கிருந்த நூல்நிலையத்தைக் கூட விட்டுவைக்கவில்லை!' என எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் கவலையுடன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு எதிரே 700 யார் தூரத்தில் யாழ் பொதுசன நூலகம் அமைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகத் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த விசேஷ பொலிசார் தங்கியிருந்த துரையப்பா விளையாட்டு அரங்கும் யாழ். நூலகத்துக்கு நேர் எதிரேதான் இருந்தது. இவ்வளவு 'பாதுகாப்பு' இருந்தும் திங்கள் இரவு, பொதுசன நூலகம் தீ பிடித்து எரிந்தது.

அன்று இரவு 10 மணிபோல, நூலகத்துக்குள் நுழைந்த கொடியவர்கள், காவலாளியைத் துரத்திவிட்டு நூலகக்கதவை கொத்தித் திறந்து, உள்ளே நுழைந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97 ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்களுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி அழித்தனர். 'லெண்டிங் செக்கன்' முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டது. உருக்கு பீரோவுக்குள் இருந்த நூல்கள் கூட எரிந்து சாம்பலாகிப் போயின; றெபறன்ஸ் செக்சனில், இருந்த சேகரிக்க முடியாத அற்புத நூல்கள் யாவும் அழிவுற்றன. தளபாடங்கள் யாவும் ஒன்றாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. சுவர்கள் வெப்பத்தால் வெடித்து உதிர்ந்திருந்தன. யன்னல்கள் சிதறிப்போயின. நூலகத்துள்ளே சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுள் ஏதாவது நூல்கள் எரியாது எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் திரு. சு. ம. இமனுவேலும், திரு. அ. டொன்பொஸ்கோவும், திரு. ச. கந்தையாவும் சாம்பலைக் கிளறிக் கொண்டிருக்கின்ற நிலையைக் காணமுடிந்தது.

நூலகம் கருகிக் காரைபெயர்ந்து கிடக்கின்றது. நூல் நிலையத்தின் விளம்பரப் பலகையில் 'நூலகம் அபிவிருத்தியின் அடித்தளம் – இலங்கை நூலகச் சங்கம்" என்ற விளம்பரம் எஞ்சி நிற்கிறது; உண்மையில் அடித்தளம் மாத்திரமே எஞ்சிக் கிடக்கின்றது; "புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது" என்ற அறிவித்தலும் நூலக வாசலில் இருக்கிறது. கயவர்கள் நூலகத்தையே புகைத்து விட்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்று எனக் கருதப்படுவது யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் ஆகும். 97 ஆயிரம் பல்துறை சார்ந்த நூல்கள் எரிந்து போயின. ஏறத்தாழ 19 ஆயிரம் அங்கத்தவர்கள் இந்த நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வாசித்துப் பயனடைவார்கள். மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் சம்பந்தமான ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கானவை எரிந்து சாம்பலாகின.

நூல் நிலையம் அழிந்தமை. யாழ்ப்பாண மக்களுக்கு எற்பட்ட பேரிடியாகும். வணக்கத்துக்குரிய தாவீது அடிகள் மரணமாக நேர்ந்தது கவலைக்குரியதாகும். அவர் சுவாமி ஞானப் பிரகாசரின் மாணவர். ஒப்பியல் ஆய்வாளர். பொது நூல்நிலையம் எரிகிறது என்ற தகவல் கிடைத்ததும் அவர் அதிர்ச்சியடைந்தார். அந்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பால் அவர் உயிரிழந்தார். புத்தகங்களின் பெறுமதி அவருக்குத் தெரியும்'[26]. யாழ்ப்பாண நூலகத்தில் ஊழியராக வேலை

செய்துவரும் திரு. பற்குணம் என்பவர் நூல் நிலையம் எரிந்த நிலையைக் கண்டு பிரமை பிடித்தவரானார். அவர் ஒரு நாடகக் கலைஞராவர். மூன்று நான்கு நாட்கள் அவர் சித்தம்குழம்பிய நிலையில் காணப்பட்டார்.

'நூல் நிலையம் தீப்பற்றி எரிவதாக அன்றிரவு 10 – 15 மணியளவில், மாநகரசபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் அறிய நேர்ந்தது. உடனே மாநகரசபை பவுசர்களையும், மாநகரசபை ஊழியர்களையும் பொதுசன நூலகத்தில் ஏற்பட்ட தீயை மேலும் பரவாது அணைக்குமாறு பணித்தார். தீயை அணைக்கச் சென்றவர்களைத் துரையப்பா விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலீசார் தடுத்தனர் என்பதைக் காவலாளர்கள் கூறி அறிந்தார்.[27]

'யாழ். விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிசாரே யாழ் நூல் நிலையத்துக்குத் தீ வைத்திருக்க வேண்டும்" என மாநகரசபை ஆணையாளர் திரு. சிவஞானம் விசேஷ பொலிஸ் விசாரணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்."

## ஈழநாடு எரிந்தது

"அதே தினம் இரவு 'ஈடுநாடு' பத்திரிகை அலுவலகத்துக்கும் தீ வைக்கப்பட்டது. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. கே. சி. தங்கராசாவினால் அந்தப் பத்திரிகை 23 வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்டது. கொழும்புக்கு வெளியே அச்சிடப்படும் ஒரே தினசரிப் பத்திரிகை அது. அது முற்றாக எரிந்து விட்டது. அங்கு அச்சு யத்திரங்களுக்குக் கீழ் டயர்களை வைத்து எரித்தனர். ஊழியர்களின் சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையும் தீயிட்டுக் கொழுத்தினர். முகாமையாளர் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் காயமடைந்தனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காட்டுமிராண்டிகள் கூட வெட்கப்படும் அளவுக்கு பொலிசார் காடைத்தனத்தில் ஈடுபட்டிருந்தனர்'[28].

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தினசரி ஈழநாடு ஆகும். கட்சிச் சார்பற்ற பத்திரிகை அது. உண்மையான செய்திகளை விருப்பு வெறுப்பின்றிக் கொடுக்கின்ற நாளேடாக ஈழநாடு விளங்குகின்றது. அப்பத்திரிகைக் காரியாலயத்தை இந்தக் கொடுமதியாளர்கள் எரித்து அழித்துவிட்டனர். ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தைச் சேர்ந்த 'ஊடுருவி' என்பவர் நிகழ்ந்த நிகழ்ச்சியை "செய்தி தரும் ஈழநாடு செய்தியானது" என்ற தலைப்பில் மிக உருக்கமாகப் பின்வருமாறு விபரித்துள்ளார்:

'01.06.81 திங்கட்கிழமை

இரவு மணி ஒன்பது பத்து

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இரவுச் செய்தியைக் கேட்டுவிட்டு இந்திய வானொலியின் ஆங்கிலச் செய்திக்கு வானொலியைத் திருப்புகிறேன்.



(எரிந்த நூலகத்தில், வாங்குத் துண்டொன்றில் கவலையுடன்
அமர்ந்திருக்கும் நூலகர் திருமதி ரூபா நடராசாவும்
நூலக உதவியாளர்களும்)

அந்தச் செய்தி அறிக்கையும் முடிந்து விட்டது. இப்போது நேரம் ஒன்பது பதினைந்து.

மேசை மீதிருக்கும் ஒரிரு முக்கியமான செய்திகள் மீது மீண்டும் ஒரு தடவை மேலெழுந்த கண்ணோட்டம்.

எல்லாம் சரி. தலைப்புச் செய்தியும் கடுமையாகத் தயாராகி விட்டது. முதல்நாள் யாழ்நகரில் நடந்த இந்தத் துயரச்சம்பவங்கள் செய்திகளாகவும் புகைப்படங்களாகவும் வெளிவரப் போகின்றன.

'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் இருக்கின்ற மேலைச் சிவன் கோயில் வீதியில் எல்லா இடங்களிலும் மின்விளக்குகள், ஒளிபாய்ச்ச எமது 'ஈழநாடு' அலுவலகம் மட்டும் மின்வெளிச்சமில்லாமல் 'பெற்றோல்மாக்ஸ்' ஒளியில் சுடர் விடுகிறது; ஏனோ தெரியவில்லை, அன்றிரவு எட்டரை மணிமுதல் எமது அலுவலகத்திற்கு மட்டும் மின் வெளிச்சமில்லை.

இரவு 9.20 இருக்கும்.

திடீரென ஒருவகைச் சத்தம்

சில செக்கண்டுகள் கழிந்திருக்கும்

யன்னல் கண்ணாடிகள் நொருங்கும் சத்தம்

அதனைத் தொடர்ந்து 'ஐயோ' என்ற அலறல்! ஈழநாடு அலுவலகத்தின் முன்பாக இரும்புச் சுருக்குக் கதவு உடைக்கப்படும் சத்தம்.

என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடியாத பயங்கர நிலையில் அலுவலகத்தின் மேல்மாடியில் ஆசிரியர் பகுதியில் இருக்கின்றோம்.

நான்; எனக்கு முன்பாக எங்கள் ஸ்தாபன இயக்குநர், அவருக்கு அருகே ஒரு ஊழியர், மறுபக்கத்தில் அச்சக ஊழியர் ஒருவர். மொத்தம் நான்குபேர். கீழே அச்சக ஊழியர் நான்கு பேர். இவர்களைத் தவிர இயந்திர ஊழியர்கள் இருவர், பத்திரிகை மடிக்கும் ஊழியர்கள் சிலர்.

அச்சக ஊழியர் திரு. க. சிவநேசன் பயங்கர அலறலுடன் மேல் மாடிக்கு ஓடிவருகின்றார்.

"ஐயோ உடைக்கின்றார்கள்....... கொல்லப்பார்க்கிறார்கள் ......... ஓடுவோம்....." என்று கத்துகின்றார்!

என்ன செய்வது என்று புரியவில்லை. நான்கு பேரும் நாலா பக்கமும் சிதறுகின்றோம். ஓடுகின்றோம், 'ஓடுகின்றோம்' என்றால் சிறகுகள் இல்லாத நிலையில் பறக்கின்றோம் என்று அர்த்தம்!

அலுவலகத்துக்குப் பின்பக்கமாக ஒரு கிணறு இருக்கிறது. அதற்கு அருகில் ஒரு பைப் உண்டு. சீமெந்திலான இப்பகுதி ஒரே பாசி மயம். பகலில் நடக்கும்போதுகூட காலை மெதுவாக ஊன்றி வைத்துத்தான் நடப்போம். ஆனால் அந்த க்ஷண நேரத்தில் அந்தப் பகுதியால் இருளில் எவ்வாறு பாய்ந்து கிணற்றையும் தாண்டினோம் என்பது ...... இறைவனுக்கே வெளிச்சம்.

ஒரே ஓட்டம்!

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வேலிகளைத் தாண்டினோம். மதில் மீது ஏறினோம். வீதியைக் கடந்தோம். ஐந்து நிமிட நேரத்திற்குள் எப்படியோ ஈழநாடு அலுவலகத்திலிருந்து சுமார் 200 யார் தூரத்தில் ஒரு சின்னக் குடிசையை அடைந்து 'அப்பாடா' என்று மூச்சுவிட்டோம்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்த போதுதான் தலைமீது மற்றுமொரு இடி விழுந்தது.

என்னுடன் இருந்த இயக்குநர் திரு. ப. சிவானந்தத்தையும் ஊழியர் திரு. சச்சிதானந்தத்தையும் காணவில்லை.

என்ன செய்வது? 'எப்படியோ தப்பியிருப்பார்கள்' என்று ஆறுதல்பட்டோம்.

அப்போதுதான் அடுத்த அந்தப் பேரிடி விழுந்தது.


நாங்கள் தஞ்சமடைந்திருந்த குடிசையிலிருந்து ஈழநாட்டைப் பார்த்தோம்.

ஐயோ ....... அந்தக் கொடுமையை எப்படிச் சொல்வது?

நினைக்கவே முடியாத ஒன்றை எழுத்திற் கூறமுடியுமா?

தமிழ் மக்களின் ஒரு சொத்து எரிந்து கொண்டிருந்தது!

(எரிந்து அழிந்து கிடக்கும் 'ஈழநாடு' அலுவலகம்)



தவழ்ந்து, எழுந்து, நடைபயின்று துடிப்பு மிக்க இருபத்து மூன்று வயது இளைஞனான ஈழநாட்டுடன், நெருப்புப் போட்டியிட்டுக் கொண்டிருந்தது!

இருபத்து மூன்று ஆண்டுகளாக நாம் சேர்த்து வைத்த அத்தனையையும் தீ அணைத்துக் கொண்டது.

நீங்கள் நித்திரையாக இருக்கும்போது விழித்துக் கொண்டிருக்கும் நாங்கள், அன்று முழுவதும் விடியாதா என்று காத்துக் கொண்டிருந்தோம். அழுது அழுது கண்ணீர் வற்றி விட்டது!

அதிகாலை 5 மணிக்கு அலுவலகம் சென்றோம். இயக்குநர் திரு. சிவானந்தனின் மோட்டார் சைக்கிள் கீழே வைக்கப்பட்டு எங்களது ஒன்பது சைக்கிள்களும் அழகாக மேலே அடுக்கி வைக்கப்பட்டுத் தீயிடப்பட்டிருந்தது. அத்தனையும் தீக்கிரையாகிவிட்டன.

ஏக்கப் பெருமூச்சுடன் அலுவலகக் கட்டிடத்துக்குள் நுழைகின்றோம்.

'ஐயோ! அந்தக் கோரக்காட்சி! ஒன்றும் மிஞ்சவில்லை! வாய் விட்டு அழுவதைத் தவிர வேறொன்றுமே தோன்றவில்லயே?!


இருபத்து மூன்று வருட காலப் பத்திரிகைகள், தொகுப்புகள் சாம்பலாகிக் கிடந்தன. தளபாடங்கள் இருந்த இடமே தெரியவில்லை. மேல்மாடி முழுவதும் ஒரே சாம்பலாகக் காட்சி தந்தது! ஒன்றுமே மிஞ்சவில்லை. கூரை முழுவதும் அந்தக் கோரப் பசிக்கு இரையாகி விட்டது.

ஐம்பதுக்கு அதிகமான கும்பல் மூட்டிய தீ, எமது அலுவலகக் கட்டிடத்தையும், சேர்த்து வைத்த அரும்பெரும் பத்திரிகைகள், குறிப்புகள், தஸ்தாவேஜுகள், புகைப்படங்களுடன், இரவு பகலாக இயங்கி வந்த இயந்திரங்களையும் அணைத்துக் கொண்டது!

சுடச் சுடச் செய்திகளை வெளியிட்டு, தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்று விட்ட உங்கள் 'ஈழநாடு' ஒரு செய்தியாயிற்று!

ஈழநாடு தீக்கு இரையான செய்தி கேட்டு, அலுவலகம் முன்பாகக் கூடியவர்கள் கண்ணீர் விட்டனர். அலுவலக ஊழியர்களான எங்களை அணைத்து ஆறுதல் கூறினர். எங்கள் ஈழநாட்டுக்கா இத்தனை பயங்கரம்? என்று வாய்விட்டுப் பரிதாபப்பட்டனர்.

நாங்கள் தேடிய இயக்குனர் திரு. சிவானந்தனும், ஊழியர் திரு. சச்சிதானந்தனும் மேல்மாடி குளியலறையில் ஒளிந்திருந்து, தீக்காயங்களுக்குள்ளாகி பயங்கர நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய செய்தியும் காலையில்தான் வெளியாயிற்று.



(ஈழநாடு எரிந்தபோது தீக்காயங்களுக்குள்ளான இயக்குனர் திரு. ப. சிவானந்தன்)

"ஏசுவார்கள், எரிப்பார்கள்; அஞ்ச வேண்டாம். உண்மையை எழுதுங்கள். உண்மையாய் எழுதுங்கள்" என்று முதல் இதழுக்கு யோகர் சுவாமிகள் ஆசி கூறினார்கள்.

ஆமாம், ஏசினார்கள்! எரித்தார்கள்!

நாம் உண்மையை எழுதுகின்றோம். உண்மையாய் எழுதுகின்றோம். [29]

வெள்ளை ரீசேட்டும் வெள்ளைக் காற்சட்டையும் அணிந்தவர்களும், சாரமும் பெனியனும் அணிந்தவர்களும் சுமார் நாற்பது பேர்வரை இரும்புக் கம்பிகள், பழைய லொறி டயர்கள் மற்றும் ஆயுதங்கள் சகிதம் வந்து ஈழநாடு அலுவலகத்தையும்

அச்சகத்தையும் சேதப்படுத்தித் தீயிட்டனர். அவர்கள் கொள்கலன்களில் பெற்றோல் வைத்திருந்தனர். ஒருவர் கையில் றிவோல்வர் வைத்திருந்தார். அவர்கள் ஈழநாடு அலுவலகத்தைச் சேதப்படுத்தினர். மேல் மாடியிலிருந்த ஆசிரியர் குழுவினரும், கீழ்ப்பகுதியிலிருந்த அச்சக ஊழியர்களும் ஓடித் தப்பினர். ஆக, இயக்குனர் திரு. ப. சிவானந்தனும், ஊழியர் திரு. சச்சிதானந்தனும் ஒரு மறைவான இடத்தில் ஒதுங்கிக் கொண்டனர். வந்தவர்கள் நாலா பக்கமும் பெற்றோல் ஊற்றி, மூலைகளில் கைக்குண்டுகள் வைத்து ஒரே நேரத்தில் தீயிட்டனர். திரு. சிவானந்தனும், திரு. சச்சிதானந்தனும் மேல்மாடிக் குளியலறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். தீச்சுவாலைகளினால் மூச்சு முட்டி அவர்களிருவரும் குளியலறைக்குள் முப்பது நிமிடமளவில் சுயநினைவற்றுக் கிடந்தனர். அவர்கள் இருந்த குளியலறையும் தீப்பிடித்துக் கொண்டது. மயக்கம் தெளிந்த அவர்கள் நீரை அள்ளி ஊற்றி அணைக்க முயன்றனர். முடியவில்லை. திரு. சச்சிதானந்தன் கையால் இடித்து கண்ணாடி யன்னலை உடைத்தார். அதனூடாக வெளியேறி, சன்செற்றில் குதித்தனர். சன்செற்றில் சாத்தியிருந்த ஏணி வழியாகக் கீழே இறங்கினர். உடலெல்லாம் எரிகாயங்களுடன் இருவரும் உயிர் தப்பினர். [30]

ஈழநாட்டை எரித்து முடித்துவிட்டு வெளியேறிய சிங்களக்காடையர்கள், ஈழநாடு அலுவலகத்தின் முன் நீண்டவாள் ஒன்றை ஊன்றிவிட்டுச் சென்றிருந்தனர்.

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ் எரிந்தது

'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் அமைந்துள்ள மானிப்பாய் வீதியில் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அமைந்துள்ளது. இவர்கள் இலங்கையின் புகழ்பெற்ற "யானை மார்க் சோடா" வின் யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள் ஆவர். பத்துக்கு மேற்பட்ட லொறிகளும் வான்களும் யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் தென்னிலங்கையிலிருந்து வரும் 'யானை மார்க் சோடாவை' நாளாந்தம் விநியோகித்து வருகின்றன. பிள்ளையார் ஸ்ரோர்சின் உரிமையாளர் திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை அன்றிரவு கொழும்பில் இருந்தார். அவருடைய மகன் திரு. இ. இரத்தினேஸ்வரன் வீட்டிலிருந்தார். பிள்ளையார் ஸ்ரோர்ஸ் கடைக்குப் பின்புறத்தில் அவர்களுடைய வீடு இருக்கின்றது.

ஈழநாடு தினசரி அலுவலகத்தை எரித்து அழித்தவர்கள் பிள்ளையார் ஸ்ரோர்சின் முன் வந்து நின்றனர். அதே ஆட்கள் காக்கி உடையில் வந்து பிள்ளையார் ஸ்ரோருக்குத் தீ வைத்தனர். [31] இரவு 9.20 மணிபோல பிள்ளையார் ஸ்ரோர்சின் வெளிக் கதவு உடைத்துத் திறக்கப்பட்டது. இருபது இருபத்தைந்து பேர் சத்தம் இட்டபடி உள்ளே நுழைவதை திரு. இ. இரத்தினேஸ்வரன் கண்டார். அவர்கள் கைகளில் பலவித ஆயுதங்கள் இருந்தன. ஸ்ரோரில் அடுக்கி

வைப்பப்பட்டிருந்த யானை மார்க் போத்தல்களை அடித்து உடைத்தனர். அப்போது ஸ்ரோர்ஸ் மண்டபத்தில் நான்கு விநியோக லொறிகளும் ஒரு 404 போஜோ காரும் நின்றிருந்தன. அவர்கள் லொறிகளின் டயர்களுக்குப் பெற்றோல் ஊற்றித் தீவைத்தனர். காருக்கும் நெருப்பு மூட்டினர். நெருப்பு எரிவதைப் பார்த்து அட்டகாசமாய் சிரித்தனர். அரை மணி நேரம்வரை நின்றிருந்தனர்' [32].

பிள்ளையார் ஸ்ரோர்சுக்குச் சொந்தமான நான்கு லொறிகள் கருகி அழிந்து போயின; எரியமுடியாத இரும்புகளைத் தவிர அந்த லொறிகளில் எதுவும் மிச்சமில்லை. 6 ஸ்ரீ 404 கார் எரிந்துபோனது. தரையிலிருந்து கூரைவரை பெட்டி பெட்டியாக அடுக்கிவைத் திருந்த யானை மார்க் சோடாப் போத்தல்கள் தீயில் வெடித்து, உருகி, வெவ்வேறு வடிவங்களில் சிதறி மலையாகக் கிடந்தன. ஏறத்தாழ 20 ஆயிரம் போத்தல்கள் தீயில் அழிந்து போயின. அந்த ஸ்ரோரிலிருந்த ஏராளமான தானிய மூடைகளும் தீயில்கருகிப் போயின. லொறிகள் விளாசி எரிந்ததால், அந்தப் பிள்ளையார் ஸ்ரோஸ் மண்டபத்தின் ஒரு பகுதி தீப்பிடித்து எரிந்துபோயிற்று. இருப்புக் கேடர்கள் நெளிந்தும் வளைந்தும் சிதறிக் கிடந்தன. ஏறத்தாழ 20 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை பிள்ளையார் ஸ்ரோஸ், கயவர்களின் வன்செயலால் இழந்தது.

பிள்ளையார் ஸ்ரோசுக்குத் தீயிட்ட அந்த அயோக்கியர்கள் அதன் அருகிலிருந்த நான்கு கடைகளையும் உடைத்து எரித்தனர். 'ரேடோ ரேடர்ஸ்' என்ற கடையும் அதனுள் இருந்த 200 மிளகாய் மூடைகளும் எரிந்து சாம்பலாகின. அதன் அருகிலிருந்த சிவலிங்கம் மோட்டோஸ்' என்று உதிரிப்பாகங்கள் விற்கும் கடையும் தீக்கிரையாகியது: அதனை அடுத்திருந்த அசோகன் பாக்குச் சீவல் தொழிற்சாலையும், திருச்செந்தூர் ஏஜன்சியும் எரிந்து சிதறிப்போயின: திருச்செந்தூர் ஏஜன்சியிலிருந்த பல மூடைகள் சீமெந்தும், பலசரக்குகளும் கனலில் கருகிப்போயின.

இவற்றுக்கு எல்லாம் பெற்றோல் ஊற்றி எரித்த அந்தப் பயங்கரவாதிகள், முட்டாஸ் கடைச் சந்தி மூலையிலிருந்த திரு. வி. வ. வடிவேலு என்பவரின் நகைக்கடையையும் தீயிட்டுக் கொளுத்தினர். அதனை கொளுத்திவிட்டு, காங்கேசன்துறை வீதியில் திரும்பி, யாழ்நகருக்குச் சென்றனர். காங்கேசன்துறை வீதியில் இருந்த நகைக்கடை ஒன்றை (புஸ்பா ஜுவலறி) அவர்கள் உடைத்துத் திறக்க முயன்றிருக்கின்றனர். கதவிற்குக் குறுக்காக இடப்பட்ட இரும்புக்கேடர் வளைக்கப்பட்ட நிலையில் விட்டுவிட்டுச் சென்றனர். அதே வீதியிலுள்ள முருகன் ஸ்ரோஸ் என்ற கடையும் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டது. அதே வீதியில் எலெற்றிக்லைன்ஸ் ஒன்றும், எவர்சில்வர் கடையும் உடைக்கப்பட்டு, அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

## சி. எஸ். கே. சந்தியில்.....

காங்கேசன்துறை வீதியும், ஆஸ்பத்திரி வீதியும் இணைவது சி. எஸ். கே. சந்தியாகும். காங்கேசன்துறை வீதியால் வந்த பயங்கரவாதிகள், சி. எஸ். கே. சந்தியில் இருந்த ஐந்துகடைகளை பெற்றோல் ஊற்றிக் தீயிட்டுக் கொளுத்தினர். நியூ லோகு றேடேர்ஸ் என்ற தேங்காய் விற்பனைக்கடைகள் மூன்றை, முதலில் தீயிட்டு எரித்தனர். தர்மேந்திராஸ் அடைவுகடையையும் அவர்கள் எரித்தனர். மேல்மாடியுடன் அக்கடை எரிந்து சாம்பராகியது. அடைவுகடைக்கு அருகிலிருந்த பல சரக்குக் கடையொன்றையும் வெளிக்கதவில் பெற்றோலை ஊற்றி நெருப்பு மூட்டினர். கதவுகள் அரைகுறையாக எரிந்த நிலையில் அக்கடை தப்பியது.



(நூலகம் எரிந்ததால் திக்பிரமையடைந்த நூலக ஊழியர் நாடகக் கலைஞர் திரு. இ. பற்குணம்)

## பழைய சந்தையின் புதிய கடைகள்

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் திகதிக்கு முன்னர், ஆஸ்பத்திரி வீதிக்கும் பசார் வீதிக்கும் இடையில் யாழ் நகரின், பழம்பெருமை வாய்ந்த சொக்கட்டான் வடிவச் சந்தைகள் இரண்டில் ஒன்றிருந்தது. அதனை 1977, ஆகஸ்ட் 23–ல் பொலிசார் தீயிட்டு எரித்து தரைமட்டமாக்கினர். அந்த இடத்தில் பின்னர் புதிதாக தொடர் கடைகள் மாநகர சபையால் அமைக்கப்பட்டு அண்மைக் காலத்தில்தான் வழங்கப்பட்டிருந்தன. பாய்க் கடைகளும், பாக்கு சீவல், வெற்றிலை, புகையிலைக் கடைகளுக்கும் "நவீன மார்க்கட் கடைகள் ஏன் என மாநாகர சபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் அன்று நினைத்தாரோ? அல்லது அதிக பணம் செலவிட்டுக் கட்டினாலும் 'ரெண்டர்' மூலம் 50 ஆயிரம், 60

ஆயிரத்துக்கு இந்தக் கடைகளைக் கொடுத்து மாநகரசபைக்கு பணம் சேமிக்கத்தான் முடியுமா என நினைத்தாரோ? தெரியவில்லை. தேயிலைத் தோட்டங்களில் காணப்படும் தொடர் காம்பராக்கள் (லயம்) மாதிரி, மாநகர சபை 'பாத்ரூம்' அளவுகளில் கடைகளை அவசரம் அவசரமாகக் கட்டி வழங்கியிருந்தனர். அந்த ஏழைக் கடைக்காரர்களின் இந்தக் கடைகளைக்கூட இந்தமுறை இந்தக் கொடியவர்கள் விட்டு வைக்கவில்லை. 1977, ஆகஸ்ட் 23ல் பழைய சந்தை எரிந்ததால் சகலதையும் இழந்த அதே கடைக்காரர்களில் பலர், 1981, யூன் 1 ஆம் திகதி இரவும் சகலத்தையும் மீண்டும் இழந்து நிற்கின்றனர்.

ஆஸ்பத்திரி வீதியை நோக்கியவாறு இருந்த பாய்க்கடைகள் முதலில் தீயிடப்பட்டன. ஆனால் திருவாளர்கள் சந்திரசேகரம் சின்னத்துரை சிவகுமார். கனகலிங்கம், லோகநாதன், திருலோகநாதன், பரமசாமி ஆகியோரின் கடைகள் தீயில் எரிந்து போயின. பசார் வீதிக்குச் சாமாந்தரமாக அமைந்திருந்த தொடர் கடைகளில் பன்னிரண்டு கடைகள் எரிந்து போயின; கூரைகள் முற்றாக எரிந்து, சிதறி விழுந்து கிடக்கின்றன.

## எஞ்சிய பழைய சந்தையின் நிலை

யாழ்ப்பாண நகரத்தில் பழமையின் சின்னமாக எஞ்சிநின்றது சொக்கட்டான் வடிவப்பழமைவாய்ந்த சந்தையாகும். நூற்றி ஏழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட சந்தை, வெண்சுதைக் கட்டிடம். 1977, ஆகஸ்ட் 23, அமளியில் இதே போன்றதொரு சந்தை பொலீசாரால் அழிக்கப்பட்டது. இந்தத் தடவை அதன் சோடிக் கட்டிடத்தை அவர்கள் ஈவிரக்கமின்றி நெருப்பு வைத்து அழித்தனர்.

சந்தையினுள் நுழைந்த அவர்கள், சந்தைக்குள் அமைந்திருந்த கடைகள் பலவற்றிற்குப் பெற்றோல் ஊற்றி தீயிட்டனர். இக்கடைகளில் பல, முதலில் சூறையாடவும் பட்டன. பின்னரே தீவைக்கப்பட்டது. பழைய சந்தையினுள் இருந்த நாற்பத்தாறு கடைகளும் ஒரேவேளையில் எரிந்து சாம்பலாகின. பலசரக்குக் கடைகள், பழக்கடைகள் எனப்பல கடைகள் சந்தையினுள் இருந்தன. பழைய சந்தைக்கு அருகிலிருந்த மரக்கறிச் சந்தைக் கடைகள் யாவும் தீயினால் எரிந்து சரிந்து போயின. நாளாந்தம் 155 பேர் வியாபாரம் செய்து பிழைக்கிற சந்தை அது. அதனை அக்கயவர் கூட்டம் விட்டுவிடவில்லை.

யாழ்ப்பாண நகரத்தின் நவீனமார்க்கட் கட்டிடத்திற்கும் எரிந்துபோன பழைய சந்தைக்கும் இடையில் ஆறு கடைகள் இருந்தன. இரண்டு புத்தகக் கடைகளும் நான்கு தையல் கடைகளும் அவையாகும். திரு. எஸ். கிருஷ்ணசாமி, திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் என்போரின் இரண்டு புத்தகக் கடைகள் எரிந்து தரைமட்டமாகிக் கிடக்கின்றன. ஏனைய நான்கு தையல் கடைகளும் எஞ்சவில்லை.

கடைகள் முன்பு இருந்தன என்பதற்கு அடையாளம் இன்றியே அந்தத் தொடர் கடைகள் தரைமட்டமாகிக் கிடக்கின்றன. திரு. எஸ். கிருஷ்ணசாமி தனது முழுச் சொத்துக்களையும் இழந்து, வீதிச்சந்தியில் பேப்பர்களை வெயிலில் நின்று விற்கும் நிலைக்கு இரக்கமற்ற வன்செயலாளர்கள் விட்டுள்ளனர். முதல்நாள் நகரில் கட்டவிழ்த்து விடப்பட்ட அசம்பாவிதங்களால் தனது புத்தகக் கடைகளை இழந்த திரு. ஆர். பூபாலசிங்கம், இரண்டாம் நாள் நகரில் நிகழ்ந்த அராஜகத்தால் மூன்றாவது கடையையும் இழந்தார். இந்தக் கடைகளோடு இணைந்து பசார் வீதியில் அமைந்திருந்த மூன்று கடைகளும் தீப்பிடித்து எரிந்து தரைமட்டமாகின. ஒரு புகையிலைக் கடையும் இரண்டு தையல் கடைகளும் அவ்வாறு எரிந்து அழிந்து கிடக்கின்றன. பழைய சந்தையோடு இணைந்து ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்த சைக்கிள் பாதுகாப்புக் கட்டிடம் முற்றாக எரிந்து போனது. பழைய சந்தையும் அதனோடு இணைந்த கடைகளும் மரக்கறிச் சந்தையும் இக்கொடுமதியினரால் எரித்து அழிக்கப்பட்டதால் மாத்திரம் ஏறத்தாழ 210 பேரின் வியாபார ஸ்தலங்கள் அழிந்து போயின.

பழைய சந்தை இருந்த இடத்தில் இன்று கற்குவியல்களும், எஞ்சி நிற்கும் தூண்களும்தான் உள்ளன. யாழ்நகரின் பழைய வரலாற்றைப் பறைசாற்றிய கட்டிடம் இன்று கற்குவியலாகக் கிடக்கின்றது.

## சிலைகள் உடைக்கப்பட்டன!

ஆஸ்பத்திரி வீதியில் நமது இலக்கியப் பெரியார்களின் சிலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. தீவைத்துக் கொழுத்திய அத் தீயோர் கண்களில், அந்தச் சந்தியில் அமைதியாக அமர்ந்திருக்கும் திருவள்ளுவரின் சிலைபட்டது. உலகிற்கெல்லாம் நல்வழி கூறிய அந்த ஆத்மா இக்கொடிய செயல்களை பார்த்துக் கொண்டிருந்தது. சிலையைக் கூட அவர்களால் அனுமதிக்க முடியவில்லை. அலவாங்கால் அடித்து அவர் தலையை அவர்கள் உடைத்தனர். தலை பின்புறமாகச் சரிந்தது. வள்ளுவப் பெருமானின் கைகளையும் அந்தக் துட்டர்கள் அடித்து உடைத்தனர்.

ஒளவைப்பாட்டியையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஒளவையாரின் மூக்கை உடைத்தனர். ஏடுதாங்கிய அவரின் கரத்தையும் அவர்கள் அடித்து உடைத்தனர். பஸ் நிலையத்துக்கு முன்பாக சோமசுந்தரப் புலவரின் சிலை அமைந்திருக்கிறது. அவரின் தலையை கழுத்துடன் உடைத்த அக்கயவர்கள் தலையைப் பின்புறமாகவும் திருப்பிப் திருகிவிட்டுள்ளனர். சோமசுந்தரப் புலவரின் வலது கை முழங்கையுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. அவரின் கால் பெருவிரலையும் அடித்து உடைத்தனர். ஆஸ்பத்திரிக்கு முன்பாக அமைதியாகச் சிரித்தபடி நின்றிருக்கும் அஹிம்சாவாதி மகாத்மா காந்தியின் ஒரு காலை அந்த ஹிம்சாவதிகள் அடித்து உடைத்திருந்தனர்.



('ஈழநாடு பத்திரிகைக் காரியாலய முன்றலில் எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளும் சைக்கிள்களும்)

இந்தச் சிலைகள் யாவும் 1977 ஆகஸ்ட் 23ஆம் திகதி வன்செயலின் போதும் அடித்து உடைக்கப்பட்டன. இன்று மீண்டும் உடைக்கப்பட்டன.

## கொள்ளைகள் ..... தீவைப்பு

யூன்,1ஆம் திகதி இரவு யாழ்நகரில் மேலும் சில கடைகள் உடைக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டன. யாழ்நகரின் நவீன சந்தை மூன்று பிரிவுகளைக் கொண்டது. கிழக்குப்புற நவீன சந்தைக் கட்டிடத்திலுள்ள அசோகா ரெக்ஸ்ரைல்ஸ் மே,31ஞாயிறு இரவே இக்கயவர்களால் கொளுத்தப்பட்டது. நவீன சந்தைக் கட்டிடத்தின் மத்திய கட்டிடத்திலுள்ள 'பாட்டா' செருப்புக்கடைகள் இரண்டும் ஞாயிறு இரவே எரிக்கப்பட்டன. நவீன சந்தையின் மேற்குப் புறக்கட்டிடத்தில் ஞாயிறு எதுவித அழிவும் ஏற்படவில்லை. அக்குறையை திங்கள் இரவு அந்த பயங்கரவாதிகள் நீக்கி வைத்தனர். மேற்குப்புறக் கட்டிடத்தில் மத்திய கடைகளாக அமைந்திருந்த இரண்டு புடைவைக்கடைகள் திங்கள் இரவு எரிக்கப்பட்டன. இரும்புச்சுருள் கதவுகளைத் தகர்த்து, கொள்ளையடிக்கப்பட்ட பின்னர் அவை தீயிடப்பட்டிருந்தன. நவீன மார்க்கட்டின் ஒரு பகுதிக் கூரை தகர்ந்து போனது.

நவீன மார்க்கட்டின் மத்திய கட்டிடத்தினுள் அவர்கள் நுழைந்து கொள்ளையிட்டுள்ளனர். இக்கட்டிடத்தின் மேற்குப்பக்க வெளி இரும்புச் சுருள் கதவை உடைக்க முடியாது போனது. ஆனால் இரும்பாலான கொழுக்கியையும் இழுப்பானையும் இந்த இரும்புச்சுருள் கதவில் மாட்டி, மறுமுனையை 'டிரக்' ஒன்றில் பிணைத்து, அதன் மூலம் இழுத்து,கதவைப்பிடுங்கியுள்ளனர். அதன்பின் உள்ளே நுழைந்து ஜெமினி சலூன் போன்ற சில கடைகளை உடைத்தனர். 'ஈறோ றெக்கோடிங்பார்' என்ற கடையை உடைத்து திறந்தனர். ரேப்றெக்கோடர்கள், றேடியோக்கள், ஹெயர் றையர்கள், ஃபான்கள் முதலானவற்றை அவர்கள் தங்கள் இஷ்டம்போல அள்ளிக்கொண்டனர். அக்கடையை சுத்தமாகக் கொள்ளையிட்டு விட்டு வெளியேறினர்.

அதே இரவு பஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த 'டில்கா வாச்வேக்ஸ்' உடைத்து கொள்ளைக்குள்ளானது. பலவகை மணிக்கூடுகள் சூறையாடப்பட்டன. டில்கா வாச் வேக்ஸ் உரிமையாளர் திரு. தி. பாலசுப்பிரமணியம் பலத்த நஷ்டத்திற்கு உள்ளாகினர்.

இந்தக் கொள்ளையர்கள் வெளியேறியதும் உள்ளூர் கள்ளர்களும் தங்கள் கை வரிசைகளை காட்டியுள்ளனராம். சுப்பையா அன்ட் கோவில் ஞாயிற்றுக்கிழமை எஞ்சிய மதுமானங்களை உள்ளூர் கள்ளர்கள் அள்ளிச் சென்றனர். அதே இரவு சாம்பசிவம் அன்கோவிலும் உள்ளூர் கள்ளர்கள் திருடியுள்ளனர். அந்த வீதியிலுள்ள 'ரதிவார்ச் வேக்' கும் உடைத்துத் திறக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் திரு. நடராசா சுகயினமாக இருந்தவர். இவற்றைக் கேள்விப்பட்ட மறுநாளே காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.



('ஈழநாடு எரிக்கப்பட்டபோது எரிகாயங்களுக்குள்ளான திரு. ஐயா சச்சிதானந்தம்)

ஆஸ்பத்திரி வீதியில், பொன்ட்ஸ் இன்ரிரியூட் அருகிலுள்ள தேனீர் கடையொன்றும் இந்தக் கயவர்களால் எரிக்கப்பட்டு அழிந்து போனது. யாழ் நகரில் இரண்டாம் நாளிரவு பெருத்த சேதங்களை ஏற்படுத்திய அவர்கள் திரும்பிப் போகும் போது பொதுசன நூல் நிலையத்திற்கு அருகிலுள்ள யாழ்ப்பாண விளையாட்டுக் கழக கட்டிடத்தையும் எரித்துவிட்டுச் சென்றனர். அமரர் செல்வநாயகம் நினைவு ஸ்தூபிக்கு அருகிலுள்ள இக்கட்டிடம் அழிந்து போனது. இக்கட்டிடத்தின் கூரையில் ஒரு பகுதி அழிந்து விட்டது. அங்கிருந்த தளபாடங்கள் யாவும் எரிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு அழிவுகளும் யாழ்ப்பாண நகரத்தில் இரண்டாம் நாள் இரவு நிகழ்ந்து முடிந்தன. அதே இரவு சுன்னாகத்திலும் இன்னொரு கோஷ்டி பயங்கரவாதிகள் கடைகளுக்குத் தீயிடலிலும் சூறையாடலிலும் ஈடுபட்டனர்.

## சுன்னாகத்தில் தீ

'சுன்னாகம் பொலீஸ் நிலையம், காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பட்டினத்தில் இருக்கின்றது. இந்த ஊர்காவல் நிலையத்திற்கு அருகில் இருந்த ஐந்து கடைகளும், முன்னால் இருந்த ஐந்து கடைகளும் யூன் 1ம் திகதி கயவர்களால் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டன. சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வரிசையாக இருந்த கடைகளும் கொள்ளை யடிக்கப்பட்ட பின்னர் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. கொள்ளைப் பொருட்கள் சில சுன்னாகம் பொலிஸ் உத்தியோகத்தர் சிலரின் வீட்டிலிருந்தன என்று எமக்கு தகவல் கிடைத்தது. அதை நான் பிரிகேடியர் வீரத்துங்காவுக்கு தெரிவித்தேன்' எனத் தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதியின் கிழக்குப்பக்கத்தில் அமைந்திருந்த ஐந்து கடைகள் எரிக்கப்பட்டுச் சிதைந்து கிடக்கின்றன. யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இரண்டு கிளைகள் இந்த வரிசையில் இருந்தன. அவை சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் அருகிலுள்ள மொகிதீன் கண்டு ஸ்ரோர்ஸ் முற்றாக எரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஹாட்வெயர் ஸ்ரோராகும். பெயின்ற் வகைகள் தீயில் எரிந்துருகிப் போயின. மொகிதீன் கண்டு ஸ்ரோருக்கு அருகிலிருந்த வேறிரு கடைகளும் தீக்கு இரையாகின.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த எட்டுக் கடைகள் நெருப்புக்குள்ளாகி அழிந்தன. வைக்கோல்கடை ஒன்று முற்றாக எரிந்து தரைமட்டமாகக் கிடக்கிறது. 'சித்திரகலா போட்டோஸ்' என்ற ஸ்ரூடியோ ஒன்று

எரிக்கப்பட்டுள்ளது. அதன் அருகிலுள்ள 'ரஞ்சனா கபே' யும் தீயின் பிடியிலிருந்து தவறவில்லை. இவைதவிர வேறு ஐந்து கடைகளும் அதே வரிசையில் எரிக்கப்பட்டுச் சிதைந்து கிடக்கின்றன.

இவ்வளவும் இரண்டாம் நாள் இரவு (1981, யூன், 1) யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து முடிந்தன. '1 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் அனா செனிவிரத்னாவும், பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் இருக்கும்போதே அதே பொலிஸார் தீ வைப்பில் ஈடுபட்டனர்',[33] எனத் தமிழ்த் தலைவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

## உயர் அதிகாரிகள் மாநாடு

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து முடிந்த அசம்பாவிதங்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க உயர் அதிகாரிகள் மாநாடு யாழ்ப்பாணத்தில் திங்கள் இரவு கூடியது. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டியா இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சி. ஏ. தர்மபால அமைச்சரவைச் செயலாளர் ஜீ. வி. பி. சமரசிங்க, பொலீஸ்மா அதிபர் அனாசெனவிரத்ன, பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க ஆகியோரும், வடமாகாண இராணுவ, கடற்படை பொறுப்பாதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிரதிப் பொலீஸ்மா அதிபர் எட்வேட் குணவர்த்தனா வடபாகப் பிரதி பொலிஸ்மா அதிபர் மகேந்திரன், பொலிஸ் அதிபர் டெனிஸ் பீற்றர் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணப் பாதுகாப்பை இராணுவமும், கடற்படையும் பொறுப்பெடுப்பதென முடிவு செய்யப்பட்டது. பொலீசார் தங்கள் இருப்பிடங்களில் (பராக்) இருக்க வேண்டும் என முடிவு செய்தனர். பிரிகேடியர் வீரதுங்க பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

'யாழ்ப்பாணத்தில் நடந்த குழப்பங்களுக்கு அங்கு நிரந்தரமாக இருக்கும் பொலீசார் பொறுப்பில்லை. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வெளியிடங்களில் இருந்து 400 பொலீஸ் உத்தியோகத்தர்கள் வந்திருக்கின்றனர். அவர்களில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதால் அவர்களை உடனடியாக மறுநாள் காலையே அவர்களது முன்னைய பொலீஸ் நிலையங்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்' என்பது மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இரவு பயங்கரத்துடன் கழிந்து போக, மூன்றாம் நாள் பகல் சோகத்துடன் ஆரம்பமாகியது.

# மூன்றாம் நாள்: 2, யூன், 1981

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் ஊரங்குச் சட்டமும் மாலை 5 மணியிலிருந்து மறுநாள் காலை ஐந்து மணிவரை யாழ் மாநகரசபை எல்லைக்குள் பிறப்பிக்கப்பட்டது. யாழ்மாவட்டத்தில் அவரசகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து செய்தித் தணிக்கையும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

(தலையுடைந்த நிலையில் சோமசுந்தரப் புலவரின் சிலை)



மூன்றாம் நாள் அதிகாலை யாழ்ப்பாண நகரத்தில் எஞ்சிய கடையில் இருந்த பொருட்கள் யாவும் உரிமையாளர்களால் லொறிகளிலும் வண்டிகளிலும் ஏற்றிப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. வெறும் கடைகள் மட்டுமே எஞ்சின. சுன்னாகத்திலும் கடைகளிலிருந்து பொருட்களை வர்த்தகர்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர். யாழ்ப்பாண நகரம் எங்கும் கடைகள் திறக்கப்படவில்லை. பாடசாலைகள் இயங்கவில்லை. அலுவலகங்கள்


இயக்கப்படவில்லை. யாழ்மாவட்டத்தில் சோகமும், ஆவேசமும், ஏமாற்றமும் நிலவியது. யாழ்நகர வீதிகளில் இராணுவத்தினர் சந்திக்குச் சந்தி நிறுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திச் சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டிருந்த தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசியுடன் அவசரமாகக் கொழும்புக்கு விமான மூலம் வந்து சேர்ந்தார். ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துரைக்கக் கொழும்பு வந்தார். அதேபோல ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா கூட்டிய அவசர மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக, யாழ்ப்பாணத்திலிருந்தும் அதிகாரிகள் அன்று பிற்பகல் கொழும்பு சென்றனர். பிரிகேடியர் திஸ்ஸவீரதுங்க, மீன்பிடித்துறை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைச்சாமி, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜேக்கூன் ஆகியோர் விசேஷ விமானத்தில் கொழும்பு வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்த விமானத்தில் யாழ்ப்பாணக் கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அதிவேக அதிரடிப்படை இராணுவ வீரர்கள் யாழ்ப்பாணம் வந்தனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 3 ஆயிரம் சிங்களமக்கள் தமது இடங்களை விட்டு வெளியேறி தென்னிலங்கை சென்றனர். யாழ்ப்பாண நாகவிகாரையில் ஏராளமான சிங்கள மக்கள் காணப்பட்டனர்.

## ஒலிபரப்பாகிய செய்திகள்

அன்றுமாலை அகில இந்திய வானொலி, மணிலாவின் (பிலிப்பைன்ஸ்) ரேடியோ வெரித்தாஸ், பி. பி. சி. என்பன யாழ்ப்பாணத்தில் கடந்த இருநாட்களும் நிகழ்ந்து போன வன்செயல்களைப் பற்றிய செய்திகளை விரிவாக ஒலிபரப்பின. மணிலா ரேடியோ வெரித்தாஸ் வானொலி ஒலிபரப்பிய செய்தி பின்வருமாறு அமைந்தது.

"............ வட இலங்கையில் யாழ்ப்பாண நகரில் சீருடை அணியாத பொலீஸ்காரர்கள் தமிழர் ஐக்கிய சுதந்திரக் கட்சியின் செயலகக் கட்டிடத்தையும் வேறு பல கட்டிடங்களையும் தீ வைத்துக் கொழுத்தினர் என்று சில செய்திகள் கூறுகின்றன. எதிர்க்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பொலீஸ்காரர்கள் ஒருவர் கொல்லப்பட்டதால் சினம் கொண்டெழுந்த பொலீஸ்காரர்கள் யாழ்ப்பாண நகர நாடாளுமன்ற உறுப்பினரின் இருப்பிடத்தையும், பிரதான கடைவீதியையும், பல கடைகளையும், வாகனங்களையும் தீயிட்டுக் கொழுத்தினர். தமிழர்களைப் பொலீஸ்காரர்கள் திட்டமிட்டுத் தாக்குவதைக் கண்டித்து தமிழர் ஐக்கிய சுதந்திரக் கட்சி இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் முழுவேலை நிறுத்தம் நடத்திற்று. வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்ற இன்று, யாழ்ப்பாண நகரபிதா கொல்லப்பட்டிருக்கிறார்.



(பிள்ளையார் ஸ்ரோர்ஸில் எரிக்கப்பட்ட போஜோ 404 காரும் தீயில் வெந்து உருமாறிய சோடாப் போத்தல்களும்)

'யூனிபோம் அணியாத பொலீஸ்காரர்கள் இரவு நேரங்களில் நகரை சூறையாடினர். யாழ்ப்பாண நூல் நிலையத்திற்குத் தீயிட்டனர் என்று யு. பி. செய்தி நிறுவனம் கூறுகிறது. பொலீஸ்காரர்கள் முகாமை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருப்பினும் அந்த உத்தரவு மதிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. இராணுவ வீரர்கள் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டிருப்பினும் பயனேதுமில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'சுதந்திரன்' என்ற தமிழர் நாளேட்டின் அலுவலகம் கொளுத்தப்பட்டது. இந்நிலையில் இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கை அரசு அவசர நிலை ஆட்சியைப் பிரகடனப்படுத்தியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இனி யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் அனைத்தும் அவசர நிலைச் சட்டத்தின்படி, தணிக்கை செய்யப்பட்டதின் பின்னரே வெளியாகும்.'

பி. பி. சி. வானொலி பின்வருமாறு ஒலிபரப்பியது :

"............ இலங்கையின் வடபுறமான தமிழ் வட்டாரத் தலைநகர் யாழ்ப்பாணத்தில் இனங் கண்டுகொள்ள முடியாத கும்பல் ஒன்று கடைகளைக் கொள்ளையடித்தும் அழிவு வேலைகளையும் செய்ததாகக் கொழும்பிலிருந்து நமது செய்தி நிருபரான திரு. மேமன் டி சில்வா அவர்கள் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாளையின்று மறுநாள் வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் களத்தில், யாழ்ப்பாண மாவட்டம் ஒரு போராட்டக் களமாகவே இப்போது விளங்கி வருகின்றது. பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு விட்டன. அரச அலுவலகங்களில் எல்லாம் வேலைகள் முடக்கம். யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகம் பலத்த தாக்குதல்களுக்குள்ளாகிச் சேதப்பட்டுள்ளதாகச் செய்திகள் அறிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் த. வி. கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர். திரு. யோகேஸ்வரன் அவர்களின் இல்லம் தீ வைக்கப்பட்டது. தம்பதியர் காய முற்றதாகவும் செய்திகள் அறிவிக்கின்றன. இந்த வன்முறை சிங்களப் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவர் ஞாயிற்றுக் கிழமையன்று கொல்லப் பட்டதையொட்டி மூண்டதாகக் கூறப்படுகிறது. சென்றவாரம் திரு. தியாகராசா கொலைக்குக் காரண மானவர்களே, அந்தப் பயங்கர வாதக் குழுவினரே, சார்ஜன்ட் கொலைக்கும் மற்றும் இரு பொலீஸ்சாரைக் குண்டடியால் காயப்படுத்தி யிருப்பதற்கும் காரணம் என்று பொலீஸ் காவல்துறையினர் கருது கின்றார்கள். யூ. என். பி. தேர்தலில் ஈடுபட்டதற்காகவே அதன் தலைமை வேட்பாளர்

(நான்கு லொறிகளையும் ஒரு 404 போஜோ காரையும் 'பிள்ளையார் ஸ்ரோர்ஸ்' கட்டிடத்தையும் தீயில் இழந்த திரு. இராஜதுரை )



திரு. தியாகராசா சென்றகிழமை கொல்லப்பட்ட செய்தியை நீங்கள் அறிவீர்கள். நாடு முழுவதும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் வியாழக்கிழமையன்று நடைபெறவுள்ளன. சிங்கள தெற்கத்திய மாநிலங்களில் எல்லாப் பிரதான எதிர் அரசியற் கட்சிகளும், சிறிமாவோ பண்டார நாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்தத் தேர்தலில் ஈடுபடாது ஒதுங்கித் தள்ளியிருப்பதையும் சிறப்பாகக் கூறவேண்டும். யூ. என். பி. ஆளும் கட்சி 24 மாவட்டங்களில் 7 மாவட்டங்களில் ஏற்கனவே போட்டியில்லாமல் வென்றுள்ளது.


'யாழ்ப்பாணத்தில் T. U. L. F.க்கு இருக்கும் ஏகபோகச் செல்வாக்கை எப்படியாவது குறைக்கவேண்டும் என்று யூ. என். பி. ஐக்கிய தேசியக் கட்சி அதாவது ஆளுங்கட்சி, தன்னாலான செல்வாக்கு எல்லாவற்றையும் ஒருங்குதிரட்டி விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

'தியாகராசா கொலையை த. வி. கூ. அர்த்தமில்லாத பொருளில்லாத வன்முறை என்று கண்டித்திருந்தாலும் கூட, த. வி. கூ. க்கும் பாதுகாப்புப் பொலீஸ் காவலருக்குமிடையில் உறவு ஒன்றும் அவ்வளவு நேர்சீராக இல்லை என்று எண்ண இடமிருக்கிறது........'

## பண்ணையில் நிகழ்ந்த படுபாதகங்கள்

2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் வேளையில் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள பண்ணையடியில் சில தாக்குதல்களும் வழிப்பறிகளும் நிகழ்ந்தன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மண்டைதீவு அஞ்சல் நிலையத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் கதிரவேலுவும் அவருடன் வந்த திரு. சபாரத்தினமும் தாக்கப்பட்டனர். அவர்களுடன் ஜீப்பில் வந்த சிங்களப் பெண்மணியும் சிங்களக் காடையர்களால் தூஷிக்கப்பட்டார். திரு. ச. கதிரவேலு விசேஷ பொலீஸ் குழுவிடம் பின்வருமாறு தனக்கு நேர்ந்தவற்றை விபரித்துள்ளார்.

"நான் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜீப்பில், யாழ் பெரியாஸ்பத்திரியிலிருந்து மண்டைதீவு ஒலிபரப்பு அஞ்சல் நிலையத்திற்கு போய்க் கொண்டிருந்தேன். ஜீப்பைச் சாரதி திரு. செல்வரத்தினம் செலுத்தினார். என்னோடு சிங்களப் பெண்மணியான திருமதி லக்ஷ்மிகாந்தியும் தனது கைக் குழந்தையுடன் முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார். பொறியியலாளர் திரு. விஜயசூரியாவின் மகள் திருமதி லக்ஷ்மிகாந்தி ஆவார். எமது ஜீப் பண்ணையிலுள்ள பொலீஸ் விடுதியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. அப்போது அங்குள்ள வீதியில் ஆறு அல்லது எட்டு அடி நீளமுள்ள இரும்புப் பைப்புகளையும் கிறீஸ் கத்திகளையும் வைத்திருந்த சிவில் உடைப் பொலீசார் எமது ஜீப்பை மறித்தனர். சாரதி



(யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த சந்தை எரிந்து எஞ்சிய காட்சி)

நிறுத்தவே கைகளில் பைப் வைத்திருந்த இரு பொலீசார் சாரதியை ஜீப்பிலிருந்து இறங்கச் செய்தனர். இறங்கிய அவரைக் கைகளால் அங்கு நின்ற நான்கு பொலீசாரும் தாக்கினர். அவர் ஓடினார். ஓட ஓடத் தாக்கினர். பின்னர், அவரைக் கூட்டி வந்து ஜீப்பில் ஏற்றினர்.

"இவரைத் தாக்கிவிட்டுக் காந்தியிடம் பெயர், தகப்பன் பெயர் விபரம் கேட்டனர். "சிங்களப் பெண்ணான உனக்குத் தமிழனுடன் என்ன வேலை?" என்று கேட்டனர். கிறிஸ் கத்தியை அவரது நெஞ்சுக்கு நேரே ஒருவர் பிடித்தார். "கைக் குழந்தையுடன் இருக்கிறேன். என்னை ஒன்றும் செய்யாதீர்கள்" என அவர் சிங்களத்தில் சொன்னார். "தமிழர்களைக் கொல்ல வேண்டும்" என்று அப்பொலிசார் கூறினர். பொலீஸ்காரர் ஒருவர் என்னை ஜீப்பிலிருந்து இறங்கச் செய்து கல்வனைஸ்ட் பைப்பால் முதுகில் தாக்கினர். மூன்று முறை தாக்கினர். என்னை அங்கு மறித்துவிட்டு ஜீப்பைப் போகும்படி பணித்தனர். தாக்கிய அவர்கள் பின்னர் என்னைப் பண்ணைப் பாலத்துக்குக் கீழேயுள்ள கடல் நீருக்குள் தள்ளி வீழ்த்தினார்கள். இந்தக் காட்சிகளை எல்லாம் பல பொலீசார் பண்ணையிலுள்ள குடும்பத்தவர் விடுதிச் சுவரிலிருந்து பார்த்துப் கைகொட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

'தண்ணீருக்குள் விழுந்த என்னை அங்கே விட்டுவிட்டுப் பாதையால் வந்த வாகனங்களைத் தாக்கும் செயலில் அவர்கள் ஈடுபட்டனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவ்வாறு தாக்கப்பட்டனர். வேட்டி கட்டியிருந்த அந்த இருவரும் அடிகளால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். மோட்டார் சைக்கிளும் தாக்கப்பட்டது. என்மீது தாக்குதல் நிகழ்ந்த நேரம் சுமார் 2 மணி இருக்கும். இப்படி இந்தப் பொலீசாரின் கவனம் பாதையால் செல்லும் வாகனங்கள் மீது திசை திரும்பியதை அவதானித்த நான், கடலிலிருந்து வெளியேறி மண்டைதீவு அஞ்சல் நிலையத்தை நோக்கி ஓடினேன்.'

பண்ணைப்பாலத்தில் தொடர்ந்து பல அட்டூழியங்களும், வழிப்பறிகளும் நிகழ்ந்தன. இவைபற்றிய விபரங்களைத் தீவுப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சேகரித்து பொலிஸ் விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

## இரவு நிகழ்ந்த தாக்குதல்கள்

"அன்று இரவு 8.30 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் பலர் தாக்கப்பட்டனர். மல்லாகம் வீதியில் நவரத்தினம் என்பவர் மரணமானார். முன்னாள் நீதிபதி ஒருவரின் மகனும் தாக்கப்பட்டார். அத்தபத்து என்ற ஒருவர் பியசேன என்பவரால் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபின் மரணமானார். ஆனால் அவரைத் தமிழர்கள் சுட்டுக் கொலை செய்தார்கள் என்று பொலீசார் கொழும்புக்குச் செய்தி அனுப்பியிருந்தனர். இது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் நான் முன்னாள் செனட்டர் நடராசா மூலம் உண்மை நிலை என்ன என்பதை அறிந்து அதைப் பிரதமருக்குத் தெரியப்படுத்தினேன்" என தலைவர் அ. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அன்றிரவு சட்டத்தரணி திரு. தம்பிரத்தினம் அவர்களின் மகன் இளங்கோ பொலீசாரினால் தாக்கப்பட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். தெல்லிப்பளைச் சந்தியில் திரு. கோ. சண்முகராசா என்பவர் இரவு 7 மணியளவில் தாக்கப்பட்டார். அவர் முதலில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவரது தலையில் 22 தையல்கள் போடப்பட்டன. இவர்களைவிட திரு. வி. நவரத்தினம், திரு. சீவரத்தினம், திரு. வேலாயுதம் ஆகியோரும் தாக்கப்பட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

# சுன்னாகம் சந்தை எரிந்தது

சுன்னாகத்தின் மிகப்பெரும் பழைய சந்தைக் கட்டிடம் அன்றிரவு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இந்தச் சந்தைக் கட்டிடமும் சொக்கட்டான் வடிவத்தினதாகும். இச் சந்தைக் கட்டிடத்தினுள் 40 வியாபார ஸ்தலங்கள் இருந்தன. அவை அழிந்து போயின. சந்தைக் கட்டிடத்தின் கூரை எரிந்து விழுந்து விட்டது. சுண்ணாம்புக் காரைக் கட்டிடத்தின் தூண்கள் மாத்திரம், மாபாவிகளின் பாதகத்தை எடுத்துக் கூறியவாறு இன்று நிற்கின்றன. கற்குவியல்களும் செங்கல் ஓடுகளும் அங்கு குவிந்து கிடக்கின்றன.

சுன்னாகம் சந்தைக்கு அருகில் காங்கேசன்துறை வீதியில் காணப்படும் சிறிய கோவிலுக்கும் தீ மூட்டியுள்ளனர். தீயில் கோயில் சேதப்படவில்லை. ஆனால் அக்கோவிலின் தலவிருட்சமான புளியமரம் தீயில் கருகி நடுவால் தெறித்து முறிந்து கிடக்கின்றது.

அதே இரவு சுன்னாகம் சந்தியிலுள்ள மூன்று கடைகள் இந்தக் கயவர் கூட்டத்தால் எரிக்கப்பட்டுள்ளன. திரு. சபாபதிசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான இந்திரபவன் கூல்பார், திரு. இராசையா என்வருக்குச் சொந்தமான ராஜா ஸ்ரோர்ஸ், அவற்றின் அருகிலுள்ள இன்னொரு கடை என்பன மூன்று கடைகளாகும். இவை சூறையாடப்பட்டதன் பின்னரே எரிக்கப்பட்டன. 'ராஜா ஸ்ரோர்ஸ் ஒரு சைக்கிள் பாட்ஸ் கடையாகும். கூரைகள், கதவுகள் என்பன முற்றாக எரித்த நிலையில் சுவர்கள் மாத்திரம். தீயில் வெடித்துக் காட்சி தருகின்றன.

அவசரகாலநிலை நிலவிய அதே இரவு சுன்னாகம் நவீன சந்தையிலுள்ள இரண்டு கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. சுன்னாகம் பஸ்நிலையத்திற்கு முன்பாக இவை உள்ளன. திரு. ஏ. எஸ். சண்முகலிங்கத்திற்குச் சொந்தமான 'சன்ஜோய்கோஃபி அன்ட் கூல்பார்' எரிக்கப்பட்டது. அதன் அருகிலுள்ள 'ஆர். வி. பன்சி ஹவுஸும் தீயோரால் தீயிடப்பட்டது.

யாழ்ப்பாண நகரத்தில் அன்றிரவு ஒரு தீவைப்புச் சம்பவம் நடந்தது. கொட்டடி, சிவன்பண்ணை வீதியிலுள்ள யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையை யாரோ விஷமிகள் தீ வைத்து எரித்தனர். இக்கட்டிடத்திற்குக் கூரை வழியாகத் தீவைக்கப்பட்டது. 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் இக்கடையில் எரிந்து அழிந்தன. [35]

'சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கந்தரோடைக் கிளையும் அன்றிரவு தீக்கிரையாக்கப்பட்டது. இதில் மட்டும் ரூபா 40 ஆயிரம் பெறுமதியான பொருட்களும் தளபாடங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. [36]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மெயில் றெயினில் 3-ம் திகதிக்குரிய 'வீரகேசரி' பத்திரிகைப் பிரதிகளும் வந்தன. யாழ்நகரில் நடைபெற்ற அட்டூழியங்களைப் பற்றிய செய்திகளையும் படங்களையும்

அந்தப் பிரதிகள் தாங்கி வந்தன. வழமையிலும் பார்க்கக் கூடுதலானப் பிரதிகள் அன்று அனுப்பப்பட்டன. அப்பிரதிகள் யாவும் அன்றிரவு அனுராதபுரத்தில் வைத்து இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டது. அவை மக்களுக்குக் கிடைக்கவில்லை. செய்திகள் அவசரகாலச் சட்டப்படி தணிக்கை செய்யப்படாததால் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## நான்காம் நாள்: 3, யூன், 1981

1981, யூன் 3ஆம் திகதி புதன்கிழமை இரவு நிகழ்ந்து முடிந்த சம்பவங்கள் மகா பயங்கரமானவை. உயிர்க்கொலைகள் நிகழ்ந்து முடிந்த இரவு அது. அன்று பகல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அலுவல்கள் வழமைக்குத் திரும்பவில்லை. வர்த்தக நிலையங்கள் எதுவும் யாழ்ப்பாண நகரத்திலோ, சுன்னாகத்திலோ முற்றாகத் திறக்கப்படவில்லை.



(சி. எஸ். கே. சந்தியில் தலை ஒடிக்கப்பட்ட வள்ளுவரும் எரிந்துபோன கடைகளும்)

## தொழிலாளி சண்முகம் சுட்டுக் கொலை

3ஆம் திகதி இரவு நீர்வேலி வடக்கு கேராலிவத்தை ஒழுங்கையைச் சேர்ந்த சலவைத் தொழிலாளியான திரு. கணபதிப்பிள்ளை சண்முகம் என்பவர் சுடப்பட்டு மரணமானார். அவருடைய சடலம் உரும்பராய், ராஜ வீதியிலுள்ள சிவன் கோவிலடியில் கிடக்கக் காணப்பட்டது. 'அவர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது. ஆனால் தலையில் பிளவுக்காயம் இருந்தது. முற்பக்கத்தில் துளைக்காயம் இருந்தது. கடும் வீச்சான துப்பாக்கியால் இக்காயம் ஏற்பட்டிருக்கிறது. கிட்ட நின்றே இவர் சுடப்பட்டிருக்கிறார். மூளை சிதறியிருக்கிறது. இவரது மண்டையோடு முட்டைக்கோது போலக் காட்சி தந்தது. [37]

சூடுபட்டுக் கொலையுண்ட திரு. க. சண்முகத்திகு நான்கு ஆண்குழந்தைகள் உள்ளனர். விதவையான மனைவி திருமதி இராசலட்சுமி, வயதான பெற்றோர் ஆகியோர் யாவரும் இத்தொழிலாளியின் உழைப்பிலேயே தங்கியுள்ளனர். கொலையுண்ட திரு. க. சண்முகத்திற்கு வயது 40 ஆகும். மூத்தபிள்ளை பாஸ்கரனுக்கு 12 வயதும் கடைசிக் குழந்தை இராமநாதனுக்கு ஒன்றரை வயதும் நடக்கின்றன.

திரு. க. சண்முகத்தின் மரண விசாரணை நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் நடந்தது. சுன்னாகம் பொலீஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. சிவராசா சாட்சிகளை ஆஜர் செய்தார். அவ்வேளை திரு. சண்முகத்தின் மனைவி திருமதி இராசலட்சுமி கண்ணீரும் கம்பலையுமாகச் சாட்சியளித்தார்.

'...... இம்மாதம் 3 ஆம் திகதி அவர் வீட்டில் உடுப்புகளைச் சலவை செய்துவிட்டு, பிற்பகல் 5.30 மணியளவில் மூத்த மகன் பாஸ்கரனையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். அவர் தொழில் புரியும் லோன்றி முதலாளி குணத்தின் வீடு கச்சேரியடியில் உண்டு. மகன் பாஸ்கரனைக் குணம் வீட்டில் விட்டுவிட்டு, குணத்திடம் 5 ரூபா பணமும் வாங்கிக் கொண்டு கட்டுடைக்குச் சயிக்கிலில் புறப்பட்டார். ஆனால் அவர் கட்டுடை வந்து சேரவில்லை. மறுநாள் என் கணவரின் சடலத்தைத்தான் கண்டேன். எங்கள் குடும்பத்தின் ஒரே உழைப்பாளி எனது கணவர்தான். இனி நாம் என்ன செய்வோம்? [38].

## பரமேஸ்வரன் படுகொலை

அன்றிரவு கோப்பாயைச் சேர்ந்த திரு.சு. சுப்பிரமணியம் பரமேஸ்வரன் என்பவரும் துப்பாக்கிச் சூட்டிற்கு அவமே பலியானார். திரு. பரமேஸ்வரன் ஒரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தராவர். 27 வயது நிரம்பிய இளைஞர். கோப்பாய்

வடக்கில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகக் கடமை புரிந்தார். அவருக்கு மூன்று விவாகமாகாத சகோதரிகளும், இரு சகோதரர்களுமுள்ளனர். திரு. பரமேஸ்வரனின் படுகொலையினால் அக்குடும்பம் நிலைகுலைந்து தவிக்கிறது.

திரு. சு. பரமேஸ்வரனின் இறந்த உடல் அத்தியார் இந்துக் கல்லூரிப் பக்கமாகத் திரு. ஞானேஸ்வரன் வீட்டுக்கு அருகில் கிடந்தது. கால் நீட்டியவாறு முகம் குப்புறக் கிடந்த சடலத்தின் வலது தோள் மூட்டுப் பக்கத்தில் குண்டு பாய்ந்திருந்தது. [39]

யாழ்ப்பாணம் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் திரு. சு. பரமேஸ்வரனின் மரணம் குறித்து மரண விசாரணை நடந்தது. அப்போது கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் காவலாளியாகக் கடமையாற்றும் திரு. பரம்சோதி குணசீலன் பின்வருமாறு சாட்சியமளித்தார்.


"........ சம்பவ தினம் இரவு 8 மணியளவில் நான் அலுவலகத்தில் வெளிக்கேற்றைப் பூட்டச் சென்றேன். அதற்கு முன்னாலேயே பருத்தித்துறை வீதி உள்ளது. அங்கு சென்றபோது யாரோ ஒருவர் பருத்தித்துறை வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது யாழ்ப்பாணப் பக்கமிருந்து ஜீப் வண்டி ஒன்று வந்தது. நடந்து சென்றவரை ஒழுங்கைக்கு அருகில் வைத்துக் கூப்பிட்டனர் அவர்கிட்டச் சென்றபோது ஜீப்பிலிருந்து இறங்கிய இருவர் அவரைக் கையில் பிடித்துத் தூக்கி ஜீப்பில் ஏற்றினார்கள். ஏற்றியபின் ஜீப் வண்டி திரும்பவும் பருத்தித்துறை வீதியில் சென்றது..... அவ்வாறு ஜீப்பில் தூக்கிச் செல்லப்பட்டவர் பரமேஸ்வரன் என்பதைப் பின்பு நான் அறிந்தேன்........"[40]

மறுநாள் அதிகாலையே திரு. பரமேஸ்வரனின் குடும்பத்தவருக்கு அவர் படுகொலையுற்ற செய்தி தெரிந்தது. மகன் மரணமான செய்தியைக் கேள்வியுற்ற திருமதி. சு. வள்ளியம்மாவின் சித்தம் கலங்கி விட்டது. "மிகப் பெரிய அவலம்! ஆபத்து! எல்லாம் போச்சு"' என்று அவர் புலம்புவது பரமேஸ்வரனைச் சாகடித்த அந்தக் கயவர்களுக்குக் கேட்கவா போகிறது?

## காங்கேசன்துறையில் தீ வைப்பு

'.......3 ஆம் திகதி இரவு ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தது. அன்று இரவு சுமார் நூறு பொலீசார் காங்கேசன்துறையில் வரிசையாக இருந்த கடைகள் அனைத்தையும் கொள்ளையடித்தபின் இவற்றைத் தீ வைத்துக் கொளுத்தினர். அவற்றில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் திரு. பாலமூர்த்தி என்பவருடையதாகும். [41]

காங்கேசன்துறையில் செல்லையா அன் பிறதர்ஸ் கடைக் கட்டிடங்கள் இரண்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. கூரை முற்றாக எரிந்து போனது. அக்கடைக்குள் இருந்த சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான பல்வகைப் பொருட்களும் எரிந்து அழிந்தன. அக் கடைக்சுவரில் யாரோ எப்போதோ எழுதிவிட்ட சுவர்க்கவிதை பின்வருமாறு இருக்கிறது :



(ஆஸ்பத்திரி வீதியில் கொடூரமாகச் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்ட நியூ. கொழும்பு ஸ்ரோரும் ஈ. ஏ. பாய் கடைகளும்)

"நாமில்லா நாடில்லை
நமக்கோர் நாடில்லை
படைப்போம் தமிழ்நாடு!"

காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த விமலாஸ்ரூடியோ எரிக்கப்பட்டது. கடைக்குள் இருந்த தளபாடங்கள் புகைப்படக் கருவிகள் யாவும் எரிந்து போயின. அதே வீதியிலுள்ள 'லக்கி ஹவுஸ்'சும் தீயோரால் எரிக்கப்பட்டது. 'ஜோன்சன் ரெயிலர்' கடை உடைத்துச் சூறையாடப்பட்டதன் பின்னர் தீமூட்டப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இன்னமும் சேதாரங்கள் அன்றிரவு ஏற்பட்டிருக்கும் ஆனால் பொறுக்கமுடியாத பொதுமக்கள் பலர் ஒன்று கூடி, வெறியாட்டம் ஆடிய அக்கயவர்கள் மீது கற்களை வீசித் தாக்கியதால் அவர்கள் பின்வாங்கி ஓடிவிட்டார்கள் என்று கூப்படுகிறது.

## ஆனைக் கோட்டையில்



(மூக்குடைக்கப்பட்ட ஔவையார் சிலை)

'.......3-6-81 இரவு ஆனைக் கோட்டைப் பழைய பொலீஸ் ஸ்டேசனுக்கு அருகில், இரவு 8-45 மணியளவில் தங்கள் கடையில் கிருஷ்ண மூர்த்தி, அருள் என்ற இரு இளைஞர்கள் படுத்திருந்தனர். ஜீப்பில் வந்தவர்கள் துப்பாக்கி முனையில் இவர்களைத் தமது ஜீப்பில் ஏற்றுமாறு கட்டளையிட்டனர். இளைஞர்கள் அச்சத்துடன் ஜீப்பில் ஏறினர். இவர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட ஜீப், கிருஷ்ணமூர்த்தியைக் கோம்பையன் மணல் சுடலைக்கு அருகிலுள்ள பாலத்தடியில் இறக்கியது. அவர் இறங்கவே அவரை ஜீப்பிலிருந்தோர் சுட்டனர். கைகளிலும் தாடையிலும் குண்டு பாய்ந்த அவர் அருகிலிருந்த பாலத்திற்குள் குதித்துத் தப்பியோடினார். அருள் என்னும் இளைஞரை உடுவில் வயல்வெளியில் கொண்டு சென்று இறக்கி, அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே, அவர் கீழே விழுந்து விட்டார். அவர் இறந்து விட்டார் என்ற நினைப்பில் அவர்கள் சென்றுவிட்டனர். இவர்கள் இருவரும் மறுநாள் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.[42]

## அமிர் வருகை

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், இங்கு கொலைகள் நிகழ்ந்த இரவுதான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தார். அவருடன் அவர் துணைவியார் திருமதி மங்கையர்க்கரசியும் வந்தார்.

திட்டமிட்டபடி நாளை 4 ஆம் திகதி வியாழக்கிழமை, மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களை நாடெங்கும் நடத்துவதென அரசு ஊர்ஜிதம் செய்தது.

## ஐந்தாம் நாள்: 4, யூன், 1981

### தலைவர்கள் கைது

1981, யூன் 4ஆம் திகதி அதிகாலை 2–45 மணிக்கு, தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் கைது செய்யப்பட்டு பாலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

தான் கைதாகிப் பின்னர் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு நாடாளுமன்றத்தில் விபரித்தார்.

'..... அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடக்கவிருந்த 4 ஆம் திகதி அதிகாலை 2–45 மணியளவில் ஒரு உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன் இராணுவ உத்தியோகத்தர்கள், சங்கானை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் எனது வீட்டிற்கு வந்தனர். உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன் டெனோஸ்ட் மென்டிஸ், என்னைக் கைது செய்யப் போவதாகச் சொன்னார். நான் ஏன் என வினவினேன். "ஜனநாயக முன்னேற்றத்தைச் சீர்குலைக்கிறீர்கள் என்பதால் உங்களைக் கைது செய்யும்படி தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு உத்தரவிட்டார்." என அவர் பதில் அளித்தார், "எந்தச் சட்டத்தின் கீழ் அது குற்றமாகும்? என நான் வினாவினேன். அவர் தமக்கு அது தெரியாது என்றும் தமது கடமையைச் செய்ய அனுமதிக்குமாறும் சொன்னார்..... கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமிற்குக் கொண்டு வரப்பட்டோம்.

4ஆம் திகதி காலை 8.30 மணியளவில் தொலைபேசி மூலம் ஜனாதிபதியுடன் பேசினேன் அப்போது ஜனாதிபதி "அனைத்தும் தவறுதலாக நடந்துவிட்டது. உங்களை உடன் விடுதலை செய்யும்படி நான் உத்தரவிட்டேன். நடந்தவற்றிற்காக வருந்துகிறேன்" என்று சொன்னார். என்னைப் பாதுகாப்புக்குக் கைது செய்ததாக அப்போது ஜனாதிபதி என்னிடம் சொல்லவில்லை.

'எம்மைக் கைது செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டதில் கைத் தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரும் (திரு. சிறில் மத்தியூ) மகாவலி அபிவிருத்தி, காணி காணி அபிவிருத்தி அமைச்சரும் (திரு. காமினி திசநாயக்கா) பங்கேற்றிருந்தனர். இதை அவர்கள் ஏற்றாலும் மறுத்தாலும் இதுவே உண்மை.

'ஆறுமணி நேரம் தடுத்துவைக்கப்பட்ட பின் நான் செல்ல அனுமதிக்கப்பட்டேன். நாம் பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டோம் என்று ராஜாங்க அமைச்சு விடுத்த அறிக்கை தவறானது என்பதை ராஜாங்க அமைச்சர்

ஒத்துக்கொள்ள வேண்டும். வெளி உலகுக்குத் தவறான கருத்தைத் தெரிவிக்க முனையாதீர்கள். (ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் அது தவறானது என ஒப்புக் கொண்டார்)[43]

தமிழ்த்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கைது செய்யப்பட்ட அதே அதிகாலை வேளையில், நல்லூர்த் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் ஒரு படுகொலை விழுந்தது.


## பாலஜோதி சுடப்பட்டார்

நல்லூர் கூட்டணிக் காரியாலய விறாந்தையில் வைத்து திரு. வேலுப்பிள்ளை பாலஜோதி என்ற 24 வயது இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி, அதே அதிகாலையில் நிகழ்ந்து முடிந்தது. துப்பாக்கிக் குண்டுகள், அவரின் நெற்றியில் ஊடுருவியிருந்தன. திரு. பாலஜோதி அச்சுவேலி வளலாயைச் சேர்ந்தவர். திருகோணமலையிலுள்ள மாலுமிகள் பயிற்சி நிலையத்தில், மாலுமியாகப் பயிற்சி முடித்திருந்தார்.

".... மதிலால் ஏறிக்குதித்து உள்ளே வந்த இராணுவத்தினர் எம்மையே நோக்கிச் சுட்டனர். அதனால் பாலஜோதி நெற்றியில் சூடுபட்டு இறந்தார்" என, பாலஜோதியின் மரணவிசாரணையின்போது திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. க. சிவராசா சாட்சியம் அளித்தார். யாழ் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் இச்சாட்சியம் அளிக்கப்பட்டது. அவர் தொடர்ந்து பாலஜோதியின் மரணச் சம்பவத்தை விபரித்துள்ளார்.

".... இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரையின் ஆடியபாத வீதியில் அமைந்துள்ள இல்லத்திலுள்ள நல்லூர் எம். பி. யின் அலுவலகத்தில் கடந்த மூன்றாம் திகதி இரவு நானும் சிவதாசனும் இறந்த பாலா என்ற பாலஜோதியும் தங்கியிருந்தோம். 4 ஆம் திகதி அதிகாலை 2–15 மணியளவில் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது நல்ல தமிழில் இல்லாமல் கொச்சைத் தமிழில் நல்லூர் எம் பி. சிவசிதம்பரம் இருக்கிறாரா? என்று கேட்டார்கள். இல்லையெனப் பதில் அளித்தோம்.

'சுமார் அரைமணி நேரம் கடந்த பின்னர் சுவரேறிக்குதித்து மூன்று அல்லது நான்கு பேர் உள்ளே வந்தனர். இதனை அவதானித்த நான் "ஆமியடா" என்று கத்திக் கொண்டு பயத்தினால் ஓட, என் பின்னால் சிவதாசனும் பாலாவும் ஓடிவந்தனர். அப்போது இரு வெடிச்சத்தங்கள் கேட்டன. நான் ஓடி ஒளிந்து கொண்டேன். பின் அரைமணி நேரத்தின் பின் வந்து பார்த்தபோது பாலா தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு, அலுவலக வாசலின் முன்னுள்ள வெறும் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். தலையின் இடப்பக்கத்தில் காயம் இருந்தது. நெற்றியிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது'.[44]



(சுன்னாகத்தில் கொளுத்தப்பட்ட வரிசைக் கடைகள்)

'நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரத்துடன் இந்த விபரத்தைக் கூற முற்பட்டபோது அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிந்தோம். பின்னர் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் திரு. சண்முகராசாவுக்கும், யாழ்நகர முதல்வருக்கும் தகவல் தந்தோம்'.[45]

'4 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் பொலீஸ் அதிகாரிகள் வந்தனர். அப்போது சிவசிதம்பரம் எம். பி. யும் இருந்தார். இரண்டு வெற்றுத் தோட்டாக்களையும் சுவரில் பதிந்திருந்த இரண்டு சன்னங்களையும் பொலீசார் கைப்பற்றினார்'.[46]

'இச்சம்பவம் தொடர்பாக யாழ் நீதவான திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் சந்தேகத்தின் பேரில், இராணுவச் சிப்பாயான தெரணியாகலகே கல்யாண விமலசிறிபிரீஸ் என்பவர் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

## மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்

"... மே. 31 ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரின் கொலை மற்றும் சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகங்களைச் சேர்ந்த பொலீஸ்காரர்கள் துப்பாக்கிச் சூடுமூலம் காயங்கள் விளைவிக்கப்பட்டதன்

பின்னரும் பதட்டத்துடன் கூடிய குழப்ப நிலை யாழ்ப்பாணம் நகரில் நிலவுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குழப்பத்தை தோற்றுவிப்பதன் மூலம் அபிவிருத்திச் சபை தேர்தல்களை ஒத்தி வைக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இத்தகைய நடிவடிக்கையெதுவும் எடுக்கப்பட மாட்டாது. யூன் மாதம் நாலாம் திகதி நாடு பூராவும் தேர்தல்கள் நடைபெறும்'' என அரசு திடமாக அறிவித்திருந்தது. அதன் படி நாடெங்கும் அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான வாக்களிப்புக்கள் ஆரம்பமாயின.

யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தென்னிலங்கையில் இருந்து தேர்தல் கடமைகளுக்காக ஏராளமான உத்தியோகஸ்தர்கள் அனுப்பப்பட்டனர். "தேர்தல் கடமைக்காக 2000 முதல் 4000 உத்தியோகஸ்தர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் 300 பேர் மாவட்ட அமைச்சருக்கும், அரசாங்க அதிபருக்கும் மருத்துவ சான்றிதழ்களை அனுப்பிவிட்டு அங்கு போகாமல் நின்று விட்டனர்.'' [48]

"39 பஸ்களில் தேர்தல் உத்தியோகத்தர்கள் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டார்கள் அவர்கள் விரல்களுக்கு மை பூசுவதை தவிர வேறு ஒன்றும் அறிந்திருக்கவில்லை. [49]

யாழ்ப்பாணத்தில் தேர்தல் வேலைகளை சரி வரச் செய்வதற்கு போதிய ஊழியர்கள் இல்லையா? தமிழ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் கூட்டணி ஆதரவாளர்கள் என்ற அரசின் முடிவே இத்திடீர் ஊழியர் மாற்றத்திற்கு காரணம் என மாவத்தகம பா. உ. வும் பிரதி நெடுஞ்சாலைகள் அமைச்சருமான திரு. ஜீ. எம். பிரேமசந்திரா பகிரங்கமாக கூறியுள்ளார். [50]

வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களாகத் தென்னிலங்கையிலிருந்து வந்த சிங்கள உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டனர். ஆசிரியர்கள், விவசாய உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டனர். ஆசிரியர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், லிகிதர், கிராமசபைச் செயலாளர்கள், விற்பனை இலாகா கொள்முதல் உத்தியோகத்தர்கள், மின்சார போர்மன்கள் எனப் பலரும் நியமிக்கப்பட்டனர். அத்துடன் குருணாகல் கச்சேரியைச் சேர்ந்த இரண்டு பியோன்களும், சிரேஷ்ட அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். [51]

4ஆந் திகதி காலை 7 மணிக்கு யாழ் மாவட்டத் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் வாக்களிக்கச் சென்றனர். ஆனால் பல வாக்களிப்பு நிலையங்களில் தேர்தலை நடத்தும் அதிகாரிகள் வந்து சேரவில்லை. காலை 7 மணியிலிருந்து 10.30 மணிக்குள் பல வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்தில் இரவு 6 மணி முதல் மறுநாள் காலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் இருந்தது. அன்றிரவு இலங்கை முழுவதற்குமான அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. ஆனால்,

யாழ்ப்பாண மாவட்டத்தின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைச்சாமி, யாழ்ப்பாண மாவட்ட சபைக்கான தேர்தல் நடைபெற்ற போதிலும் சட்டப்பிரச்சனை காரணமாக அதன் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (பின்னர் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் யாழ் மாவட்டத் தேர்தல் முடிவுகள் 16, யூன் 1981 இல் அறிவிக்கப்பட்டன.) யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி (ஆளும் கட்சி) தமிழ்க் காங்கிரஸ், சோஷலிஷ முன்னணி முதலிய ஐந்து கட்சிகள் 10 இடங்களுக்குப் போட்டியிட்டன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி 10 இடங்களையும் ஒருங்கே கைப்பற்றிக் கொண்டது. இலங்கை முழுவதற்குமான 24 மாவட்டங்களில் 18 மாவட்டங்களை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் மாவட்டங்களான 6 மாவட்டங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கைப்பற்றிக் கொண்டன.



(சுன்னாகத்துச் சந்தைக் கோயிலை எரிக்க முயன்றதால் அருகிலுள்ள புளிய மரம் கருகிச் சாய்ந்துள்ளது)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் நிகழ்ந்தவை :

★ அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் வைத்தே வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்பதே நடைமுறை. ஆனால் 33 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படாமல் யாழ் கச்சேரிக்கு கொண்டு வரப்பட்டன. [52]

★ வேறு சில வாக்குப் பெட்டிகள் ஹோட்டல் ஒன்றுக்கும் கொண்டு செல்லப்பட்டன.[53]

★ சில வாக்குப் பெட்டிகள் காலம் தாழ்த்திக் கொண்டு வரப்பட்டன. சில வாக்குப் பெட்டிகள் அறவே வந்து சேரவில்லை.[54]

★ 6 வாக்குப் பெட்டிகளைக் காணவில்லை. [55]

★ புத்தூர் வஞ்சிப் புலத்துப் பெட்டியில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளிலும் பார்க்கக் கூடுதலான வாக்குச் சீட்டுக்கள் வாக்குப் பெட்டிக்குள் இருந்தன.

★ கைதடி குருசாமி வித்தியாசாலை, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை ஆகிய வாக்குப் பெட்டிகளில் யு. என். பிக்கே 90 வீதம் வாக்குகள் இருந்தன. [56]

★ ஆனைக்கோட்டை வாக்குப் பெட்டியில் 104 வாக்குகள் ஒரு கட்டாகப் போடப்பட்டிருந்தன; அதில் 100 வாக்குகள் யு. என். பிக்கும், 4 வாக்குகள் கூட்டணிக்கும் போடப்பட்டிருந்தன.

★ பலாலி வடக்கு அரசினர் தமிழ்ப் பாடசாலை வாக்குப் பெட்டியில் 1544 வாக்குகள் இருந்தன. ஆனால் அங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 1534 ஆகும்.

★ புன்னாலைக்கட்டுவன் அரசாங்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 950 பேர் வாக்களித்திருந்தனர். ஆனால் வாக்குப் பெட்டியில் 425 வாக்குகள் மட்டுமே இருந்தன. 500 வாக்குகள் மறைந்த போயின. [57]


## உணவுத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு வர்த்தக நிலையமும் திறக்கப்படாமையினால் யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு நிலவியது. நாடெங்கும் தீ வைப்பு, கொள்ளையிடுதல், படுகொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது எவர் தம் கடைகளைத் திறப்பார்? 'யாழ் மாவட்ட தேர்தல் கடமைகளுக்காக அனுப்பப்பட்ட 4000 ஊழியர்கள் அங்குள்ள கடைகள், ஹோட்டல்கள் மூடப்பட்டதால் சாப்பாட்டுக்காகப் பெரும் கஷ்டப்படவேண்டியிருந்தது. வர்த்தக அமைச்சர் அவசர அவசரமாகப் 10 ஆயிரம் உணவுப் பாசல்களையும் 10 ஆயிரம் இறாத்தல் பாணையும் சீனிச் சம்பலையும் இதர உணவு வகைகளையும் அனுப்பி வைத்தார். 58 வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய அதிகாரிகளுக்குத் தேவையான உணவுகளை அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர்களே வழங்கினர்.

# தலாவையில் தாக்குதல்

'கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் இடையே 3.6.81, 4.6.81 ஆகிய நாட்களில் ரயிலில் பயணம் செய்த தமிழர்கள், ஆண்களும் பெண்களும் அனுராதபுரத்துக்குப் அப்பால் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டதுடன், அவர்களது உடமைகளும் சூறையாடப்பட்டன'.[59] இந்த நாட்களில் புகையிரதங்களில் பயணம் செய்த தமிழ்ப் பயணிகள், தலாவையில் காடையர்களால் தாக்கப்பட்டனர். கத்திகளால் உடலில் கீறியும், இரும்புக் கம்பிகளால் முதுகில் அடித்தும், கைகளால் அடித்தும் இவர்கள் தாக்கப்பட்டனர். இவர்களின் பொருட்கள் யாவும் அச்சிங்களக் காடையர்களால் அபகரிக்கப்பட்டன.

நாச்சிமார் கோவிலில் 31 மே 1981, ஞாயிற்றுக்கிழமை சூட்டுக் காயங்களுக்கு உள்ளான பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் மூத்தமகன் திரு. க. லோகேஸ்வரன் 4ஆம் திகதி யாழ்தேவியில் கொழும்புக்குப் பயணமானார். 6ஆம் திகதி அவர் சவுதிஅரேபியாவுக்குத் தொழில் பார்ப்பதற்காகச் செல்லவிருந்தார். தந்தையின் உடல்நிலை தேறி வந்ததால் அவர் பிரயாணம் செய்ய நேர்ந்தது. தலாவையில் சிங்களக் காடையர்களால் அவர் தாக்கப்பட்டதுடன் தன்



(காங்கேசன் துறையில் தீக்கிரையான செல்லையா & பிறதேர்ஸ்)

பொருட்களையும் பறிகொடுத்தார். அவர் யாழ்தேவியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த அதேவேளை, யாழ் ஆஸ்பத்திரியில் சார்ஜன்ட் கனகசுந்தரம் காலமானார்.

## நாடெங்கும் அவசரகால நிலை

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவடைந்த அன்றே அரசு நாடெங்கும் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தியது. 4 யூன், 1981 மாலை 5 மணியிலிருந்து அவசரகால நிலை இலங்கை எங்கும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இரவு நேர ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இருந்தது.

வாக்களிப்பு முடிந்த பின் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சட்டத்தை அனுசரிக்கும் பொதுமக்களையும் பாதுகாப்பதற்கும் எல்லா அவசரகால ஒழுங்கு விதிகளும் எடுக்கப்படும் என அரசு அறிவித்தது.

ஆனால் அன்றிரவு யாழ்ப்பாண நகரத்தில், பண்ணையில் ஒரு பெரிய மீன்வாடியும் ஐந்து வீடுகளும் கயவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. பண்ணையில் திரு. ரி. கனகசிங்கம் என்பவருக்குச் சொந்தமான றால்வாடி தீயிட்டு அழிந்து போனது. தளபாடங்கள், பெட்டிகள் என்பன முற்றாக எரிந்து போயின. அதற்கு அருகிலிருந்த திரு. அ. தர்மலிங்கம், திரு. வே. நடராசா, திரு. மு. செல்லத்துரை, திரு. க. நடராசா, திரு. சூசைசிங்கம் ஆகியோரின் வீடுகளும் எரிக்கப்பட்டுச் சாம்பலாகின. வீட்டுத் தாழ்வாரத்தில் கட்டியிருந்த ஆடு ஒன்றும் கருகிச் செத்தது. கோழிக் கூட்டிற்குள் இருந்த கோழிகள் எரிந்து இறந்தன.

அதே தினம் இணுவிலில் சாராயக்கடை ஒன்று உடைத்துத் திறக்கப்பட்டது. இராணுவத்தினர் அதைச் செய்தனர் என்பது தெரிவிக்கப்படுகிறது. அதேபோல நெல்லியடியிலும் ஒரிரு கடைகள் எரிக்கப்பட்டுள்ளன.'[60] அச்சுவேலியிலும் இரு கடைகள் அன்று எரிக்கப்பட்டது.

## ஆறாம் நாளிலிருந்து .........

பொலீஸ் சார்ஜன்ட் திரு. க. கனகசுந்தரம் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். அவருக்கு வயது 49 ஆகும். (17.02.1932) பொலீஸ் சேவையில் 28 வருடமாக இருந்தார். அவர் மீசாலையைச் சேர்ந்தவர். 5 ஆண்மக்களும் 1 மகளுமுள்ளனர்.

"நீ ஒன்றுக்கும் பயப்படாதே...... நான் வீட்டிற்கு வந்து எல்லாம் சொல்கிறேன்" என தனது மனைவி திருமதி மகேஸ்வரியிடம், ஆஸ்பத்திரியில் திரு. கனகசுந்தரம் கூறியிருந்தார். கூற விரும்பியதைக் கூறாமலே அவர் காலமானார்.

(நாச்சிமார் கோவிலடியில் சூடுபட்டுப் பின்னர் மரணமான பொலீஸ் சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் மனைவியும் பிள்ளைகளும்)



'அவர் பூதவுடல் சனிக்கிழமை (6.6.81) பொலீசாரின் விசேஷ மரியாதைகளுடன் மீசாலை வடக்கு வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் ஜமீல் யாழ் மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிருட்ணர் ஆகியோரும் உயர் பொலீஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். 62 ஏறத்தாழ 600 பொலீசாரின் அணிவகுப்புகள், 36 மரியாதை வேட்டுக்களுடன் தகனக்கிரியைகள் நடந்து முடிந்தன.

'யாழ் அசம்பாவித சம்பவங்களையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்ந்து நடந்தது'.[63]

3ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு (3.7.81) ஒத்திவைக்கப்பட்டது. [64] யாழ் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் மாலை 7 மணியிலிருந்து காலை 5 மணி வரையாகத் தளர்த்தப்பட்டது.

தெல்லிப்பழையை நோக்கிக் கட்டுவனிலிருந்து ஒரு மோட்டார் சைக்கிலில் வந்த திரு. இ. ரஞ்சன், திரு. சி. கமலராசா என்ற இரு இளைஞர்கள் வருத்தலைவிளானில் பொலீசாரால் மறித்துத் தாக்கப்பட்டார்கள். 6ஆம் திகதி அதிகாலை 5.45 மணிக்கு இது நடந்தது. 11ஆம் திகதி இரவு சுன்னாகம் ஸ்ரேசன் வீதியிலிருந்த மூன்று கடைகள் கயவர்களால் தீமூட்டி எரிக்கப்பட்டன. திருமதி துரைச்சாமி மகாலட்சுமி என்பவருக்குச் சொந்தமான இம்மூன்று கடைகளும், எரிந்து நாசமாகின. திரு. ச. கந்தசாமி என்பவரின் சலூன், திரு. இ. தியாகராசா என்பவரின் பலசரக்குக் கடை, திரு. டேவிட் என்பவரின் பேக்கரி ஆகிய மூன்று கடைகளும் கொளுத்தப்பட்டன.

## நாடாளுமன்றத்தில் .......

9, யூன் , 1981 செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாண மாவட்டம் உட்பட நாடெங்கும் அமுலிலிருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. பத்திரிகைச் செய்திகள் மீதான தணிக்கையும் நீக்கப்பட்டது. அன்று பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. அதில் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது, வடக்கில் நிகழ்ந்த வன்செயலாகும். தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அப்பயங்கரச் சம்பவங்களை விபரித்தார். இறுதியில் .......

'இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தொடர்ந்து இவ்வாறும் இம்சிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. காலத்துக்குக் காலம் இப்படி நடந்து வருவதும், உரிய நடவடிக்கைகளின்றி அப்படியே தொடர்வதும் வழக்கமாகிவிட்டது.



(பாவிகளுக்குப் பலியான பாலஜோதி சுடப்பட்டுக் கிடக்கிறார்)

எதிர்காலத்தில் இத்தகைய துயரமான நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடாது என்பதற்காகப் பின்வரும் கோரிக்கைகளை எமது மக்களின் சார்பில் முன் வைக்கிறோம்.

1. மே, 31 ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களுக்குக் காரணமான பொலீசார் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அத்துடன் வடக்கிற்குக் கடமையாற்ற அனுப்பப்படும் பொலீசாரில் 75 சத வீதத்தினர் தமிழர்களாகவும் முஸ்லீம்களாகவும் இருக்க வேண்டும்.
2. பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்திச் சபைப் பிரிவிலும் உள்ளூர்ப் பாதுகாப்புச் சேவைகளை உருவாக்க வேண்டும்.
3. கொலை கொள்ளைகளுக்குப் பொறுப்பாயிருந்த இராணுவத்தினர் உடனடியாக வாபஸ் பெறப்படல் வேண்டும். வடக்கில் பாதுகாப்புகட்கு அவசியமான அளவு இராணுவத்தினர் மாத்திரம் முகாம்களில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
4. யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த அசம்பாவிதங்களையும், யாழ்ப்பாண மக்களின் மனித உரிமைகளுக்கு எதிராக நிகழ்ந்த வன்முறைகளையும், விசாரிப்பதற்குச் சர்வதேச மன்னிப்புச் சபை சர்வதேச நீதிச் சபை போன்ற சர்வதேச இயக்கங்களை அழைக்க வேண்டும். தெரிவுக் குழு விசாரணைக் கமிஷன்என்பவற்றில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. அவை பலவருட விசாரணையின் பின் கருச்சிதைவுக்கு உள்ளாகின்றன. விசாரணையின் பின் இச்சம்பவங்களால் பாதிப்புற்றவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டும்.
5. யாழ்ப்பாணச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சகல குழப்பக்காரர்களும் அடையாளம் காணப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்கும்வரை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற ஊறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பகிஸ்கரிப்பார்கள். நாம் ஏதாவது குற்றங்களைச் செய்திருந்தால் எம்மை விசாரணைக்கு உட்படுத்துங்கள். எந்த நீதிமன்ற விசாரணைக்கும் நாம் தயார். அதேவேளை தீவைத்த, கொள்ளையடித்த, கொலை செய்த பொலீசாரை அரசாங்கம் பாதுகாக்கக் கூடாது என்று 'அமிர்' குறிப்பிட்டார்.

காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா தனது பேச்சில், 'யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் யூன் முதல் வாரத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த சுமார் 200 பொலீசார் தாங்களாகவே வேலைகளையும் விட்டு விட்டு எங்கோ ஓடிவிட்டடார்கள்' என்று குறிப்பிட்டார்.

தமிழர் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் யூன் 12ம் திகதி அவசர விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா பயணமானார். அவர் இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இந்தியா முதலிய நாடுகளுக்குச் சென்றார். ஈழத்தில் நிகழ்ந்த வன்செயல்களை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவது அவரது நோக்கமாக இருந்தது. இந்த நாடுகளுக்கு விஜயம் செய்த தலைவர் யூலை 3 ஆம் திகதி நாடு திரும்பினார்.

## தமிழ் நாட்டின் குரல்........

'யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தை முதன்முதலில், தமிழ்நாடு கண்டித்துக் குரல் எழுப்பியது. தமிழ் நாட்டின் சர்வகட்சிக் கூட்டம் ஒன்று சென்னை மாநகர ஷெரிப் திரு. பி. எம். ரெக்ஸ் தலைமையில் நடந்தது. அ. தி. மு. க., தி. மு. க. ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சி, முற்போக்கு முஸ்லிம்லீக், காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் முதலிய கட்சிகள் கலந்து கொண்டன. யாழ்ப்பாண சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம், அ. தி. மு. க. செயலாளர் திரு. ப. உ. சண்முகம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. மாணிக்கம், தமிழக மேல் சபைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார் முதலியோர் யாழ்ப்பாண வன்செயல்களைக் கண்டித்துப் பேசினர்.'

'தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழர் துயர்துடைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வற்புறுத்தினார். தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் யாழ்ப்பாண அசம்பாவிதங்களை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கவனத்திற்குக் கொண்டுவந்தார். தமிழ் நாட்டின் சர்வ கட்சிகளும் வற்புறுத்தியதன் பேரில் ஈழத் தமிழர் நலன் காக்கத் தன்னாலான அனைத்தையும் செய்வதாக திருமதி இந்திராகாந்தி வாக்குறுதி அளித்துள்ளார்.[65]

இந்தியப் பத்திரிகைகள் யாழ்ப்பாண வன்செயல்களைக் கண்டித்தன. தினத்தந்தி, முரசொலி, மாலைமணி, மக்கள் குரல், தினகரன், மாலைமுரசு, தினமலர், எதிரொலி, இந்து முதலான பத்திரிகைகள் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பின. சென்னை இந்து பின்வருமாறு ஆசிரியத் தலையங்கம் தீட்டியது.

'எவ்வளவுதான் ஆத்திரமூட்டப்பட்டாலும் கூடப் பொலீசார் யாழ்ப்பாணத்தில் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதலிலும், அழிவு வேலையிலும் இறங்கியதை ஒருபோதும் மன்னிக்க முடியாது. பொலீசாரின் பயங்கரவாதம் யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்துவிட்டதற்கான பொறுப்பிலிருந்து இலங்கை அரசாங்கம் தான் தப்பிக் கொள்ள முடியாது. 19 பொலீசார் இதுவரை வடக்கிலே கொலை



(சுடப்பட்டுக் கொலையுண்ட தொழிலாளி திரு. க. சண்முகத்தின் சடலம்)

செய்யப்பட்டிருப்பதனால் ஆத்திரமூட்டப்பட்ட காரணத்தினால் பொலீசார் இவ்விதம் நடந்துகொண்டதாக அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் விளக்கம் கூற முற்பட்டாலும், சட்ட விரோதச் செயல்களில் யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டவர்கள் பொலீசாரே என்பதை அவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டார். [67]

## கண்டனங்கள் .......

'லண்டனில் தமிழ் விடுதலை வாதிகளால் யாழ்ப்பாண வன்செயல்களைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அவர்கள் ஆட்சேப மகஜர் ஒன்றை இலங்கைத் தூதரிடம் கையளித்தனர்'. [68] 'நியூயோர்க்கில் ஐக்கிய சபை

முன்னும் இலங்கைத் தூதரகத்தின் முன்னும் நூற்றுக்கு மேற்பட்டோர், ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமை குறித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தினர். 'ஈழத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பொலீஸ் பயங்கரவாதத்தை இலங்கை அரசே நிறுத்து' என்று கோரிக்கை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க ஈழத்தமிழர் இயக்கம், அமெரிக்காவிலுள்ள "ஸ்பாட்டா சிஸ்ட் லீக்" ஆகியன கலந்து கொண்டன'.[69] யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட அசம்பாவிதச் சம்பவங்களின்போது தமிழ் மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம், உயிரிழப்புகள், மற்றும் தீவைப்புகளுக்குக் கண்டனம் தெரிவித்து மேற்கு ஜேர்மனியில் உள்ள தலைநகரான பொன்நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். [70]

யாழ்ப்பாண வன் சம்பவங்களைக் கண்டித்து இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்குப் பிரித்தானிய எம். பி. க்கள் ஆட்சேபத் தந்திகளை அனுப்பி வைத்தனர். 'சிறைவைப்பதாகவும் கொலை செய்வதாகவும் எம்மீது குற்றஞ்சாட்டி பிரிட்டிஸ் எம். பி. க்கள் சிலரிடமிருந்து ஆட்சேபத் தந்திகள் எனக்கு வந்திருக்கின்றன. இங்குள்ள நிலைமையைப் பற்றித் தெரியாத இவர்களுக்கு நான் கூறுவது இதுதான்; "உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். எங்களைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்" என ஜனாதிபதி பதிலளித்தார். [71]

## உயர்மட்ட பொலீஸ் விசாரணை

யாழ்ப்பாணத்தில் கடந்த மே மாதம் **31**ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து சில நாட்களாக நடைபெற்ற தீவைப்புகள், தாக்குதல்கள், கொள்ளைகள், கொலைகள் முதலிய சம்பவங்களை விசாரிப்பதற்கு யூன் **12**ஆம் திகதி உயர்மட்டப் பொலீஸ் விசாரணைக் குழு அனுப்பப்பட்டது. அக்குழுவிற்கு பிரதிப் பொலீஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். அவருடன் பதினைந்து பொலீஸ் அதிகாரிகள் விசாரணைக் குழுவில் அங்கம் வகித்தனர். அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்சம்பவங்கள் நிகழ்ந்த இடங்களுக்குச் சென்று நேரில் பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள், இந்த விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளித்தனர்.

பொலீஸ் விசாரணையின் பயனாக, யாழ்ப்பாணத்தில் ஐந்து பொலீசார் உடன் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். 'ஜூன் **1**ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் ஏராளமான வீடுகள் கட்டிடங்கள் முதலியவை தீயிடப்பட்டதற்கும், சேதப்படுத்தப்பட்டதற்கும் இந்த ஐவருமே பின்னணியாக இருந்ததாகக் கருதப்படுகிறது. [72] 'யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக



(உரும்பராயில் சுடுபட்டுக் கொலையுண்ட திரு. கணபதிப்பிள்ளை சண்முகத்தின் பரிதாபத்துக்குரிய குடும்பம்)

பொலீஸ் விசாரணைக்குழு, உதவிப் பொலீஸ் அதிபர் தர்மஸ்ரீ வீரக்கோன், தலைமையக இன்ஸ்பெக்டர் திரு.லலித் குணசேகரா ஆகிய பொலீஸ் அதிகாரிகளை 12 மணி நேரமாக விசாரித்தது.[73] மேலும் ஏழு உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள், மூன்று சார்சன்டுகள் உட்பட முப்பது பொலீசார் யாழ்ப்பாணப் பகுதிப் பொலீஸ் நிலையங்களிலிருந்து உடனடியாக வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.[74] 'காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலீஸ் கான்ஸ்டபிள்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டனர்.[75] 'மேலும் நடந்த விசாரணைகளின் பயனாக மேலும் 8 பொலீசார் காங்கேசன்துறையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டனர்![76] யாழ். வன்செயல்கள் குறித்த பொலீஸ் விசாரணைகளை அடுத்து சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பரணகே, சப்இன்ஸ்பெக்டர் ஜயதிலக, சார்ஜண்ட் ஒருவர், இரு

கான்ஸ்டபிள்கள் ஆகியோர் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்'[77] வடபகுதியில் நடைபெற்ற அசம்பாவிதச் சம்பவங்களின்போது 150 பொலீஸ் உயர் அதிகாரிகளின் உத்தரவை மீறியுள்ளார்கள் எனப் பொலீஸ் தலைமையகத்துக்குக் கிடைத்த அறிக்கைகளில் இருந்து தெரிய வருகிறது. [78] அத்துடன் 'அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களின்போது சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றியவர்களெனக் கூறப்படும் ஆறு பொலிசார் தலைமறைவாகியுள்ளனராம். இவர்களைக் கண்டுபிடிக்க உதவுமாறு நாடெங்குமுள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இவர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களைப் பொலீஸ் தலைமையகம் அனுப்பி வைத்துள்ளது. இவர்கள் தங்கள் சொந்த இல்லங்களிலும் இல்லையென அறிவிக்கப்பட்டிருக்கிறது.[79] 'இவர்களில் ஒரு உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜன்ட், இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள், ஒரு பொலீஸ் சாரதி ஆகிய ஐவர் அடங்குவர்.'[80]

## மேலும் இரு கொலைகள் ......

உயர்மட்டப் பொலீஸ் விசாரணை சுன்னாகத்திலும் நடைபெற்றது. உதவிப் பொலீஸ் அதிகாரிகளான திரு. பெனட்பெரேரா, திரு. ஸ்டீபன் ஆகியோர் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் திரு. சர்வானந்தன், திரு. வீரக்கோன், திரு. ஞானப்பிரகாசம், திரு. கிருஷ்ணராசா ஆகியோர் விசாரணை செய்தனர்.

"சுன்னாகத்தில் 68 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. 59 தீவைப்பு கொள்ளைச் சம்பவங்களும், 9 வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. வன்முறைச் சம்பவங்களின் போது கை, கால் பாதிக்கப்பட்டவரும் அடங்குவர். 4 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.[81] கொலை செய்யப்பட்ட நான்கு பேரில் கோப்பாய் திரு. பரமேஸ்வரன் நீர்வேலி திரு. க. சண்முகம் இருவரும் அடங்குவர். சுன்னாகம் பொலீஸ் பிரிவில் இவர்களுடன் வேறிருவரும் கொல்லப் பட்டார்கள். அவர்களில் ஒருவர் திரு. நவரத்தினம். மற்றவர் திரு. அத்தபத்து என்பவர்.

(பாவிகளால் சுடப்பட்டு அவமே உயிர் நீத்த கோப்பாய் தி ந. சு. பரமேஸ்வரன்)



'யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் நடந்த நாட்களில் சுன்னாகம் பொலீஸ் பகுதியில் திரு. நவரத்தினம் என்பவர் அடித்துக் கொல்லப்பட்டார். அத்தபத்து என்பவரும் கொல்லப்பட்டார். நவரத்தினமும் அத்தபத்துவும் கொல்லப்பட்டது சம்பந்தமாகக் கிடைத்திருக்கும் துப்புகள் மூலம் ஒரு கோஷ்டியினர் ஒரே ஜீப்வாகனத்தைப் பாவித்துக் காரியத்தை முடித்திருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.[82]

வடபகுதியில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக பொலீஸ் விசாரணைக் குழுவினர் சுமார் 400 பேரை விசாரணை செய்து, வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். யாழ்ப்பாணப் பகுதியில் சுமார் 275 கட்டிடங்களுக்குச் சேதமேற்பட்டிருக்கிறது. அத்துடன் சுமார் ஐம்பது வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் ஆறு கோடி ரூபா பெறுமதியான கட்டிடங்கள் வாகனங்கள் என்பன அழிந்துள்ளன. [83]

## திடுக்கிடும் சில விபரங்கள்

உயர் மட்டப் பொலீஸ் விசாரணைக் குழுவின் முன் சாட்சியம் அளித்தவர்கள் தங்களுக்கு நேர்ந்த அவலங்களையும் சேதங்களையும் விபரித்தனர்.

'யாழ்ப்பாணம் பொது நூல் நிலையம் தீயிடப்பட்டு எரிவதாகத் தகவல் எட்டியதும் நாம் அங்கு சென்றபோது பொலீசார் பின்மதிலால் ஏறிக் குதித்து அப்பால் போனார்கள். அதேசமயம் அவ்விடம் வந்து சேர்ந்த இராணுவத்தினர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றதுடன், நூல்நிலையக் கண்ணாடி யன்னல்களை நோக்கிக் கற்களை வீசினார்கள்' என யாழ் மாநகராட்சி மன்றக் காவலாளி திரு. ப. விக்னேஸ்வரன் விசாரணைக் குழு முன்னர் சாட்சியம் அளித்தார். [84]

'இரவு 9.15 மணியளவில் வெளிநோயாளர் வைத்தியசாலையில் நான் நின்று பார்த்தபோது உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருடன் வந்த சுமார் 100 பேர் எனது ஹோட்டலை வெடிவைத்துத் தகர்த்துத் தீயிட்டனர். உதவி இன்ஸ்பெக்டரிடம் அப்போது துவக்கு இருந்தது. ஏனையோர் குண்டாந்தடியும் வேறு ஆயுதங்களும் வைத்திருந்தனர்..... இதே சமயத்தில் வெளி நோயாளர் வைத்தியசாலையில் யாழ்–மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், பொலீஸ் இன்ஸ்பெக்டர்களான திரு. ஸ்ரீதரன், திரு. கிருஷ்ணராஜா ஆகியோரும் இருந்தனர். நான் மாவட்ட அமைச்சரிடம் போய் இதைப்பற்றி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும் சொன்னேன். அவரோ அங்கிருந்த ஏனையோரோ அதில் தலையிடாமல் இருந்து விட்டனர்.' என யாழ் ஆஸ்பத்திரி விதியிலுள்ள குட்லக் ஹோட்டலின் காசாளர் திரு. கே. எஸ். நாதன் சாட்சியம் அளித்துள்ளார். [85]

1ஆம் திகதி இரவு நான் மைலன்ஸ் மேல்மாடியில் தங்கியிருந்தேன். இரவு 2.30 மணியளவில் சத்தம் கேட்டது. எழுந்து பார்த்தபோது எனது கடைக்கு முன்னால் 150 பேர் போனார்கள். கடையை உடைத்து உள்ளே சென்றார்கள். கடைக்குள் இருந்த சாமான்களை எடுத்து வெளியில் நின்றவர்களிடம் கொடுத்தார்கள். சிறிது நேரத்தில் 31 ஸ்ரீ 3144 இலக்கமுள்ள பச்சைநிற ஜீப்வண்டி என் கடைப்பக்கம் வந்தது. அந்த ஜீப்பிலிருந்து பெற்றோல் எடுக்கப்பட்டது. அந்தப் பெற்றோலை எனது கடைக்கு ஊற்றினார்கள். அதன்பின் தீ வைத்தார்கள்' என யாழ்ப்பாணம் ரஜனி ரேடர்ஸ் உரிமையாளர் திரு. த. பாலசிங்கம் பொலீஸ் விசாரணைக் குழுவிடம் சாட்சியம் அளித்தார்.

## ஜனாதிபதி உரை

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் குறித்து, யூன் 25ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான பொதுநல அரசு நாடுகள் பாராளுமன்றச் சங்கத்தின் சர்வதேச கருத்தரங்கில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தமது சிறப்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டார் :



(கழுத்துடன் உடைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை)

'இன்று எமது நாட்டில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் ஜனாதிபதி ஆட்சிமுறையும் நிலவுகிறது. அடிப்படை உரிமைகளுக்கும் உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளன. இந்த ஜனநாயக உரிமைகள் எமது நாட்டில் உண்டு. ஸ்திரமான ஆட்சி முறை இங்கு நிலவுகிறது.

இங்கு பிரதிநிதிகளாகப் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்துள்ள நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம்.

எவரையும் சந்திக்கலாம்.

எதனையும் வாசிக்கலாம். எம்மைப் பொறுத்தவரை எந்தவொரு தடையும் கிடையாது.

பிரித்தானிய பாராளுமன்றமான பொதுமக்கள் சபையே "பாராளுமன்றங்களின் தாய்" என்று வர்ணிக்கப்படுகிறது.

இச்சபைப் பிரதிநிதிகள் சிலரிடமிருந்து எனக்கு ஒரு கட்டுத் தந்தி கிடைத்துள்ளது.

இப்பிரதிநிதிகள் எம்மைக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சிலரைக் கொலை செய்ததாகவும் சிலரை சிறை வைப்பதாகவும் இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். சட்டத்தின் வழமையான நடை முறையின் கீழ் தண்டனை பெறுவோர் குறித்தும் இவர்கள் ஆட்சேபனை தெரிவித்து எம்மீது குற்றஞ்சாட்டியுள்ளனர். இவர்களுக்குத் தாம் பேசுவது என்னவென்பது தெரியவில்லை. ஒன்றும் தெரியாமல் பேசுகின்றனர்.

இந்நாட்டிலுள்ள 24 மாவட்டங்களில் யாழ்ப்பாணம் ஒரு மாவட்டம். அம்மாவட்டத்தில் கடந்த சில காலமாக 300 வன்செயல்கள் நடைபெற்றுள்ளன. கொலைகள், கொலை முயற்சிகள், கடத்தல்கள், கொள்ளைகள், நாசவேலைகள், மிரட்டல்கள் என்ற ரீதியில் இச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

16 பொலீஸ்காரர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். கோழைத்தனமான முறையில் தலையிலும் உடலின் பின்புறத்திலும் இவர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள். பயங்கரவாதிகள் சிலரின் வேலை இது.

இந்நிலையில் இத்தகைய பயங்கரவாதத்தை எதிர்நோக்க நாம் சில விசேட சட்டங்களை ஆக்கினோம். பிரித்தானியப் பாராளுமன்றம், கனடா பாராளுமன்றம், அவுஸ்திரேலிய பாராளுமன்றம் ஆகியன ஆக்கிய பயங்கரவாதத் தடைச் சட்டங்களின் அடிப்படையிலேயே இந்தச் சட்டங்களை உருவாக்கினோம். பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தக் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டுப்படுத்தவே இச்சட்டத்தை ஆக்கினோம்.

சில வாரங்களுக்கு முன் எமது நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட அமைப்பான மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு நாடளாவிய முறையில் தேர்தல் நடந்தது. 24 மாவட்டங்களுள் 23 மாவட்டங்களில் பிரச்சனை எதுவுமிருக்கவில்லை. யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரை 425 வாக்குச் சாவடிகள் உண்டு.

அம்மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை பிரிவினை வேண்டுமென்று கோரி நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி அம்மாவட்டத்தின் 10 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. கூட்டணியின் வெற்றியினை நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். அவர்கள் எமது அபிவிருத்திப் பணியில் முழுமையாக ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடக்க இருந்த ஒரு வாரத்தின் முன் எமது ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளரான ஒரு தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டார். தேர்தலுக்கு நான்கு நாட்களுக்கு முன் தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் கூட்டமொன்றில் கடமையிலீடுபட்டிருந்த நான்கு பொலீஸ்காரர் ஒரே வாங்கின் மீது உட்காரவைத்துச் சுடப்பட்டிருக்கிறார்கள். இதனால் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பொலீஸ்காரர் ஸ்தலத்திலேயே மரணமானார். இரு நாட்களின் பின் ஒரு தமிழ் பொலீஸ்காரர் மரணமானார்.

இதையடுத்து யாழ்ப்பாண நகரில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. கடைகள் எரிக்கப்பட்டன. கட்டடங்கள் சேதமாகின. வன்செயல்கள் நடந்தன. இவற்றை யார் செய்தார்கள்? என்பதைக் கண்டறிய விசாரணை ஒன்று நடைபெறுகிறது. பயங்கரவாத வன்செயல்கள் புரிவோர் மீதிருந்து என் கரங்களை அகற்றும்படி பிரித்தானிய எம். பி. க்கள் என்னைக் கோருகிறார்களா? அதற்கான இத்தந்திகளை அனுப்பியிருக்கிறார்கள். பிரித்தானிய எம். பி. க்களுக்கு நான் சொல்வேன். உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். பிரிட்டனிலேயே நிறையப் பிரச்சனைகள் உண்டு. 'அல்ஸ்டர்' பிரச்சனை இருக்கிறது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு வேறு முக்கிய வேலைகள் இருக்கும் என்று



(சுன்னாகம் பொலீஸ் பகுதி வீதியில் கொலை செய்யப்பட்ட திரு. நவரத்தினம்)

நம்புகிறேன். எம்மைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று இங்கு வந்துள்ள பிரித்தானியப் பிரதிநிதிகள் இதுபற்றி அங்கு போய்த் தமது சகாக்களுக்குச் சொல்ல வேண்டும். இது எனது விருப்பம்.

இங்கு நடக்கவிருக்கும் கருத்தரங்குகளில் இதுபற்றி இங்குள்ள எம். பி. க்கள் எமது அமைச்சர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஐம்பது ஆண்டு சர்வசன வாக்குரிமையை அனுபவித்துள்ள நாம் இன்னும் ஐம்பது ஆண்டுகள் வாக்குரிமையை அனுபவிக்க விரும்புகிறோம்.'

## இடதுசாரிக் கட்சிகளின் கண்டனம்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, வடக்கில் இடம்பெற்ற வன்செயல்களைக் கடுமையாகக் கண்டித்தது. தலைவர் திரு. பீட்டர் கெனமன், யாழ்ப்பாணம் வந்து, நிகழ்ந்த அனர்த்தங்களின் விளைவுகளைப் பார்வையிட்டார். 'ஒரு பகை நாட்டிடம் இருந்து ஆக்கிரமித்த பிரதேசமாக யாழ்ப்பாணத்தை அரசாங்கம் கருதுகிறது. அந்த எண்ணம் மாறும்வரை அங்கு அமைதியை ஏற்படுத்த முடியாது. தனிப்பட்ட பயங்கரவாதிகளைத் தண்டிப்பதற்காக, இப்படியான கூட்டுப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தனிப்பட்ட பயங்கரவாதத்திற்குத் தீர்வு கண்டு விடமுடியாது. இதனை அரசாங்கத்தினரும் பாதுகாப்புப் படையினரும் உணர வேண்டும். யாழ்ப்பாணத்தில் நிகழும் தனிப்பட்ட வன்செயல்களைக் கண்டிக்கிறோம். ஆனால், அத்தகைய வன்செயல்களை ஒடுக்க அரசு கூட்டு வன்செயல்களை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது'[88] எனக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

நவ சமசமாசக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவா நாணயக்காரா, 'யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை எரித்தது மிகவும் காட்டுமிராண்டித் தனமான செயலாகும். போர்த்துக்கேயரின் கீழ்த்தரமான ஆட்சிக் காலத்தின் பின்னர், அண்மைக் கால வரலாற்றில் இதைப் போன்ற ஒரு செயல் என்றுமே நடந்ததில்லை'[89] எனக் கண்டித்துள்ளார்.

## சாவகச்சேரி எம். பி. நவம்

பொதுநலவரசு நாடுகளின் பாராளுமன்றச் சங்கத்தின் சர்வதேசக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக 43 நாடுகளிலிருந்து சமார் 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வந்திருந்தனர். அவர்கள் விசேட புகைவண்டியில் கண்டிக்குப் பயணமானபோது அவர்களுடன் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என் நவரத்தினமும் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த அபிவிருத்திச் சபைத் தேர்தலில் இடம்பெற்ற ஒழுங்கீனங்களைப் பற்றிய துண்டுப் பிரசுரங்களையும், யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வன்செயல்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்களையும் திரு. வி. என். நவரத்தினம் அவர்களுக்கு விநியோகித்ததுடன், விளக்கமும் கொடுத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் பத்துப் பேரின் கையெழுத் துக்களுடன் அத்துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் ``Yarl People's League'' வெளியிட்ட ``State Terrorism in Jaffna'' என்ற துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. ஒரு ரயில் பிரயாணத்தின் மூலம், 43 நாடுகளுக்கு வடஇலங்கையின் வன்செயல்களின் உண்மை நிலையை விளங்க வைக்கத் திரு. நவரத்தினத்தால் முடிந்தது. இது அவரால்தான் முடியும்.

வவுனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம், 'துப்புத்துலக்கிக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கூட்டில் நிறுத்தத் திராணியற்ற பொலீசார் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்களை அடித்து உதைத்து வதைக்கிறார்கள். இவற்றை எவ்வளவு காலம்தான் பொறுக்கமுடியும்?'[90] என்று கலங்கினார்.

எல்லாம் முடிந்துவிட்டன.

மீண்டும் யாழ்ப்பாணம் எரிக்கப்பட்டு விட்டது. எரிந்தவை அணைந்து விட்டன. ஆனால் தமிழ் மக்களின் இதயங்களில் கொழுந்து விட்டெரியும் தீ இப்போது ஓங்கி எரிந்து கொண்டிருக்கிறது!

காங்கேசன்துறைச் சுவர்க்கவிதைதான் நினைவு வருகிறது.

நாமில்லா நாடில்லை
நமக்கோர் நாடில்லை
அமைப்போம் தமிழ்நாடு !........

★ ★ ★

# மேற்கோள் ஆதாரங்கள்

இல. 1, 2, 4, 10, 14, 15, 17,18, 32 சம்பந்தப்பட்டவர்கள் ஆசிரியருக்குக் கூறியவை.

இல. 3, 9, 11, 12, 19, 21, 23, 26, 28, 31, 33, 41, 43,49, 60 – எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பேசியவை: தினபதி – 11.06.81.... வீரகேசரி – 11. 06.81 சிலோன் டெயிலி நியூஸ் – 11.06.81.

இல. 5 – சார்ஜன்ட் புஞ்சிபண்டாவின் மரண விசாரணையின்போது டாக்டர் திருமதி ரஞ்சினி ராஜராஜேஸ்வரி அறிக்கை.

இல. 6 – சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் மரணவிசாரணையின் அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் அறிக்கை.

இல. 7 – பிரதமரின் நாடாளுமன்ற உரையில் தினபதி 18.06.81.

இல. 8 – சார்ஜன்ட் புஞ்சி பண்டாவின் மரண விசாரணையில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. குமாரசாமி கிருஷ்ணதாசனின் சாட்சி.

இல. 13 – திரு. ஆர். சிறீதரன், பொலிஸ் விசாரணைக் குழு முன் வழங்கிய அறிக்கை.

இல. 16, 24 – வீரகேசரியில் யாழ் நிருபர் எஸ். செல்லத்துரை வீரகேசரி 2.6.81

இல. – 17A 20, 42, 50, 59,66, 67, 68, 69 சுதந்திரன் இதழ்களில் வெளிவந்தவை.

இல. 19A பொலீஸ் விசாரணைக் குழு முன் திரு. வி. திருஞான சம்பந்தர் அளித்த சாட்சியம்.

இல. 19B – பொலீஸ் விசாரணைக் குழுவில் திரு. க. மதியாபரணம் அளித்த சாட்சியம் 'ஈழநாடு' 20.6.81

இல. 22 – பாராளுமன்றத்தில் திரு. வெ. யோகேஸ்வரன்.

இல. 25 – பொலிஸ் விசாரணைக் குழுவிடம் திரு. எஸ். கணேசன் அளித்த சாட்சியம் 'ஈழநாடு' 20.6.81

இல. 27 – மாநகர சபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் பொலீஸ் விசாரணைக் குழுவிடம் கூறியவை 'ஈழநாடு', 'தினபதி'

இல. 29 – ஈழநாடு 11.6.81 இதழில் 'ஊடுருவி'

இல. 30 – பொலீஸ் விசாரணைக் குழுவிடம் ஈழநாடு ஊழியர் திரு. சச்சிதானந்தன் அளித்த வாக்குமூலம் ஈழநாடு 20.6.81

இல. 34 – யாழ் நிருபர்கள் திரு. கே. அரசரெத்தினமும், திரு. பி. இராசரத்தினமும் 'தினபதி' 2.6.81

இல. 35, 36, 53, 61, 62, 63, 64,70, 71, 79, 82, 84, 85, 87, 88 'வீரகேசரி' இதழில் வெளிவந்தவை.

இல. 37 – திரு. க. சண்முகத்தின் மரண விசாரணையில் டாக்டர் சரவணபாவனந்தன் அளித்த சாட்சியம் 'வீரகேசரி' 16.6.81

இல. 38 – திருமதி ச. இராசலட்சுமி சாட்சியம் 'தினபதி' 16.6.81

இல. 39 – திரு. பரமேஸ்வரனின் மரண விசாரணையில் திரு. ஞானேஸ்வரன் அளித்த சாட்சியம் 'வீரகேசரி' 17.6.81

இல. 40 – மரண விசாரணையில் கோப்பாய் உ. அ. அ. காரியாலயக் காவலாளி திரு. ப. குணசீலன் அளித்த சாட்சியம் 'வீரகேசரி' 17.6.81

இல. 44, 45, 46 – திரு. பாலசோதியின் மரண விசாரணையின் போது திரு. க. சிவராசா அளித்த சாட்சியம் 'வீரகேசரி', 'தினபதி' 11.6.81

இல. 47, 51, 52, 55, 56, 57, 65, 72, 75, 76, 77, 80, 81, 86, 89,90 'ஈழநாடு இதழ்களில் வெளிவந்தவை.

இல. 48 – பாராளுமன்றத்தில் அமைச்சர் திரு. காமினி திசநாயக்க 'தினபதி' 11.6.81

இல. 58 – ஜனாதிபதி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தவை 'வீரகேசரி' 11.6.81

இல. 73, 74, 78, 83, 'தினபதி' இதழ்களில் வெளிவந்தவை.

---

## ஒரு பொறி

1977 பொதுத் தேர்தலையும் இனக் கலவரத்தையும் தொடர்ந்து பொங்கி எழுந்த தமிழ் ஈழ உணர்ச்சித் தீ, சமீப காலங்களில் சற்றே அடங்கிவிட்டது போன்ற ஒரு நிலை ..... 'மாவட்ட அபிவிருத்திச் சபைகள்' என்ற பேச்சு வந்தபோது, அது தமிழ் ஈழ உணர்ச்சித் தீயிலே தண்ணீரை ஊற்றி விடுமென்ற சில தீவிரவாதிகளின் அச்சம் .......

இந்த நிலையிலேதான் –

தீ அணைந்து விடக் கூடாதென்று யாழ்ப்பாணத்திலே சில 'புண்ணியவான்கள்' சிரமதானம் செய்திருக்கிறார்கள்.

இன்று, யாழ்ப்பாணமென்ன, தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் தீ கொழுந்து விட்டு எரிகிறது!

இந்த வேள்வித் தீயை அணையாமல் காப்பதற்கு மீண்டும் அந்தப் 'புண்ணியவான்கள்' இங்கு வரவேண்டாம் – வரக்கூடாது!

எமது தலைவர்களே சரியான வழியில் இப்பரிசுத்த தீயை விளாசி எரியச் செய்வார்களென நம்புவோம்.

– வரதர் –



கோப்பாய் திரு. பரமேஸ்வரனைத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலிகொடுத்துப் பரிதவிக்கும் தாய்.

மீண்டும்
**யாழ்ப்பாணம் எரிகிறது!**
நீல வண்ணன்

1981 மே, 31, இரவு, யாழ். நாச்சிமார் கோயிலடியில் ஆரம்பித்து, யாழ். நகரெங்கும் பரவிய நெஞ்சு கொதிக்கும் வன் செயல்கள், – கொலைகள், கொள்ளைகள், தீவைப்புகள் – அவை பற்றிய விசாரணைகள், அபிப்பிராயங்கள் எல்லாவற்றையுமே வரிசைக் கிரமமாக, விளக்கமாக, விபரித்துத் தமிழ் நெஞ்சங்களைக் கொதித்து எரிய வைக்கிறது இந்நூல்.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.